வாழ்க்கை வரலாற்று வரிசை

தியாகராஜர்

தியாகராஜர்

பேராசிரியர்

பி. ஸாம்பமூர்த்தி

தமிழாக்கம்

லா. சு. ரங்கராஜன்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

புது டெல்லி

1968 (*Saka* 1890)
Reprinted 1985 (*Saka* 1907)

© பி. ஸாம்பமூர்த்தி 1967

Rs. 7.25

TYAGARAJA

BY

PROF. P. SAMBAMOORTHY

(*Tamil*)

Published by the Director, National Book Trust, India, A-5 Green Park, New Delhi-110016 and printed at Saraswati Art Printers, 8247/2 New Anaj Mandi, Delhi-110006

முதல் பதிப்பின் முன்னுரை

தொன்றுதொட்டு நமது நாடு ஒவ்வொரு து யிலும் தவப்புதல்வர்களை ஈன்று வந்துள்ளது. இலக்கியம், அரசியல், விஞ்ஞானம் முதலிய றின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றிய மே கள் பலர் பாரத சரித்திரத்திலே தோன்றியு னர். அவர்களுள் சிலரின் பெயரும் புகழும் முழுவதும் பரவியுள்ளன. மற்றும் பலரைப் அனேகர் கேள்வியுற்றிருப்பினும், அவர்க வாழ்க்கை வரலாறும், அவர்கள் ஆற் பணியும் மக்களுக்குத் தெரிவதில்லை. பெ சாதனைகள் புரிந்த மற்றும் பலரைப் பற்றி பொதுமக்கள் ஒன்றுமே அறியாதவர்களாய கின்றனர்.

ஓரளவுக்கு ஒரு நாட்டின் சரித்திரமா அந்நாட்டில் உதித்த பெரியோரின் வரலாறு என்று கூறிவிடலாம். அவர்கள் செயலால், யால் சரித்திரம் உருவாகிறது; நாடு உயர்கி நாட்டின் மேம்பாடு எவ்வாறு வளர்ச்சியு என்பதை அறிவதற்கு இப்பெரியோர்களைப் ப பொதுமக்கள் சிறிதளவேனும் தெரிந்து கொள வேண்டும்.

இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய அ நாடுகளில் அத்தேசப் பெரியோர்களின் வாழ் வரலாற்று மஞ்சரிகள் (Dictionaries of nat biography) வெளியிடப்பட்டுள்ளன. நம்

டில் இத்தகைய தொகுப்பு இல்லாதது வருந்தத் தக்கதே. ஆனால் புலமை மிக்க, விரிவான வரலாற்று நூல்களைக் கொண்டு வருவது இந்தப் புத்தக வரிசையின் நோக்கம் அல்ல. பண்டைக் காலம் முதல் இன்று வரை சிறப்புடன் வாழ்ந்த நம் நாட்டுப் பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றை சாதாரண வாசகருக்கு எளிய கதையுருவில் அளிப்பதே எங்கள் நோக்கம். இந்தத் தனித் தனிப் புத்தகங்களை பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியமாகக் கருதலாம்.

இத் தொகுப்புக்கு பதிப்பாசிரியராகப் பணியாற்ற இசைந்துள்ள பேராசிரியர் கே. சுவாமிநாதன் அவர்களுக்கும் திரு மஹேந்திர வி. தேசாய் அவர்களுக்கும் எமது நன்றி.

தியாகராஜரின் 200-வது பிறந்த தின விழாவையொட்டி இச் சிறு நூலை வெளியிட நேர்ந்ததைக் குறித்து மகிழ்ச்சியுறுகிறோம். இதன் மூலம் தியாகராஜரின் வாழ்க்கை வரலாற்றை சாதாரண வாசகரும் அறிய இயலும் என்று நம்புகிறோம். பிரபல இசை இயல் வல்லுநரும், தியாகராஜரின் சரிதையையும் பாடல்களையும் நுணுக்கமாக ஆராய்ந்தவருமான பேராசிரியர் பி. ஸாம்பமூர்த்தி இந் நூலை எங்களுக்காக எழுதியுள்ளார்.

புதுடில்லி,
மே 15, 1967

பாலகிருஷ்ண கேஸ்கர்

பொருளடக்கம்

1

முகவுரை

பெரியோரைக் கடவுளாக்கி வழிபடுவது மானிட இயல்பு. காவியத்திலும் சாகித்தியத்திலும் மட்டும் ஆர்வம் காட்டாமல், கவி அல்லது வாக்கேயகாரரின் வாழ்க்கை, பாரம்பரியம், கல்வி, மன இயல்பு, ஆரம்பகால முயற்சிகள், வெற்றி தோல்விகள் போன்ற பல்வகை விபரங்களையும் அறிய ஆவல் கொள்வது இயற்கையே. ஆனால் எக்காரணத்தாலோ நமது நாட்டுப் பொதுமக்கள் பெரியோரின் வாழ்க்கை வரலாற்றிலோ அறிவு வளர்ச்சியிலோ அதிகம் கவனம் செலுத்துவதில்லை. அவர் வைத்துவிட்டுச் சென்ற கலைப் பொக்கிஷங்களை அனுபவிப்பதோடு நின்று விடுகிறார்கள் இன்று வானளாவி நிற்கும் கோயில்களையும் இன்னிசை பயக்கும் கல்–தூண் வரிசைகளையும் சமைத்த கலைஞரைப் பற்றி ஏதும் அறியாதவர்களாக இருக்கிறோம். மேலும் இந்தியாவில் புகழ்பெற்றவர்களைச் சுற்றிப் பல கட்டுக் கதைகள் தோன்றி வளருவது வழக்கமாகிவிட்டது. தியாகராஜர் விஷயத்திலும் இப்படியே பற்பல கதைகள் உலவி வருகின்றன. அவற்றுள் சிலவற்றை ஊர்ஜிதப் படுத்தவும், பலவற்றைப் பொய்யெனத் தள்ளவும் ஆராய்ச்சியாளரின் உழைப்பு உதவுகிறது.

தியாகராஜர் சுயசரிதை ஏதும் எழுதி வைக்கவில்லை. அவரது வாழ்க்கையில் நேர்ந்த நிகழ்ச்சிகளை அவ்வப்போது குறித்துவைக்க ஒரு பாஸ்வெல்லோ (Boswell) லாக்கார்ட்டோ (Lockhart) அவருடன் பழகவில்லை. சீடர்களுள் ஓரிருவரைத் தவிர மற்றவர் அவர் இயற்றித் தந்த பாடல்களைக் கற்பதிலேதான் ஈடுபட்டிருந்தனர்; அவர் வாழ்க்கை நிகழ்ச்சிகளை விவரிப்பதில் அல்ல. தியாகராஜருடைய வாழ்க்கை வரலாற்றை ஒருவாறு ஆதாரபூர்வமாகக் கோவை செய்யத் தேவையான சான்றுகள் கிடைத்திருப்பது நமது அதிருஷ்டமேயாகும். இப்படிக் கிடைத்த ஆதாரக் குறிப்புக்களைக் கீழ்க்கண்ட முறையில் பாகுபடுத்தலாம் :

1. தியாகராஜரின் சீடர்கள் எழுதிவைத்த வரலாறுகள். குறிப்பாக, வாலாஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதரும் தஞ்சை ராமராவும் எழுதிவைத்த ஓலைச்சுவடிகளும் வாலாஜாப்பேட்டை கிருஷ்ணஸ்வாமி பாகவதர் காகிதத்தில் எழுதிவைத்துள்ள வரலாறும்.
2. அவரது காலத்திற்குப் பின் அச்சேறிய புத்தகங்களில் கண்டுள்ள வாழ்க்கை வரலாறுகள்.
3. அவரது கீர்த்தனைகளில் உள்ள சான்றுகள்.
4. வழி வழி வந்த கர்ணபரம்பரைக் கதைகள்.
5. அவரது சீடர்களும் பிற்காலத்துப் புலவர்

களும் அவரைப் புகழ்ந்து பாடியுள்ள பாடல்களிலே காணும் செய்திகள்.

6. அவரை நேரில் தரிசித்த புலவர்களும் ரஸிகர்களும் எழுதிவைத்த நினைவுக் குறிப்புகள்.

7. முன்னாள் ராஜ்ய அரசாங்க வெளியீடுகள், நினைவுக் குறிப்புகள், கெஜட்டுகள் முதலியன. உதாரணமாக, ஜோதிஸ்வரூபிணி ராகத்தைப்பாடி, நுத்து விளக்கில் சுடர் எழச் செய்த நிகழ்ச்சி புதுக்கோட்டை கெஜட்டில் காணப்படுகிறது. [1]

பின்வரும் அத்தியாயங்களில் கண்டுள்ள விபரங்கள் மேற்கூறிய குறிப்புக்களைச் சான்றாகக் கொண்டவை.

---

[1] இந் நிகழ்ச்சி, புதுக்கோட்டை சமஸ்தானக் கைந்நூலில் (தொகுப்பு 2, பிரிவு 1; திருத்திய இரண்டாம் பதிப்பு; 1940-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது) 870-ம் பக்கத்தில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது: "தியாகராஜர் புதுக்கோட்டைக்கு வந்திருந்தபோது ஓர் அற்புதம் நிகழ்ந்ததாகப் பரம்பரைக் கதை வழங்குகிறது. புதுக்கோட்டை மன்னர் தம் அவையில் கூடியிருந்த புலவர்களுக்கு ஒரு விநோதப் போட்டி நிகழ்த்தினார். எண்ணெயும் திரியும் கொண்ட ஏற்றப்படாத ஒரு விளக்கை அவர்கள் முன்னால் வைத்து, அதைத் தீக்குச்சியின்றி தங்கள் பாட்டின் வன்மையால் எரியச் செய்யும்படி சவால் விடுத்தார். அங்கிருந்த தமது குருவின் ஆசியைப் பெற்று தியாகராஜர் ஜோதிஸ்வரூபிணி ராகத்தைப் பாடினார். சபையோர் வியக்க, விளக்குத் திரியிலே சுடர் தோன்றி ராக ஆலாபனைக் கொப்ப ஒளி மிகுந்தும் குன்றியும் எரிந்ததாகக் கூறப்படுகிறது."

2

இளமைப் பருவம்

தியாகராஜர் பிறப்பதற்கு முன்னால், திருவாரூர்க் கோயிலில் எழுந்தருளியுள்ள தியாகராஜக் கடவுள் ராமப்பிரும்மத்தின் கனவிலே தோன்றி "சங்கீத சாகித்ய கலா கோவிதுடு ஒருவன் உனக்கு மகனாகப் பிறப்பான். அவனுக்குத் தியாகராஜன் என்று பெயரிடுக" என்று கூறி மறைந்தாராம்.

பிறவி

தியாகராஜர் தஞ்சை ஜில்லாவில் திருவாரூரில் சர்வஜித்து ஆண்டு சித்திரை மாதம் 25-ம் தேதி (மே மாதம் 4-ம் தேதி, 1767) அன்று பிறந்தார். புதுத்தெருவில் 6-ம் இலக்கமிட்ட வீடுதான் அவர் உதித்த இடம். பிறந்த தினம் திங்கட்கிழமை, பூச நக்ஷத்திரம், கடக லக்னம். வாலாஜாப்பேட்டைத் தொகுப்பில் ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி வைக்கப்பட்டுள்ள ஓலைச்சுவடிகளிலே கண்ட தியாகராஜரின் ஜாதகத்திலிருந்து அவர் பிறந்த நாளை நிர்ணயிக்க முடிகிறது. இந்த ஜாதகம் கிடைப்பதற்கு முன்னால் அவருடைய வயது வெவ்வேறு விதமாக அனுமானிக்கப்பட்டு வந்தது. அவர் பராபவ சம்வத்ஸர புஷ்ய பஹுள பஞ்சமி தினத்தன்று (ஜனவரி 6, 1847) மறைந்தார் என்று ஐயமின்றித் தெரிகிறது.

தியாகராஜர் 77 ஆண்டுகள் வாழ்ந்ததாக **சங்கீத சம்பிரதாய ப்ரதர்சினி** என்ற நூலில் சுப்பிரமணிய தீக்ஷிதர் குறிப்பிடுகிருர். இதன்படி அவர் கி. பி. 1770-ல் பிறந்திருக்க வேண்டும்.[1] தியாகராஜரின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழில் எழுதிய பஞ்சு பாகவதர், அவர் 88 ஆண்டுகாலம் வாழ்ந்தார் என்று கூறுகிருர். இக்கணக்குப்படி தியாகராஜர் பிறந்த ஆண்டு 1759 ஆக இருத்தல் வேண்டும். இப்படிச் சரித்திர ஆசிரியர்கள் தியாகராஜர் பிறந்த ஆண்டையும் தினத்தையும் வரையறுத்துக் கூறவில்லை எனினும் அவர் மொத்த வயது 77லிருந்து 88வரை மதிப்பிடப்படுகிறது

தியாகராஜர் உண்மையில் 88 வயதுமட்டும் வாழ்ந்தவராளுல் 83 ஆண்டைக் கடந்ததும் அவருடைய சதாபிஷேகம் விமரிசையாகக் கொண்டாடப் பட்டிருக்கும். ஆளுல் இவ் வைபவத்தைப் பற்றி எவ்வித சரித்திரச் சான்ருே, கர்ணபரம்பரைச் செய்தியோ கிடையாது. அவரது வாழ்க்கையின் பிற்பகுதியில் தியாகராஜரின் புகழ் பரவியதன் காரணமாக அவருக்கு அஞ்சலி செலுத்த சிற்றரசர்களும், புலவர்களும், கவிகளும், துறவி

---

[1] சங்கீத சம்பிரதாய ப்ரதர்சினியின் வரலாற்றுப் பகுதியில் கவிஞர்களின் சரிதைகள் கால ரீதியாக வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. சியாமா சாஸ்திரியின் வரலாறு தியாகராஜரின் வரலாற்றுக்கு முன்ஞல் கொடுக்கப்பட்டுள்ளது. சியாமா சாஸ்திரி தியாகராஜருக்கு வயதில் மூத்தவர் என்பது சுப்பிரமணிய தீக்ஷி தருக்குத் தெரியும். ஆகவே சாஸ்திரியாருக்கு முதலிடம் கொடுத்திருக்கிருர் போலும்.

களும், இசை வல்லுநர்களும் நமது இந்திய நாட்டின் பற்பல பாகங்களிலிருந்து திருவையாற்றுக்கு வந்ததை நாம் நினைவு கொள்ளவேண்டும். சதாபிஷேகம் நடந்தேறியிருந்தால் அவரது சீடர்க் குழுவிலிருந்த கவிகளும் இசைப்புலவர்களும் அந்த விழாவையொட்டிப் பாடல்களும் கவிதைகளும் புனைந்திருப்பர். ஆனால் அப்படிப் பாடல்களும் கவிதைகளும் எழுதிவைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. திருவையாறு ராமுடு பாகவதர் (தியாகராஜரின் தமையனாரின் கொள்ளுப்பேரன்) உள்பட பலரை இதைப் பற்றி விசாரித்திருக்கிறேன். சதாபிஷேகம் நடைபெறுவதற்கு முன்னமேயே தியாகராஜர் சித்தி அடைந்து விட்டதாகவே அவர்கள் அனைவரும் கூறினார்கள்.

தவிர, தியாகராஜரைவிட சியாமா சாஸ்திரிகள் வயதில் பெரியவர் என்ற செய்தி சாஸ்திரியாரின் குடும்பத்தில் கர்ணபரம்பரையாக வந்துள்ளது. திருவையாறு ஞானி தியாகராஜர் சியாமா சாஸ்திரியிடம் பெருமதிப்பு வைத்திருந்தார் என்பது அனைவரும் அறிந்ததே. இதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம்: (1) சாஸ்திரியார் மாபெரும் சாகித்திய கர்த்தர்; உண்மையான தேவி உபாசகர். (2) வயதில் பெரியவர். காலஞ்சென்ற கீர்த்தனாச்சாரிய ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் "இந்தியாவின் பண்பாட்டுச் சொத்து" என்ற தொகுப்பில் (தொகுப்பு 3, பக்கம் 584) தமது கட்டுரையில், சங்கீதத் திருமூர்த்திகளில் சியாமா சாஸ்திரியே மூத்தவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கவி வெங்கட சூரியால் ஜாக்கிரதையாய்க் காத்து வைக்கப்பட்டுள்ள ஓலைச்சுவடி ஒன்றில், தியாகராஜர் பிறந்த நாளும், அதனருகே அவர் சீடர் வெங்கடரமண பாகவதர் பிறந்த நாளும் காணப்படுகின்றன. வெங்கடசூரி ஒரு சிறந்த கவிஞர்; "நௌகா சரித்திரம்" என்ற கேய நாடகத்தை வடமொழியில் இயற்றியவர்; வெங்கட ரமண பாகவதரின் சீடர். தமது குரு பிறந்த நாளையும் குருவுக்கு குருவான தியாகராஜர் பிறந்த நாளையும் ஒரே ஓலைச்சுவடியில் எழுதிவைத்திருப் பதால், அவற்றை மெய்யெனக் கொள்வதே பொருந்தும்.

பாரம்பரியம்

தியாகராஜர் முரிகி நாடு அல்லது முலக நாடு என்ற குலத்தைச் சேர்ந்த தெலுங்குப் பிராமணர். பாரத்வாஜ கோத்ரம், ஆபஸ்தம்ப சூத்ரத்தைச் சேர்ந்தவர். காகர்ல[1] வம்சத்தில் செருகுரு வாள்ளு பிரிவைச் சார்ந்தவர். "நௌகா சரித் திரம்" இசை நாடகத்தின் தொடக்கத்தில் ஐந்தா வது கண்டபத்தியத்தில் தியாகராஜர் தம்மைக்

[1] காகர்ல என்பது கர்னூல் ஜில்லாவில் கும்பம் தாலுக்காவிலுள்ள ஒரு கிராமம். அங்கு வசித்த தியாகராஜரின் முன்னோர்களை தெற்கே சென்று குடியேறி இந்துப் பண்பாட்டைப் பரப்பும்படி விஜயநகர மன்னர்கள் ஊக்கப்படுத்தினர். ராயல சீமையில் வழக்கிலிருக்கும் 'சலிக' போன்ற சொற்கள் தியாக ராஜரின் சாகித்தியங்களில் இடம் பெறுவது இங்கு குறிப்பிடத் தக்கது.

"காகர்ல சமுத்திர சந்திரன்" என்று குறிப்பிடுகிறார்:

> காகர்லாம்புதி சந்த்ருடு — ஸ்ரீகருடகு தியாகராஜ
> சித்த நிவேஸ
> மௌகாசரித்ர மோனர்சேத — ஸ்ரீகாந்தா சித்தகிம்பு
> ஸ்ரீரகுராமா.

வாலாஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதரின் மங்களாஷ்டகத்தின் முதல் செய்யுளில் இந்தக் குறிப்பு வருகிறது:

> ஸ்ரீமத் காகர்லவம்சாப்தி சந்த்ராயாமல தேஜஸே
> பூர்ணய புண்யசீலாய தியாகராஜாய மங்களம்

தியாகராஜரைப் போற்றி இயற்றப்பட்ட தியான சுலோகங்களிலும் இந்தக் குறிப்பைக் காண்கிறோம்.

தியாகராஜர் தாம் ராமப்பிரும்மம் என்பவரின் மகன் என்பதை தொருகுணா இடுவண்டி சேவ என்ற பிலஹரி ராகக் கிருதியின் முத்திரைச் சரணத்தில்,

> ராமப்ரம்ம தனயுட தியாகராஜு தாபாடுசு நூசகா

என்றும், "பிரஹலாத பக்தி விஜயம்" என்ற இசை நாடகத்தின் பல சுருதியில்:

> ஸ்ரீராமப்ரம்ம தனய தியாகராஜேந நிர்மிதம்
> ப்ரஹ்லாத பக்தி விஜய பிரபந்தம் புக்திமுக்திதாம்


என்றும் கூறியுள்ளார்.

தவிர, இதே இசை நாடகத்தின் முதல் த்விபத செய்யுளில் தம்மை ராமப் பிரும்மத்தின் மகன் என்று கூறியிருக்கிறார்:

> ராமப்ரம்ம சுதுடைன தியாகராஜு

தியாகராஜரின் அன்னை சீதம்மா இவருடைய குணாதிசயங்களை உருவாக்குவதில் கொண்ட பங்கு கொஞ்சமல்ல. திருவையாற்று ஞானக்கவி சீதம்ம மாயம்ம, ஸ்ரீ ராமுடு மாதண்(ட்)ரி என்ற வசந்த ராகக் கிருதியின் பல்லவியில் தம் பெற்றோர்களைப் பற்றிப் பேசுகிறார்.

வம்சாவளி



தியாகராஜரின் கொள்ளுப் பாட்டனாரான பஞ்சநதப் பிரும்மம் அவர்களுக்கு மக்கள் ஐவர். கடையவன் கிரிராஜப் பிரும்மம் அல்லது கிரிராஜ கவி. மற்ற நால்வரின் பெயர் முறையே சதாசிவப்

பிரும்மம், சதானந்தப் பிரும்மம், சச்சிதானந்தப் பிரும்மம், பாலப் பிரும்மம். இவர்களுள் முதல் இருவரும் இளம் வயதிலேயே யோகிகளாகி, திருவண்ணுமலைக்கு அருகிலுள்ள சதானந்தக் கோனே என்ற குகைக்குச் சென்றவர்கள் மீண்டும் திரும்பவேயில்லை. கிரிராஜ கவி கவிதையும் இசைப்பாடலும் இயற்றுபவர். ஷஹாஜி மகாராஜா அரசுபுரிந்த காலத்தில் (1684–1710) சமஸ்தான வித்துவானக இருந்தார். மன்னர் ஷஹாஜி "பல்லகி சேவாப் பிரபந்தம்" என்ற அழகிய தெலுங்கு நாட்டிய நாடகத்தை ஆக்கியவர் என்ற முறையில் பிரபலமானவர். முற்காலத்தில் திரு விழாக்களையொட்டித் திருவாரூர் கோயிலில் இந்த நாட்டிய நாடகம் நடத்தப்பட்டு வந்தது. கிரிராஜ கவி யக்ஷ கானங்களையும் மற்றும் வேதாந்த சம் பந்தமான பாடல்களையும் இயற்றி வந்தார். இவ ருக்கு மக்கள் ஐவர்; அவர்களில் ராமப்பிரும்மம் புகழ்பெற்ற புலவராஞர். சீதம்மாவை மணம் புரிந்துகொண்ட இவருக்கு பஞ்சாபகேசன், ராம நாதன், தியாகராஜன் என்ற மூன்று குமாரர்கள் பிறந்தனர். ராமநாதன் சிறு வயதிலேயே கால மாகிவிட்டான். ஜல்பேசன் என்றும் அழைக்கப் பட்ட பஞ்சாபகேசன் நெடுங்காலம் வாழ்ந்து தியாகராஜரின் மகிமையைக் கண்டார். ஜல்பே சன் தியாகராஜரை இளம் வயதில் துன்புறுத்தி ஞர் என்று சிலர் அவர்மீது பழி சுமத்தியுள்ளனர் இவர்கள் வர்ணிப்பதுபோல அவர் உண்மையில். குரூர நெஞ்சம் படைத்தவர் அல்லர். தமது

தம்பியை ஊக்கிய உயர்ந்த நோக்கங்களை அவர் புரிந்துகொள்ள இயலாமற்போனது வருந்தத் தக்கதுதான். உதாரணமாக தியாகராஜர் அரசர் விடுத்த அழைப்பை நிராகரித்த பொழுது, ஜல்பேசன் கொதித்தெழுந்து சீறினார் :

"நி ராம பஜன பொட்ட காயேனு? பட்ட காயேனு?"[1]

இது "நிதி சால சுகமா" என்ற கிருதி மூலம் தியாகராஜர் உணர்ச்சியுடன் கேட்ட கேள்விக்கு எதிராக மனித இயல்பையொட்டிய மறு கேள்வி தான்.

தியாகராஜரின் தாய்வழிப் பாட்டனார் காள ஹஸ்தி அய்யர் தஞ்சாவூர் அரண்மனையில் சமஸ்தான வித்வான். தியாகராஜரின் அன்னைக்கு நன்கு பாடத் தெரியும். புரந்தரதாஸரின் பாட்டுக் கள் பலவற்றைக் கற்றுவைத்திருந்தார்.

தஞ்சாவூர் மகாராஜா இரண்டாம் துலாஜாஜி (ஆட்சி காலம் கி.பி. 1765-1787) ராமப்பிரும்மத் தின் அறிவுத்திறனையும் தூய பக்தியையும் நன் குணர்ந்தவர். ஆகவே ராமநவமி உற்சவத்தின் போது அவரைத் தம் சபையில் ராமாயணத்தைப் படித்து விரிவுரை கூறுமாறு கேட்டுக்கொண்டார். தந்தையுடன் சென்ற தியாகராஜர் மகா காவ்யத் தின் சுலோகங்களை வாசிப்பார். தகப்பனார் பொருளை விளக்குவார். இதனால் சிறுவயதிலேயே தியாகராஜருக்கு ராமாயணத்தின் பொருளும்,

[1] உன் ராம பஜனை வயிற்றை நிரப்புமா? அல்லது உடம்பைப் போர்த்துமா?

நயமும் நன்கு பழகிவிட்டன. துலாஜி மன்னன் ராமப்பிரும்மத்திற்கு தஞ்சை ஜில்லா பசுபதி கோவிலில் கொஞ்சம் நிலமும் திருவையாற்றில் ஒரு வீடும் சாஸனமாகக் கொடுத்தார். தமது மக்கள் இருவர்க்கும் அவர் விட்டுச் சென்ற சொத்து இந்த நிலமும் வீடுமேயாகும்.

தியாகராஜரின் இல்லம்

ராமப்பிரும்மம் காலமானதும் திருவையாற்றில் திருமஞ்சன வீதியிலிருந்த வீட்டின் பாகப் பிரிவினையில் வடக்குப் பகுதியை தியாகராஜரும், தெற்குப் பகுதியை அவருடைய தமையனும் பெற்றனர். உள்ளூர் தாசில்தாரின் நன் முயற்சியினாலேதான் இப்பாகப்பிரிவினை நடந்தது. இந்த அதிகாரிக்கு தியாகராஜரிடம் அக்கறை அதிகம். பரமசாதுவான தியாகராஜர் தமது தமையன் கையில் படும் கொடுமைகளைக்[1] கண்கூடாகக் கண்டார். ஸகோதரர் இருவரையும் தனித் தனியே வசிக்கச் செய்வதுதான் இக் கொடுமை களைத் தீர்த்துவைக்க ஒரே வழி என்று அவருக் குத் தோன்றியது. பாகப்பிரிவினைக்கு இருவரை யும் இணங்கவைத்தார். இதன் விளைவாக தியாக

---

[1] ஒரு சமயம் சிறுபிழைக்காகத் தியாகராஜரை நடுத்தெரு வில் பளபளக்கும் வெயிலில் நிற்கும்படி ஜல்பேசன் கட்டளை யிட்டதாகச் சொல்லப்படுகிறது. தமையனிடம் பட்ட கஷ்டங் களை தியாகராஜர் "அந்யாயமு செயகுரா" (காபிராகம்), "அதய ஸ்ரீ ரகுவீர" (ஆஹிரிராகம்) ஆகிய இரு பாடல்களில் குறிப்பிடு கிறார்.

ராஜரின் பங்குக்குக் கிடைத்த பொருள்களுள் அவர் உயிருக்குயிரும், உபாசனை மூர்த்தியும் ஆகிய ஏக பீட விக்ரகம் வந்து சேர்ந்தது. பிரிவினை இரு சகோதரர்க்கும் நன்மையாகவே முடிந்தது. குறுக்கீடு ஏதுமின்றி தியாகராஜர் தமது திருப்பணியில் ஈடுபட முடிந்தது. பிரிக்கப் பட்ட தமையன் ஜல்பேசன் விரைவில் தம் முன்னோர் மதியீனத்தை உணர்ந்து கொண்டு வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொண்டார்.

ஜல்பேசனின் கொள்ளுப்பேரனை ராமுடு பாகவதர் வீட்டின் தென் பகுதியில் வசித்துவந்தார். வாலாஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதர் அன்புடன் அளித்த கோதண்டராமர் படம் இன்றும் அவ்வீட்டில் இருக்கிறது. இப்படத்தை நோக்கித் தான் "நநு பாலிம்ப" என்ற மோகன ராகப் பாடலைப் பாடினார் தியாகராஜர். தியாகராஜரின் பெண்ணும் பேரனும் பல ஆண்டுகள் அந்த வீட்டிலேயே வாழ்ந்தனர். பிற்காலத்தில் வீடு விக்கிரயம் செய்யப்பட்டது. சமீபகாலத்தில் தியாகப்பிரும்ம ஆராதனை மகோத்சவ சபையினர் இந்த வீட்டை எடுத்துக் கொண்டபின் இது சங்கீத அபிமானிகள் யாத்திரைக்குரிய க்ஷேத்திரமாக விளங்குகிறது. இந்தியாவின் பல பாகங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இசை ஆர்வத்துடனும் பக்திப் பெருக்குடனும் இந்த ஸ்தலத்திற்கு வருகிறார்கள். இந்த வீட்டை வாங்கி அதில் சில ஆண்டுகள் வசித்தவர், தமக்

கும் தமது குடும்பத்தாருக்கும் தியாகராஜர் உஞ்ச விருத்தி கோலத்திலும் பூஜை உடையிலும் சில சமயம் தரிசனம் அளித்தார் என்று என்னிடம் கூறினர். மணியோசையும் சில சமயம் கேட்பதுண்டாம்.

உபநயனமும் திருமணமும்

ராமப்பிரும்மம் தமது குடும்பத்தினரோடு திருவையாற்றில் குடியேறினது கி.பி. 1774 ஆண்டாய் இருக்கலாம். எட்டாவது வயதில் (1774 ஆண்டில்) தியாகராஜருக்கு உபநயனம் நடந்தது. பதினெட்டாம் பிராயத்தில் (1784) திருமணம் நடந்தேறியது. தியாகராஜரின் ஒரே புதல்வி சீதாலக்ஷ்மி. அவள் அகிலாண்டபுரம் குப்புஸ்வாமி ஐயா என்பவருக்கு வாழ்க்கைப் பட்டாள். அவர்களுக்கு பஞ்சாபகேசய்யா என்ற மகன் பிறந்தான். பெரிய பாடகராகத் திகழ்ந்த இவர் இளம்வயதிலேயே சந்ததியின்றி மரணம் அடைந்தார். விதவையான அவர் மனைவி குருவம்மா தஞ்சையிலுள்ள தன் பிறந்த வீட்டுக்குச் செல்லும்போது கணவனின் பாட்டனர் தியாகராஜர் பூஜை செய்துவந்த ஏகபீட விக்ரகத்தையும் எடுத்துச் சென்ருள். இருபதாம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் அவள் காலமானுள். தஞ்சையில் வரகப்பய்யர் சந்தில் அவள் கடைசி காலத்தில் வசித்த வீட்டில் இன்றும் அந்த விக்ரகத்தைக் காணலாம். தியாகராஜரின் நேர் சந்ததி இவ்வாறு முற்றுப் பெற்றது.

3

கல்வி, தொழில், குணாதிசயங்கள்

பெற்றோர்கள் அதிக சிரத்தையோடும் அன்போடும் தியாகராஜரை வளர்த்தனர். ஆரம்பத்தில் தந்தையிடமும் அதன்பிறகு திருவையாற்றில் இருந்த சம்ஸ்கிருத பள்ளியிலும் கல்வி பயின்றார். இளம் வயதிலேயே அவரது புலமை மலர்ந்தது. சிறுவன் தியாகராஜன் தானே பாடல்கள் இயற்றுவதில் ஆர்வம் காட்டினான். அப்பாடல்களை தன் வீட்டுச் சுவரில் எழுதி வைத்தான். அவற்றைக் கண்ட தந்தை உளம் மகிழ்ந்து பெருமிதம் கொண்டார். தனயன் புனைந்த பாடல்களை ராமசேஷ சாஸ்திரி, பாஷ்யம் கிருஷ்ண சாஸ்திரி போன்ற சிறந்த அறிவாளிகளிடம் காட்டினார். அவற்றில் பொதிந்திருந்த இசை நயத்தைக் கண்டு அவர்கள் வியந்தனர். புன்னாகவராளியில் "நமோ நமோ ராகவாய", "தவதாசோஹம்" என்ற இரு திவ்ய நாமக் கீர்த்தனங்களும் அவருடைய ஆரம்பகால முயற்சியில் விளைந்தவை.

தகப்பனார் தமது பஜனையிலே பாடும் விஜய கோபாலர் முதலியோர் இயற்றிய பல திவ்ய நாமக் கீர்த்தனைகள் இளம் வயதிலேயே தியாகராஜருக்கு பரிச்சயம் ஆய்விட்டன. ஆகவே தமது படைப்புத் திறனை முதலில் திவ்ய நாமக் கீர்த்தனைகள் இயற்றுவதில் செலுத்தினார். தியாகராஜ

ரின் அன்னைக்கு புரந்தரதாஸரின் (1484-1564) பாடல்கள் பலவும் மனப்பாடம். அவற்றையும் தாயிடமிருந்து கற்றார்.

ஸொண்டி வெங்கடரமணய்யாவிடம் சிக்ஷை

சிறுவன் தியாகராஜன் தந்தையின் பூஜையை முன்னிட்டு தினம்தோறும் காலையில் மலர் கொய்ய நந்தவனம் செல்வது வழக்கம். அத்தோட்டம் திருவையாறு வடக்கு மாட வீதியிலிருந்து சிறிது தூரத்திலிருந்த அந்தணர்க்குறிச்சி என்ற இடத்தில் இருந்தது. போகும் வழியிலுள்ள ஸொண்டி வெங்கடரமணய்யா அல்லது ஸொண்டி வீணை வெங்கடரமண தாஸ் என்பாரின் இல்லத்தில் சீடர்களுக்குப் பயிற்சி நடந்துகொண்டிருக்கும். அந்த வீட்டு வாசலின்[1] ஓரமாக நின்று சங்கீதத்தைக் கேட்பதில் லயித்துவிடுவார் தியாகராஜர். ஒரு நாள் ராமப்பிரும்மம் இதைக் கவனித்துவிட்டார். உடனே ஸொண்டி வெங்கடரமணய்யாவை அணுகி தமது மகனுக்கும் சங்கீதம் சொல்லிக் கொடுக்கும்படி வேண்டினார். உவகையுடன் ஒப்புக்கொண்டார் குரு. விரைவிலேயே தமது புது சீடன் பரமமேதை என்பதை உணர்ந்தார்.

---

[1] இது வடக்கு மாடத்தெருக் கோடியில் அந்தணர்க் குறிச்சிக்கு இட்டுச் செல்லும் சந்திற்கு அருகில் இருந்த தெற்குப் பார்த்த வீடு. வீட்டு இலக்கம் 86. சில ஆண்டுகளுக்கு முன் வரை ஸொண்டி குடும்பத்தாருக்குச் சொந்தமாக இருந்தது. பிறகு விக்கிரயம் ஆகிவிட்டது.

சொல்லிக்கொடுக்க வேண்டியது அனைத்தும் ஓராண்டுக்குள்ளாகவே முடிந்துவிட்டது. சிக்ஷை முடிந்ததும் குரு ஆசி கூறி தியாகராஜரை இசை யரங்கின் மீது ஏற்றிவைத்தார்.

தியாகராஜர் சங்கீத கர்த்தாவாக விகசித்ததற்கு அவரது தீவிரமான முயற்சியும் பயிற்சியுமே காரணமாகும். தியாகராஜர் இலக்கியம், இசை, இரண்டிலும் புலமை வாய்ந்த குடும்பத்தில் தோன்றினார். அவர் தந்தையிடமிருந்து தெலுங்கும் சம்ஸ்கிருதமும் கற்று இரு மொழியிலும் ஆழ்ந்த ஞானம் பெற்றார். தந்தையின் ராமாயண கதா காலக்ஷேபங்களில் பங்குகொண்டு அம் மகா காவி யத்தின் உட்பொருளை உள்ளபடி உணர்ந்து கொண்டார். சிறுவயதிலேயே அப்போது வழக்கி லிருந்த சங்கீத நூல்கள் அனைத்தையும் கரைத் துக் குடித்தார். இவ்விதமாக சங்கீத சாஸ் திரத்தை முறையாய், ஐயந்திரிபறக் கற்றுக் கரை கண்டு விட்டதால், இவர் பிற்காலத்தில் தன்னம் பிக்கையுடன் சரளமாகக் கீர்த்தனைகள் இயற்ற முடிந்தது. தமது சங்கீத சாஸ்திர ஞானத்தின் காரணமாகவே இசையின் உயர்வைப் பற்றியும், சங்கீதக் கலையறிவின் அவசியத்தைப் பற்றியும் அனேக கிருதிகளில் விவரித்திருக்கிறார். "விதுலகு ம்ரொகெத" (மாயாமாளவகௌளை ராகம்), "சங்கீத ஞானமு" (தன்யாசி ராகம்), ஆகிய கிருதிகளில் பற்பல சங்கீத பெரியார்களைக் குறிப்பிட்டிருக்கிறார். இப்பெரியார்கள் இயற்றிய பாடல்கள் பல இன்று

நம்மிடையே வழக்கில் இல்லாவிடினும், தியாக ராஜருக்கு அவை தெரியும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் முன்காலத்தில் நூல்களில் அடங்கிய பாடல்கள் கர்ணபரம்பரையாகவே போதிக்கப் பட்டு வந்தன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நூல்கள் அச்சேறத் தொடங்கியதும் இந்த மனப்பாட முறை வழக்கற்று மறைந்து போனது வருந்தத்தக்கதே.

சங்கீத சாஸ்திரத்தில் விஞ்ஞான ரீதியாக தியாகராஜர் புலமை பெற்றிருந்ததால், பல புதிய ராகங்களை சிருஷ்டித்து அவற்றில் எழில் மிக்க பாடல்களை இயற்ற முடிந்தது. பிடிபடாமல் உருக் குலைந்து கிடந்த பல ராகங்களை வரையறை செய்து, தனித்தனி வடிவம் தந்து, தெளிவுபடுத்த முடிந்தது. அவர் கற்பனை சக்தியும், தீர்க்க தரிசன மும் படைத்தவர். எனவே சங்கீதக் கலையின் வருங்காலத்தை நன்கு உணர்ந்து தென்னிந்திய சங்கீதம் திருத்தமான முறையில் மேலும் மேலும் வளர்வதற்கான அஸ்திவாரத்தை அமைத்துத் தந்தார்.

கலைப்பணி

தியாகராஜர் தமது கலைப்பணியைத் துவக்கிய போது தஞ்சை ஜில்லாவில் பல பெரிய இசை மேதைகள் திகழ்ந்தனர். தென்னிந்திய இசைச் சரித்திரத்திலேயே இந்த ஜில்லாவில்தான் ஏராள மான லக்ஷணக்காரர்களும், பாடகர்களும், சாகித் திய கர்த்தாக்களும் தோன்றினர். தொடர்ந்து

சுமார் மூன்று நூற்றாண்டு காலமாக (கி.பி.1600 - 1900) தஞ்சை சங்கீதக் கலையின் உறைவிடமாக இருந்து வந்தது. தஞ்சையை ஆண்ட நாயக்கர்களும் மராத்திய அரசர்களும், கலையறிஞர்களாகவும், ஆதரவாளர்களாகவும் இருந்தனர். அவர்கள் சபையை கவிஞர்களும், பாடகர்களும், வாக்கேயகாரர்களும் அலங்கரித்தனர். மற்றப் பிரதேசங்களிலிருந்தும் இசை வல்லுநர்களும் புலவர்களும்,புகழ் தேடி தஞ்சை வந்தனர். தியாகராஜர் காலத்தில் தஞ்சை தர்பாரில் சுமார் 360 வித்வான்கள் இருந்தனர். ஆகவே ஒவ்வொருவரும் அரண்மனை சங்கீத மஹாலில் அரசன் முன்னிலையில் வருஷத்தில் ஒருநாள் தான் பாட முடிந்தது.[1] இந்த அரிய வாய்ப்பில் வித்வான்களிடையே தமது இடத்தைக் காப்பதற்காக ஒவ்வொருவரும் ஆண்டு முழுவதும் தீவிரத்துடன் கலா உபாசனை செய்வார்களாம். சில பாடகர்கள் குறிப்பிட்ட சில ராகங்களைப் பொறுக்கி, விசேஷ கவனம் செலுத்தி அப்பியசித்தனர். இவ்விதம் குறிப்பிட்ட ராகங்களைக் கையாண்டு மேன்மை பெற்றவர்களுள் தோடி சீதாராமய்யா, அடாணா அப்பய்யா, சங்கராபரணம் நரஸய்யா போன்றவர்களை இன்றும் சங்கீத உலகம் பெருமையுடன் போற்றுகிறது.

---

[1] இவர்களில் புதுவருடப்பிறப்பன்று பாடும் பேறு த்யாகராஜரின் குருவுக்குத் தந்தையான ஸொண்டி வெங்கடசுப்பய்யாவுக்குக் கிடைத்தது.

உஞ்சவிருத்தி

எளிய வாழ்க்கை, உயர்ந்த நோக்கு, அன்புத் தொண்டு, ஆகிய மேலான இலட்சியங்களைக் கடைப்பிடித்து பக்தியில் ஊறின வறுமை வாழ்வு நடத்தினார் தியாகராஜர். பரம்பரை சொத்தான வீட்டின் ஒரு பகுதியையும், சிறிது நிலத்தையும் தவிர அவருக்கு வேறு சொத்து ஒன்றும் கிடையாது. உஞ்சவிருத்தியின் மூலமே தமது குடும்பத்தையும் சீடர்களையும் பராமரித்தார். சீடர்களைத் தவிர, மற்றும் பல பாடகர், பண்டிதர், பாகவதர் அவரிடம் மேலும் கற்றுணரவும், ஆறுதல் வேண்டியும் வருபவர்கள் வாரக்கணக்காக அல்லது மாதக்கணக்காக அவரிடம் விருந்தினராய்த் தங்கி விட்டுப் போவதுண்டு. வாரம் ஒருமுறை தியாகராஜர் உஞ்சவிருத்திக்குப் போவார். அப்படிச் சேர்ந்த தானியம், அவர் குடும்பம், சிஷ்யர்கள், வருவோர் - போவோர் எல்லோருக்கும் உணவளிக்கப் போதுமானதாக இருந்தது. சில சமயம் அண்டையிலுள்ள கிராமங்களிலும் அவரை உஞ்சவிருத்தி பஜனைகள் புரிய அழைப்பதுண்டு.

உஞ்சவிருத்தி வாழ்க்கையானது பொறியடக்கமும், உடல் வருத்தமும், கண்டிப்பும் நிறைந்தது. இதைக் கருதும்போது இவர் தஞ்சை அரசர் விடுத்த அழைப்பை நிராகரித்து தமது லட்சியத்தை உறுதியாய்ப் பற்றி நின்றது எவ்வளவு உயரிய தியாகம் என்று உணர்கிறோம்.

ஆன்மீகப் பற்றுள்ளவர்கள்தாம் உஞ்சவிருத்தி

வாழ்க்கை நடத்துவார்கள் என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். இவ்வழக்கம் பிக்ஷை இடு பவரையும் ஏற்பவரையும் ஒருங்கே உயர்த்து கிறது. உஞ்சவிருத்தி பாகவதர்களால் சமூகத் திற்கு நஷ்டம் ஒன்றும் கிடையாது. முழு மன துடன் தாராளமாக வழங்கப்படுவதைக் கொண்டு அவர்கள் ஜீவனம் செய்கிறார்கள். பிற்பகலையும், இரவையும் உபன்னியாசங்கள் செய்து கழிக் கிறார்கள். இந்த வகையில் மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவுகிறார்கள். வருவாயில் ஒரு பகுதியைத் தருமத்தில் செலவிட வேண்டும் என்று எல்லா மதங்களும் வற்புறுத்துகின்றன. உஞ்சவிருத்தி பாகவதர்கள் கல்வியிலும் பக்தி யிலும் முதிர்ந்தவர்கள். இல்லறம் நடத்துபவர்கள் இத்தகைய சத் பாத்திரங்களுக்கு மனமுவந்து கொடுத்தார்கள். உஞ்சவிருத்தி பாகவதர்கள் வீதிவழியே துதிப்பாடல்களைப் பாடிக்கொண்டு செல்லும்போது இருசாரி வீடுகளிலிருந்தும் சம் சாரிகள் பயபக்தியுடன் வெளிவந்து அரிசி, பருப்பு முதலிய உணவுப் பண்டங்களை அளித்து விட்டுச் செல்வார்கள்.

உஞ்சவிருத்தியின் மூலமாக உப்பு முதல் கற்பூரம்வரை எல்லாத் தேவைப் பொருள்களையும் சேகரித்ததாக மாளவ ஸ்ரீராகத்தில் "என்னாளு திரிகேதி" என்ற பாடலில் தியாகராஜர் கூறி யுள்ளார்.

தியாகராஜர் நடுவயதை அடைந்தபோதே மிக

உயர்ந்த சாகித்திய கர்த்தா என்ற அவருடைய பேரும் புகழும் வெகுதூரம் பரவிவிட்டன. ரசிகர்களும் சங்கீத மேதைகளும் பல எட்டிய பிராந்தியங்களிலிருந்தும் அவருக்கு அஞ்சலி செலுத்த வந்தனர். தங்கள் பிரதேசங்களில் அவருடைய பாடல்கள் பிரபலமாகிப் பாடப்படுவதாகவும் அவற்றை இயற்றிய மகானை நேரில் காண வேண்டுமென்ற அவா நெடுநாளைக்குப் பின் அப்போது நிறைவேறினதாகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

இப்படித் தியாகராஜரை நேரில் தரிசித்த பெரியாருள் கோபிநாத பட்டாச்சாரியாவும் ஒருவர். இவர் அக்காலத்தில் வட இந்தியாவில் கியாதியுடன் திகழ்ந்த பாடகர். இவர் வந்திருந்த சமயத்திலேதான் தியாகராஜர் "தாசரதே நீ ருணமு" என்று தொடங்கும் தோடி ராகப் பாடலை இயற்றினார். அனுபல்லவியில் "ஏ ரஸிக சிரோமணி (ராமா)! என் மனம் நிறையுமாறு தூரப் பிரதேசங்களிலும் என் பெயரை பிரகாசிக்கச் செய்தவரே..." என்கிறார். இதே கருத்து மற்றொரு பாடலிலும் பிரதிபலிக்கிறது. ஸஹானா ராகத்தில் "ஈ வசுத நீவண்டி" என்ற பாடலில் "பிரபுவே! என் புகழை வையம் முழுதும் நிலைநிறுத்தியவரே" என்று கூறுகிறார்.

தமது பாடல்கள் மாசிலா மணிகள், அருளிலே தோன்றி அருளாலே அவர்மூலம் வெளிவந்தவை என்பதையும் நன்கு உணர்ந்தவர். மேலே கண்ட தோடி ராகப் பாடல்களில் "வளமும் விடும்

அளிக்கும் இக் கீர்த்தனைகளை என் காதினில் ஓதிய பிரபுவே!" என்று மெய் சிலிர்க்கிறார். "போதிஞ்சின" என்ற சொல், 'பாடல்கள் இவர் காதில் ஓதப்பட்டன' என்ற கருத்தை வலியுறுத்து கிறது. முகாரி ராகத்தில் "சிந்திஸ்துன்னாடே" என்ற கிருதியிலும் தமது பாடல்கள் அருள்வாக்கு என்று சுட்டிக் காட்டுகிறார்.

ஸ்வரார்ணவம்

அதிர்ஷ்ட வசத்தால் அகப்பட்ட "ஸ்வரார்ண வம்" என்னும் புகழ்பெற்ற நூலைத் தியாகராஜர் கசடறக் கற்றுணர்ந்தார் என்பதை "ஸ்வரராக சுதாரஸ" என்ற சங்கராபரண ராகக் கிருதியின் சர ணத்தின் மூலம் அறியலாம். '"ஸ்வரார்ணவ"த் தின் ரகசியங்களை அறிந்துணர்ந்த தியாகராஜன்' என்று அதில் குறிப்பிடுகிறார். அந்த நூலிலே சிவன் - பார்வதி சம்பாஷணை மூலம் சங்கீத சாஸ்திரம் விளக்கப்பட்டது என்பதையும் அதே கிருதியிலிருந்து அறிகிறோம்.

தியாகராஜரின் பாடல்களிலிருந்து முதன் முதலாக நாம் அறியும் ராகங்களின் லட்சணங்கள் யாவை என்று கண்டுகொள்ள இந்நூலின் எஞ்சியுள்ள பகுதிகளே உதவுகின்றன. இந்நூலில் கீழ்க்கண்ட ரசமான சுலோகம் உள்ளது:

ஆத்ம மத்ய கதா : ப்ராண :
ப்ராண மத்ய கதோ த்வனி ।

த்வனி மத்ய கதோ நாத :
நாத மத்யே சதாசிவ : [1]

தியாகராஜர் காலத்தில் அவரது பெருமையைப் பற்றியே தஞ்சை முழுதும் பேச்சு. ஒரு உஞ்சு விருத்தி பாகவதரைக் காண அரசன் நேரில் வருவதும், புரோகிதர் குடும்பத்தில் பிறந்தவர் நடத்தும் பஜனையில் யதிகள் கலந்துகொள்வதும் வியப்பிற்கிடம் அல்லவா?

தியாகராஜர் மிகச் சிறந்த வைணிகர். வீணை யொலிக்கே உரித்தான சில கமகங்கள் அவர் இயற்றிய பாடல்களில் காணப்படுவதற்கு இதுவே காரணம். பூஜை அறையில் வீணையை வைத்திருப்பார்; அவ்வப்போது மீட்டி வாசிப்பார்.

ராம நாம ஜபம்

தியாகராஜர் சங்கீதப் பணியை மேற்கொண்ட போது சில ரசமான சம்பவங்கள் நிகழ்ந்தன. அவருக்குப் பதினெட்டு வயது முடியும் முன் காஞ்சீபுரத்திலிருந்து ஹரிதாஸ் என்ற ராம கிருஷ்ண யதீந்திரர் அவரை அணுகி, "96 கோடி முறை ராமநாமத்தை உச்சரி" என்றார். இதைத் தெய்வ வாக்காகக் கொண்டு இந்த புனித நோன்பை 21 ஆண்டில் செய்து முடித்தார்.

---

[1] உடம்பின் நடுவுள் உயிர்
உயிரின் நடுவுள் ஓசை
ஓசை நடுவுள் நாதம்
நாதத்துள் சதாசிவம்.

தினந்தோறும் சராசரி 1,25,000 முறை ராம நாமத்தை ஜபித்தார். அவரது மனைவியும் இதில் அவருடன் சேர்ந்து கொண்டார். பிற்பகல் வேளை களில் தக்ஷிணகைலாசம் என்ற ஆலயத்தின் மண்டபத்தில் அமர்ந்து ராமஜபம் செய்து வரு வார். இக்கோவில் திருவையாறு பஞ்சநதேசு வரஸ்வாமி கோவிலின் தென் பகுதியில் அமைந் துள்ளது. இந்த தக்ஷிண கைலாச கோவிலிலே தான் கி. பி. ஏழாம் நூற்றுண்டில் ("மாதர்பிறைக் கண்ணியானை" என்ற பதிகத்தில் கூறியவாறு) அப்பருக்குச் சிவபெருமானின் தரிசனம் கிட்டியது.

பத்திராசலம் ராமதாஸ், கபீர்தாஸ் போன்ற சிறந்த ராமபக்தர்கள் நமது நாட்டில் தோன்றி மறைந்திருக்கிருர்கள். ஆனுல் யாரும் 96 கோடி முறை ராமநாமத்தை ஜபித்ததாகத் தெரியவில்லை. இச் சாதனையைச் செய்து முடித்த தியாகராஜ ருக்கு ராமனின் அருள் கிட்டியதில் வியப்பில்லை.

இக்கடினமான தவத்தை செய்யுங்கால் ராம பிரான் பன்முறை அவர் முன் தோன்றித் தரிசன மருளினுர் என்று சொல்லப்படுகிறது. "ஏல நீ தய ராது" (அடாணு ராகம்), "கனு கொண்டினி" (பில ஹரி ராகம்) போன்ற கிருதிகள் இத்தகைய அனு பவங்களை யொட்டி இயற்றப்பட்டவை. ஒவ் வொரு கோடி ராம ஜபம் முடிவுற்றதும் அருள் கிட் டியதற்கு சான்ருகப் பல நிகழ்ச்சிகள் கூறப்படு கின்றன.

"நௌகா சரித்திரம்" என்ற இசை நாடகத்

தின் மூன்றும் கண்டத் துதிப்பாடலில் ராம கிருஷ்ண யதீந்திரருக்கு அஞ்சலி செய்கிறார் தியாகராஜர்.

நாரதர் அருளிய வரலாறு

ஒரு நாள் காலை துறவி ஒருவர் தியாகராஜரின் இல்லத்தை அடைந்து அவரது பாட்டைக் கேட்டாராம். காவேரி நதியில் நீராடியபின் உண்ண வருவதாகக் கூறி, தம்மிடமிருந்த சில சங்கீத நூல்களை வைத்துவிட்டுச் சென்றாராம். அவர் வருகைக்காகத் தியாகராஜர் நாள் முழுவதும் பட்டினியாகக் காத்திருந்தார். ஆனால் போனவர் மீளவில்லை. அன்றிரவு அவர் தியாகராஜரின் கனவில் தோன்றி தாம் நாரதர் என்றும், மேன் மேலும் அவர் அறிவும் ஊக்கமும் பெருக இசை நூல்கள் சிலவற்றை அவருக்கு அளிக்கவே வந்ததாகவும் தெரிவித்தார். விழித்தெழுந்த தியாகராஜர், முனிவர் விட்டுச் சென்ற கிரந்த நூற்கட்டுக்களைப் பிரித்துப் புரட்டிப் பார்த்தார். அவற்றுள் "ஸ்வரார்ணவ"மும் இருப்பதைக் கண்டு அக மகிழ்ந்தார். "நாரதீயம்" என்ற நூலும் அக் கட்டில் கிடைத்தது.

தியாகராஜர் இடையூற்றில் சிக்கியோ, இருள் சூழ்ந்தோ வழிகாணாது வருந்தியபோதெல்லாம், துறவி ஒருவர் அவர் முன் தோன்றி அவருக்கு வெற்றிப் பாதையைக் காட்டி அதில் அவரை இட்டுச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

உதாரணமாக, அவரது ஐந்தாவது வயதில் ஒரு கொடிய நோயால் உயிருக்கே ஆபத்து உண்டாயிற்று. குழந்தையிடம் தந்தைக்கு அதிக வாஞ்சை. முதல் இரண்டு பிள்ளைகளால் சற்று ஏமாற்றமுற்று தியாகராஜர் மீது அபார நம்பிக்கை வைத்திருந்த தந்தை துக்கத்திலாழ்ந்தார். நோயின் கடுமை எல்லை மீறிய சமயம் ஒரு துறவி வந்து, பையன் மறுநாள் குணமடைவான் என்று தேர்தல் சொல்லிப் போனாராம். அவர் வாக்கு உண்மையில் பலித்தது. இதைப் போலவே, "ஸ்வரார்ணவ"த்தைக் கொடுத்தவரும் ராம நாமத்தை 96 கோடி தரம் ஜபிக்கச் சொன்னவரும் சந்நியாசிகளே.

குணாதிசயங்கள்

அவர் முகம் ஞான ஒளி வீசும்; அவரைக் கண்டதும் மக்கள் எழுச்சியுறுவர். மெலிந்த, நெடிய உடம்பு — சுமார் 5 அடி 9 அங்குல உயரம். நீண்ட கழுத்து, சிவந்த மேனி. துளசிமாலை கழுத்தை அலங்கரிக்கும். உஞ்சவிருத்தி உடையில் தியாகராஜரைக் காண்பதே ஒரு பேரின்பம்; ஆன்மீக எழுச்சி.

தியாகராஜரின் வாழ்க்கை ரசமான, உணர்ச்சி மிக்க சம்பவங்கள் நிறைந்தது. தமது சீடர்களின் நடவடிக்கைகளை அவர் சமாளித்தது, நல்ல சங்கீதத்தை — அது யாரிடமிருந்து வரினும் — போற்றுதல், அசூயைக்காரரிடம் கூட பெருந்

தன்மையுடன் நடப்பது, இவையாவும் தியாக ராஜரின் உயர்வை எடுத்துக் காட்டுகின்றன. கோபம் வரினும் மரியாதை தவறுமல் பேசுவார்.

தியாகராஜர் வினயமும் எளிமையும் நிறைந் தவர்; எவரும் அவரை சுலபமாக அணுக முடியும். பிறர் முதுமையில் அடையும் அனுபவ அறிவை அவர் இளமையிலேயே பெற்றுவிட்டார். மானிட வாழ்க்கையில் தோன்றும் பல பிரச்னைகளுக்கு அவர் அளிக்கும் விடைகள் நேர்மையும் அன்பும் நிறைந்தவை. பற்பல சோதனைகளுக்கு உள்ளாகி அவற்றிலிருந்து களங்கமின்றி வெளிப்பட்ட அவ ரது வாழ்க்கையின் படிப்பினை இதுதான்: "எது வரினும் வருக. நேர்மைப் பாதையினின்றும் வழு வாது நடந்தால், கடவுள் கடாக்ஷம் உடன் வரும். அன்று நாம் இதனை உணரத்தவறினும் அவ் வன்பு நம்மை விட்டகலாது" என்பதே.

4

சில ரசமான சம்பவங்கள்

ஆனந்த பைரவி கதை

கர்நாடக சங்கீதம் பயின்ற எவருக்கும் ஒரு கேள்வி உதிப்பதுண்டு. அபூர்வ ராகங்களில் பல மேன்மையான கிருதிகளைப் படைத்த தியாகராஜர் ஏன் ஜனரஞ்சகமான ஆனந்த பைரவி ராகத்தில் மூன்று எளிய பாடல்களை மட்டுமே இயற்றியுள்ளார் என்பதுதான். இதற்கு விளக்கம் ஓர் அரிய நிகழ்ச்சியிலே காணலாம்.

சம காலத்தில் வாழ்ந்துவந்த பெரியாருள் சிறந்த பாடகரும், நடிகருமான திரிபுவனம்[1] சுவாமிநாத அய்யரும் ஒருவர். அடாணா அப்பய்யா, தோடி சீதாராமய்யா முதலியோரைப் போல் இப் பாடகரும் குறிப்பிட்ட ஒரு ராகத்தைத் தேர்ந்தெடுத்து அதைத் தமக்கே உரிதாக்கிக் கொண்டு, அதன் மூலம் கீர்த்தி பெற்றார். இதற்காக அவர் பொறுக்கியது ஆனந்தபைரவி ராகம். விரைவில் இந்த ராகத்திலே தாம் காட்டிய மேலான பாண்டித்யத்தால் மற்ற வித்வான்களின் கவனத்தைக் கவர்ந்தார்.

---

[1] திரிபுவனம், கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது. சுவாமிநாத அய்யர் அங்குள்ள கோயிலில் அர்ச்சகர். அவரை சுவாமிநாத குருக்கள் என்றும் அழைப்பதுண்டு.

ஒரு சமயம் அவர் உள்பட அவரது பொம்மலாட்டக்கோஷ்டி திருவையாறு வர நேரிட்டது. அங்கு இக் கோஷ்டியினர் தொடர்ந்து பல இரவுகள் தங்கள் பொம்மலாட்டத்தை மேடையேற்றி ஏராளமாகக் குழுமிய சபையோர்களை மகிழ்வித்தனர். இந் நாடகத்திற்குச் சென்ற தியாகராஜரின் சீடர்கள் சுவாமிநாத அய்யரின் ஆனந்தபைரவி ராக ஆலாபனையில் லயித்துவிட்டனர். அப்பாடகரின் ஆற்றலைப் பற்றி தங்கள் குருவான தியாகராஜரிடம் தெரிவித்தனர். அதைக்கேட்ட தியாகராஜர் தமது கருத்தை உடனே சொல்லவில்லை. சீடர்கள் சொல்வதில் உண்மை சிறிதேனும் இருக்கவேண்டும் என்று எண்ணி, தாமே ஒருவருக்கும் தெரியாமல் ஆட்டத்திற்குச் சென்று நேரில் அறியத் தீர்மானித்தார். அவ்வாறே ஓர் இரவு அங்கு போய் மறைவாக நின்றுகொண்டு, நடிகர் தமது அபிமான ராக ஆலாபனையைத் தொடங்கும் நேரத்திற்காகக் காத்திருந்தார். அக் கட்டமும் வந்தது. நடிகர் ராகத்தை வெகு விமரிசையாக ஆலாபனம் செய்தார். குணசீலரான தியாகராஜருக்கு ஆனந்தம் கட்டுக்கடங்காமல் பொங்கியது. நாடகம் முடிந்தவுடனேயே ஜனத்திரளின் வழியாக முண்டியடித்து நடிகர் அருகில் சென்று தமது பாராட்டுக்களைத் தெரிவிக்க விரைந்தார். சங்கீத மகானே அங்கு வந்திருப்பதைக் கண்டு சபையோர்களிடையே சல சலப்பு உண்டாயிற்று. எல்லோரும் ஒதுங்கி அவர் மேடையருகில் செல்ல வழி விட்டனர். அடுத்த கணம் சபை

யில் நிசப்தம் நிலவியது. குழுமியிருந்தவர்கள் பெரியாரின் பேச்சைக் கேட்க ஆவலுடன் காத் திருந்தனர். தியாகராஜர் அருகில் வருவதைக் கண்ணுற்ற நடிகரோ மேடையிலிருந்து கீழே குதித்து அவர் காலில் விழுந்து வணங்கி, மிக்க வினயத்துடன் "சுவாமி, தாங்கள் சபையில் உள்ளபோது நான் ராக ஆலாபனை செய்ய முனைந்தது அதிகப் பிரசங்கித்தனம். என்னை மன்னித்தருளுங்கள்" என்றார்.

தியாகராஜர் அளித்த பதில் இதுதான்: "என் சீடர்கள் ஆனந்தபைரவி ராக ஆலாபனையில் உங்களுக்குள்ள அதீத பாண்டித்யத்தைப்பற்றிக் கூறினார்கள். நான் நேரில் கேட்டுப் போகலாம் என்று வந்தேன். உங்களுடைய கச்சேரியைக் கேட்டுத் திருப்தியும் ஆனந்தமும் கொண்டேன். என் சீடர்கள் கூறியது முற்றிலும் உண்மை என் பதை அறிய மிக்க சந்தோஷம்."

தொடர்ந்து இடி முழக்கம்போல் சபையில் கை தட்டல் எழுந்தது. தியாகராஜரின் புகழ்ச்சியால் பெருமிதம் கொண்ட நடிகரோ, சற்றுத் தயங்கி, "புலவர் பெருமானே! உங்களிடம் ஒரு வரம் வேண்டுகிறேன்..." என்று தயங்கினார். "நீர் கேட்பதற்கு முன்பாகவே கொடுக்கிறேன்" என்றார் தியாகராஜர்.

"சுவாமி, நான் வேண்டும் வரம் இதுதான். இன்று முதல் ஆனந்தபைரவி ராகத்தில் பாடல் இயற்றுவதை தாங்கள் நிறுத்திவிடவேண்டும். வருங்காலத்தில் தியாகராஜர் ஆனந்தபைரவி

ராகத்தில் ஏன் அனேகப் பாடல்கள் பாடவில்லை என்ற கேள்வி எழும்போது இன்றைய நிகழ்ச்சியைக் கூறுவார்கள். என் பேரும் தலைமுறை தலைமுறையாக மக்கள் நினைவில் நிற்கும்."

நடிகரின் இந்த விபரீதமான துடுக்குச் சொல்லைக் கேட்டுக் குழுமியிருந்த மக்கள் வாயடைத்து நின்றனர். ஆனால் தியாகராஜரோ நடிகரின் சாதுர்யத்தை வியந்து, முகத்தில் புன்னகை தவழ, அவர் வேண்டுகோளை ஏற்றதாகத் தலையை அசைத்தார்.

அன்று கொடுத்த வரத்தை நிறைவேற்றும் பொருட்டு தியாகராஜர் ஆனந்தபைரவி ராகத்தில் இதன்பின் பாடல் இயற்றாதது மட்டுமல்லாமல் ஏற்கனவே அந்த ராகத்தில் செய்திருந்த மூன்று பாடல்களைத் தமது புதிய சீடர்களுக்குக் கற்பிக்கவேயில்லை. "ராம ராம நீ வாரமு" என்ற திவ்ய நாமக் கீர்த்தனை, "க்ஷீர சாகர விஹார" என்ற உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனை, "நீகே தெலியக" என்ற கிருதி, ஆகிய மூன்றும் இச் சம்பவத்திற்கு முன்னமேயே கற்றுக் கையாண்ட சீடர்களின் வழியாகத் தான் இன்று வழக்கில் இருந்து வருகின்றன.

நீ தயச்சே

தியாகராஜரின் பஜனைகளைத் தவறாமல் கேட்டு வந்த ஒரு தர்வான் (சேவகன்) தனக்கும் ஒரு பாட்டு சொல்லிக் கொடுக்கும்படி அவரை வேண்டினான். அவன் குரல் நயத்தைத் தெரிந்து கொள்

வதற்காக அவனுக்குத் தெரிந்த பாட்டு ஒன்றைப் பாடிக் காண்பிக்கும்படி தியாகராஜர் கேட்டார். பக்குவமற்ற கட்டைக் குரல் என்று அறிந்து யதுகுல காம்போதியில் "நீ தயராரே" என்ற சுலப மான கிருதியை இயற்றி அவனுக்குச் சிட்சித்தார்.

பிரார்த்தனை நிறைவேறியது

வாலாஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதர் (1781–1874) தியாகராஜரின் முக்ய சிஷ்யர்களில் ஒருவர். தியாகராஜரின் பாஸ்வெல் (Boswell) என்று கூடக் கொள்ளலாம். தொடக்கத்தில் அவர் சங்கீதக் கலையில் சற்று மெதுவாகத்தான் முன்னேறினார். தியாகராஜர் மனம் வருந்தி, தமது சீடருக்கு இசைஞானம் தந்தருளும்படி கடவுளைப் பிரார்த்தித்தார். மறுதினமே வெங்கடரமண பாக வதர் வியக்கத் தக்க முறையில் சங்கீத ஞானம் பெற்றார் என்று சொல்லப்படுகிறது. கூடிய விரை வில் தியாகராஜரின் அத்யந்த சிஷ்யராகிப் பெரும் புகழ் எய்தினார். குருவுடன் 26 வருடங்கள் பழகிய வரானதால், அருட் கவிஞரால் இயற்றப்பட்ட ஏராளமான பாடல்களைக் கற்று அவற்றைப் பரா மரித்தார் வலிமை பொருந்தி ஆஜானுபாகுவான ஆகிருதி படைத்திருந்ததால் சக மாணாக்கர்கள் இவருக்கு 'கணபதி' என்று செல்லப் பெயர் வைத்தனர். உடல்வலிவால் ஆகவேண்டிய வேலை ஏதேனும் குருவுக்காகச் செய்ய நேரிடும் போதெல்லாம் வெங்கடரமண பாகவதரைத்தான் ஏவுவார்கள்.

வீணை குப்பையர்

வீணை குப்பையர் தியாகராஜரிடம் கீர்த்தனைகள் கற்க வந்து சேர்ந்தபோது, தாம் வீணை வாசிப்பதில் கைதேர்ந்தவர் என்பதைத் தெரிவிக்காமல் மறைத்து வைத்திருந்தார். ஆனால் தியாகராஜருடைய வீணையை மீட்டி வாசிக்கும் வாய்ப்பு நேராதா என்று காத்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் தியாகராஜர் ஏதோ வேலையாக வெளியே போயிருந்தார். மற்ற சிஷ்யர்களும் வேறெங்கோ சென்றிருந்தனர். காத்திருந்த நற்சமயம் வந்துவிட்டது குப்பையருக்கு. குருவின் வீணையை எடுத்து அற்புதமாக வாசிக்க ஆரம்பித்துவிட்டார். வீணையின் இனிய கானத்தைக் கேட்டு மெய்சிலிர்த்த தியாகராஜரின் மனைவி, சமையற் கட்டிலிருந்து வெளியே வந்து பூஜை அறையில் எட்டிப் பார்த்தபோது அங்கு சிஷ்யன் குப்பையன்தான் வீணை வாசிக்கிறான் என்று கண்டு ஆச்சர்யமுற்றாள். அவருக்குத் தெரியாமல் மறைந்து நின்று அந்த நேர்த்தியான சங்கீதத்தை ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் திரும்பி வந்த தியாகராஜருடைய செவியில் வீணையின் இன்னிசை விழவே, வீட்டு வாயிலிலேயே நின்று, யார் இவ்வளவு ரம்மியமாக வாசிப்பது என்று வியந்தார். வீணை கானத்தில் லயித்துப்போய் தொடர்ந்து கேட்பதற்காக அப்படியே திண்ணையில் உட்கார்ந்துவிட்டார். கடைசியில், இந்த அபூர்வ வைணிகன்

யாராக இருக்கக்கூடும் என்று அறிய ஆவல் மேலீட்டால் உந்தப்பட்டு உள்ளே நுழைந்தார். குருவை எதிரில் கண்டதும் சிஷ்யர் எழுந்து, கை நடுங்க வீணையை இருந்த இடத்தில் வைத்து விட்டு, சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து, அவருடைய அனுமதியின்றி வீணையை எடுத்து வாசித்ததை மன்னித்தருளுமாறு வேண்டினர். ஆனால் தியாகராஜரோ புன்முறுவலுடன், "கவலைப்படாதே. நீ வீணையில் கைதேர்ந்த வித்வான் என்பதை முன்னமேயே ஏன் சொல்ல வில்லை?" என்று தேற்றினர்.

"தாரினி தெலுசுகொண்டி"

தாசரி என்ற பிரபல நாகஸ்வர வித்வானை திருவையாற்றுக் கோயில் உற்சவத்தின்போது வாசிக்க ஏற்பாடு செய்திருந்தனர். ஓர் இரவு சுவாமி ஊர்வலம் தெற்கு மாடத் தெருவில் திரும்பி திருமஞ்சன வீதியை (அங்குதான் தியாகராஜரின் இல்லம் இருந்தது) அடைந்ததும் நாகஸ்வர வித்வான் அங்கேயே நின்று ஆலாபனை செய்து "தாரினி தெலுசுகொண்டி" என்ற பாட்டை வாசிக்க ஆரம்பித்து விட்டார். நிசப்தமான இரவு வேளையில் சுத்த சாவேரி ராகத்தில் தியாகராஜரின் உன்னதப் படைப்பின் மணி மணியான சங்கதி களை நாகஸ்வர இசை அமுதமாகப் பொழிந்தது, கேட்போரைப் பரவசத்திலாழ்த்தியது. வீட்டி லிருந்தபடியே கேட்டுக்கொண்டிருந்த திருவை

யாற்றுப் பெரியார் அந்த அற்புத இசையில் உளம் உருக வெளியே வந்து வித்வானை அணுகி அவர் சாதனையைப் பாராட்டினார். சென்னைக்கு 6 மைல் வடக்கில் உள்ள திருவொற்றியூர் கோயிலுக்குத் தியாகராஜர் சென்றிருந்தபோது அவர் இயற்றிய ஐந்து கிருதிகளில் இதுவும் ஒன்று.

5

தியாகராஜரைக் காணவந்த மேதைகள்

அக்காலத்தில் புகழுடன் திகழ்ந்த கவிகள், புலவர்கள், இசை வல்லுநர்கள், துறவிகள், பிரபுக்கள் பலரும் தியாகராஜரை தரிசிக்க வருவதுண்டு. சிலர் அவருடன் நாட்கணக்காகவும், வாரக்கணக்காகவும் விருந்தினராகத் தங்கி விடுவதுண்டு. அம்மேதைகளுள் சிலர் அவரது கிருதிகளைக் கேட்கும்போது தாம் அனுபவிக்கும் ஆன்மீக எழுச்சியைப் பற்றிக் குறிப்புகள் எழுதியுள்ளார்கள். சிலர் பாடல்களும் இயற்றியுள்ளார்கள். அவற்றின் சாகித்யங்களில் இச் சந்திப்புக்களைப் பற்றி கூறியுள்ளார்கள்.

தூமு நரசிம்ம தாஸர்

தூமு நரசிம்ம தாஸர் தெலுங்கிலும் வடமொழியிலும் சிறந்த பக்திப் பாடல்கள் இயற்றிப் பிரசித்தி பெற்றவர். இப் பாடல்கள் பஜனைகளில் வெகுவாய்ப் பாடப்படுகின்றன. டி. பி. கோதண்டராம அய்யரின் பிரபல தொகுப்பான "பகவத் பஜன பத்ததி"யில் இவை வெளியிடப்பட்டுள்ளன. பஜனை இறுதியில் சூரியோதயத்திற்குச் சற்று முன் ஆஹிரி ராகத்தில் பாடப்படும் போரே மீ இண்ட்லகு" என்ற பாடல் தூமு நரசிம்ம தாஸர் இயற்றியது தான். அவர் ஸ்வ நாம முத்திரைக்காரர் (தம்

பெயர் பொருத்திப் பாடல்கள் இயற்றுபவர்). பிறந்தது 1790-ம் ஆண்டில். வசித்தது குண்டூரில். வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் பல புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்தார். ராமேச்வரத்திற்கு யாத்திரை செல்லும் வழியில் தியாகராஜருக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு திருவையாறு வந்தடைந்தார். இது நடந்தது 1821-ல். மகா காயகர் மனோரஞ்சிதமாய் தம் கிருதிகளைப் பாடுவதைக் காதாரக் கேட்டுப் பரவசமடைந்தார். நரசிம்ம தாஸரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. "தாங்களே பூலோக நாரதர்!" என்று கதறினார். இந்த அனுபவத்தை நிலைநிறுத்த தெலுங்கில் ஒரு ஸீஸ பத்யமும் இரு செய்யுள்களும் தாசர் எழுதினார். செய்யுளின் பொருள் இதுதான்:

ஆனந்த சங்கீர்த்தனவொலியைக் கேட்டேன்;
பாவ சித்தியும் சுத்த பக்தியும் பரவசமாக்கின;
பக்தர்களும் சிஷ்யர்களும் சூழக்கண்டேன்,
மாசிலாமணியான இன்னிசையைக் கேட்டேன்;
விநய சம்பத்தும், விவேகமும்,
ராம பக்தியின் மகிமையும் உணர்ந்தேன்.
நான்முகனும் அறியாத பேரின்பம் பெற்றேன்.
இவ்வுலகில் தியாகராஜரே எல்லா உண்மைக்கும் நன்
　　மைக்கும் உறைவிடம் என்று கண்டு கொண்டேன்;
திவ்யானந்தக் கடலில் நீந்தித் திளைத்தேன்.

மற்றொரு செய்யுளில் கூறுகிறார்:

"ராமபக்தியில் தியாகராஜருக்கு ஈடாக மற்றெவரையும் கூற முடியாது. தியாகராஜர் மட்டும்

பிரேமையுடன் ஒரு முறை 'ராமா' என்றழைக் கட்டும், ராமபிரான் உடனே எழுந்தருளி, 'தியாக ராஜா! இங்குள்ளேன்! உன் விருப்பம் யாது?' என்பார்.''

சிலநாள் கழித்து தூமு நரசிம்ம தாஸர் தியாக ராஜரிடம் விடை பெற்றுக்கொண்டு நவபசாணம், ராமேச்வரம், ஸ்ரீரங்கம், ஜம்புகேச்வரம், காஞ்சி புரம், திருப்பதி, காளஹஸ்தி ஆகிய ஊர்களுக் குச் சென்றபின் குண்டூர் திரும்பினூர்.

கோபிநாத பட்டாச்சாரியா

கோபிநாத பட்டாச்சாரியா ஹிந்துஸ்தானி சங் கீதத்தில் நிபுணர். காசியில் வசித்தார். ராமேச் வர யாத்திரை செல்ல அவர் திட்டமிட்ட பொழுது தியாகராஜரையும் பார்த்துவிட்டு வரும்படி கன வில் தெய்வீக வாக்கு கூறிற்றும். அதன்படி பட்டாச்சாரியா யாத்திரை செல்லும் வழியில் தஞ்சாவூர் சேர்ந்ததும் திருவையாற்றுக்கு விரைந்து சென்றூர். கவிஞர் பெருமானைச் சந்தித் தார். தியாகராஜர் அவரை அன்புடன் வரவேற் றூர். காசிக்கு வரும் அனேக யாத்திரீகர்கள் அவருடைய கிருதிகளைப் பாடக்கேட்டிருப்பதாக வும், அவற்றின் கர்த்தாவை நேரில் காண அள விலா ஆவல் கொண்டிருந்ததாகவும், ''அந்தப் பேரவா நிறைவேறும் நன்னுள் இந்நாள்'', என்று முடித்தார். மனம் நெகிழ்ந்த தியாகராஜர், ''தாசரதே நீ ருணமு'' என்ற தோடி ராக ஆதி தாளக் கிருதியை உருக்கத்துடன் பொழிந்தார்.

இப்பாடலின் அனுபல்லவியின் கருத்து: "ஏ ரஸிக சிரோமணி (ராமா)! என் மனம் நிறையுமாறு தூரப் பிரதேசங்களிலும் என் பெயரைப் பிரகாசிக்கச் செய்தவரே!" தமது பாடல்கள் பல பிராந்தியங்களிலும் வழக்கிலுள்ளன, தமது புகழ் வெகு தூரம் பரவியுள்ளது என்பதைத் தியாகராஜர் நன்கு உணர்ந்தவர். பிற்காலத்தில் இயற்றின "ஈவசுத நீவண்டி" (ஸஹானா ராக) கிருதியிலும் இதே கருத்தை வெளியிடுகிறார். அதன் சரணத்தில் "புவனமந்து கீர்த்திகல்க ஜேஸே" என்று வருகிறது. இவ்வாறு க்ஷணத்திலே அநாயாஸமாய்ப் பொழிந்த நாதகீதத்தால் கோபிநாத பட்டாச்சாரியா பரவசமடைந்தார். தியாகராஜரின் மதிப்பிற்குரிய விருந்தினராகத் திருவையாற்றில் சிறிது காலம் தங்கியிருந்தபின் தமது ராமேச்வர யாத்திரையைத் தொடர்ந்து நடத்தினார்.

கோபாலகிருஷ்ண பாரதியார்

கோபால கிருஷ்ண பாரதியார் "நந்தனார் சரித்திரம்" என்ற சங்கீத நாடகத்தை இயற்றுவதற்கு முன்பே, தமிழில் இனிய விடுதி கீர்த்தனைகளை ஆக்கிப் பேரும் புகழும் பெற்றார். எளிய சொற்களால் இனிய மெட்டில் அமைக்கப்பட்ட அவரது பாடல்களைப் பாடாதவர்கள் தமிழ் நாட்டில் அக்காலத்தில் எவருமில்லை என்றுகூடச் சொல்லலாம். "நந்தனார் சரித்திரம்" முதன் முதலில் 1861-ம் ஆண்டு வெளிவந்தது. அதற்கு ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்த சங்கீத

நாடகத்தை எழுதி முடித்திருக்கவேண்டும். இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே புகழுடன் திகழ்ந்த கவி கோபாலகிருஷ்ண பாரதியார் தியாகராஜரைக் கண்டு அவரது ஆசி பெற விரும்பினார். ஒரு சமயம் திருவையாறு சென்று தியாகராஜரின் இல்லத்தை அடைந்தார். தம்மைக் காண வந்தவரைத் தியாகராஜர் வரவேற்று, "தாங்கள் எந்த ஊரோ?" என்று வினவினார். "நான் மாயவரம்" என்று பாரதியார் கூறியதும், தியாகராஜர், "மாயவரமா? அப்படியானால் உங்களுக்கு அந்த ஊர் கோபாலகிருஷ்ண பாரதியைத் தெரியுமா? தமிழில் நல்ல பாடல்கள் இயற்றியுள்ளாரே?" என்று கேட்டார். திருவையாற்று மகானிடமிருந்து இவ்வித புகழுரையை பாரதியார் எதிர்பார்க்கவேயில்லை. இயல்பான அடக்கத்துடன், "ஐயா, அடியேன்தான் அந்தப் பாரதி" என்று சாந்தமாகப் பகன்றார். இதைக் கேட்ட தியாகராஜர் ஆனந்த பரவசமானார்

பிறர் இயற்றிய பாடல்களைப் பொறுமையுடனோ இகழ்ச்சியுடனோ நோக்காமல், அவர்களின் கலைத் திறனைப் பாராட்டிப் போற்றினார். சீடர் சுப்பராய சாஸ்திரி கல்யாணி ராகத்தில் புதிதாகத் தாமே இயற்றிய "நினு விநு கதி கந ஜகான" என்ற கிருதியை திருவையாற்று தர்மசம்வர்த்தினி ஆலயத்தில் தியாகராஜரின் முன்னிலையில் பாடியபோது அவர் சாஸ்திரியாரை மிகவும் மெச்சினார்.

மேலும், வீணை குப்பையரின் வர்ணங்களில் தியாகராஜர் எவ்வளவு தூரம் ஈடுபட்டிருந்தார் என்

பதும் அவர் மேன்மேலும் வர்ணங்களை இயற்ற எப்படி ஊக்குவித்தார் என்பதும் தெரிந்ததே. ஏராளமான தான வர்ணங்களை இயற்றிய பெருமை வீணை குப்பையரைச் சாரும்.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் தோற்றம் அவ்வளவு வசீகரமானதன்று. கோணல்கள் பல கொண்டது அவரது உருவம். அதனாலேதான் அவர் ஒரு கவிஞர் என்பதைத் தியாகராஜரால் ஊகிக்க இயலவில்லை.

இச் சந்திப்பு நிகழ்ந்த சமயம் தியாகராஜரின் சீடர்கள் ஆபோஹி ராகத்தில் ஒரு கிருதியைப் பாடிக்கொண்டிருந்தனர். பாட்டு முடிந்ததும் தியாகராஜர் பாரதியாரை "நீங்கள் ஆபோஹி ராகத்தில் ஏதேனும் பாட்டு இயற்றியிருக்கிறீர்களா?" எனக் கேட்டார். பாரதியார் விடை ஏதும் அளிக்கவில்லை. அதற்குள் சீடர்கள் தியாகராஜரின் மற்ற கிருதிகளைப் பாடத் தொடங்கி விட்டனர். அன்று இரவே பாரதியார், தற்போது அடிக்கடி பாடப்படும் "சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா" என்ற பாடலை ஆபோஹி ராகத்தில் ஆக்கி, மறுநாளே தியாகராஜருக்குப் பாடிக் காட்டினார். மேன்மையான அந்தத் தமிழ்ப் பாடலின் அழகில் ஈடுபட்டு, தியாகராஜர் பாரதியாரைப் பாராட்டி வாழ்த்தினார். அப்பாடல் முந்திய இரவிலேதான் தொடங்கப்பெற்று உருவாயிற்று என்று அறிந்த போது அவருக்கு பாரதியாரின் ஆக்கத்திறன்மீது மதிப்பு அதிகரித்தது. தியாகராஜரின் ஆசிகள் பாரதியாரின் வாழ்வில்

ஒரு திருப்பத்தை உண்டாக்கின. அதற்குப்பின் பாரதியார் ஏராளமான தமிழ்ப் பாடல்களை இயற்ற ஆரம்பித்தார்.

தியாகராஜரின் இல்லத்தில் நிலவிய ஆன்மீக அமைதியும், வயது முதிர்ந்த வாகீசர் போலிக் கௌரவமின்றி தமது சிஷ்யர்களுடன் சகஜமாய்ப் பழகி அவர்களோடு சேர்ந்து பாடிய முறையும் பாரதியாரின் மனதைக் கவர்ந்தன.

சுவாதித் திருநாளின் தூதுவன்—வடிவேலு

திருவாங்கூர் மகாராஜா சுவாதித் திருநாள், தியாகராஜர் இயற்றிய பாடல்களை அவரது சீடரான கன்னையா பாகவதர் பாடிக் கேட்டிருந்தார். ஆகவே தியாகராஜரை அரசர் நேரில் காண விரும்பியது இயல்பே. தஞ்சாவூரைச் சேர்ந்த வடிவேலு என்பவர் சுவாதித் திருநாளின் சபையில் ஆஸ்தான வித்வான். மகாராஜாவை விட மூன்று வயது பெரியவர். அவரை மகாராஜா தமது தூதுவராக அனுப்பி வைத்தார். வடிவேலுக்கு ஓரக்கண். சிறந்த பாடகரும் பிடில் வித்வானுமாய் விளங்கினார். பிடில் வாசிப்பதில் அவருக்குள்ள திறனை மெச்சி தந்தத்தால் இழைக்கப்பட்ட பிடிலொன்றை மகாராஜா அவருக்கு 1834-ல் பரிசளித்தார். மகாராஜாவின் நன்மதிப்பைப் பெற்றிருந்த வடிவேலு அவர் விருப்பப்படி திருவையாறு செல்ல ஒப்புக்கொண்டார். வடிவேலு ஏற்கனவே தியாகராஜரைப் பார்த்திருந்தார்: தியாகராஜருடைய சீடர் வீணை

குப்பையாரின் நண்பரும் கூட. ஆனால் தியாகராஜ ரிடம் நேரில் அறிமுகம் ஆனதில்லை.

வடிவேலு திருவையாறு வந்ததும், தியாகராஜர் வசித்த திருமஞ்சன வீதியிலேயே ஒரு வீட்டிலே தங்கினார். அந்த வீடு தியாகராஜரின் வீட்டிற்கு எதிர் சாரியில் காவிரி நதிக்கு அருகில் இருந்தது. தினந்தோறும் ஆற்றில் நீராடவும், சந்தியா வந்தனம் செய்யவும் தியாகராஜர் செல்லும் வழி யில் இருந்ததால் அவர் அந்த வீட்டைக் கடந்து தான் போகவேண்டும். வீட்டில் நிலை கொண்ட வுடன், பெரியாரின் கவனத்தைக் கவரும் பொருட்டு வடிவேலு தினமும் மாலை வேளைகளில் பாடுவதை வழக்கமாகக் கொண்டார். சந்தியா வந்தனத்திற்காகக் காவிரிக்குப் போகும் வழியில் தியாகராஜரின் காதில் அச் சங்கீதம் ஒலித்தது. முதல் நாளே அந்த இசை நயத்தில் ஆழ்ந்த தியாகராஜர் வடிவேலு வீட்டின் எதிரே சற்று நின்று பாட்டைக் கேட்டுவிட்டுத் திரும்பினார். மறு நாள் சற்று அதிகநேரம் நின்று கேட்ட தியாகராஜர், பாடகர் இசையில் மிக்க வல்லவர் என்பதை உணர்ந்தார். மூன்றாம் நாள் தியாக ராஜரால் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை; அவ்வளவு சோபையாகப் பாடுவது யார் என்பதை வீட்டினுள் சென்று காணத் துணிந்தார். தாம் தங்கியிருக்கும் வீட்டிற்குள் தியாகராஜர் வரு வதைக் கண்ட வடிவேலு சடாரென்று எழுந்து தியாகராஜரை வணங்கிவரவேற்று, "பெரியீர், இன்று என் வாழ்வில் ஒரு புனித நாள். தாங்கள்

சொல்லியனுப்பியிருந்தால் நான் உங்கள் இருப்பிடம் ஓடோடிவந்து பாடியிருப்பேன். நீங்களே என் இல்லத்தில் எழுந்தருளி என்னைக் கௌரவித்தது என் பாக்கியமே'' என்றார். தியாகராஜர் அவர் இசைத்திறனை மெச்சி, மறுநாள் தமது இல்லத்தில் வந்து பாடும்படி கேட்டுக்கொண்டார். வடிவேலுவும் மகிழ்ச்சியுடன் இசைந்தார்.

தாம் திருவையாற்றுக்கு வந்ததின் நோக்கத்தைப்பற்றி தியாகராஜரிடம் பிரஸ்தாபிக்க சரியான தருணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார் வடிவேலு. சுவாதித்திருநாள் இயற்றிய பல பாடல்களை அப்பெருங்கவியின் முன்னிலையில் பாடி சுலபமாக அவரது கருத்தைக் கவர்ந்தார். அடுத்த சந்திப்பில் வடிவேலுவின் மிக இனிமையான பாட்டைக்கேட்டு மெய்சிலிர்த்த தியாகராஜர் அவர் தம்மிடம் எது வேண்டுமாயினும் கேட்கலாம் என்று வாக்குக் கொடுத்துவிட்டார். காத்திருந்த தருணம் கிட்டிவிட்டதாக நினைத்து வடிவேலு இதமான குரலில் மன்றாட ஆரம்பித்தார்: ''திருவாங்கூர் மகாராஜா தங்களை சந்திக்க விரும்புகிறார். ஐயா, தாங்கள் தயைகூர்ந்து...'' பேச்சை முடிக்கும் முன்னரே தமது வேண்டுகோளை அறிந்து தியாகராஜர் திடுக்குறுவதைக் கண்டார். சற்று நேரம் ஆழ்ந்து யோசித்துவிட்டு தியாகராஜர் இவ்வாறு பதிலுரைத்தார்: ''நாங்கள் கட்டாயம் சந்திப்போம். நான் கொடுத்த வாக்கு நிறைவேறும். ஆனால் அந்த சந்திப்பு வைகுண்டத்தில் நிகழும்; இம்மையில் அல்ல. அவர்

வழிபடும் பத்மநாபரும் நான் வழிபடும் ராமரும் ஒருவரே.''

தாம் திருவையாறு வந்த நோக்கம் நிறைவேறாத வடிவேலு வருந்தினார். சுவாதித்திருநாள் மகாராஜாவிடம் நடந்ததைக்கூற விரைவிலே திரும்பிச் சென்றார்.

அக்காலத்தில் ரயில் கிடையாது. போக்கு வரத்து வசதிகள் மிகக் குறைவு. மேற்குறிப்பிட்ட சம்பவம் மகாராஜா காலமாவதற்கு சுமார் பனிரண்டு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. இருப்பினும், முடிமன்னரும் இசை மன்னரும் சந்திக்கவில்லை. சுவாதித்திருநாள் தியாகராஜரைக் காணத் தாமே நேரில் வந்திருக்கக் கூடும். ஆனால் அப்போதைய அரசியல் நிலைமையில் அரசருக்குத் தமது சமஸ்தானத்தை விட்டு வெளியேற முடியாமற் போய்விட்டது. சுவாதித்திருநாள் 1846-ம் ஆண்டு டிஸம்பர் 25-ம் தேதி (புஷ்ய சுக்ல அஷ்டமி) அன்றும், தியாகராஜர் சில நாட்களுக்குப்பின் ஜனவரி 6-ம் தேதி, 1847, (புஷ்ய பஹுள பஞ்சமி) அன்றும் மறைந்தனர்.

கோவிந்த மாரார் (1798 - 1843)

கோவிந்த மாரார் 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த சிறந்த பாடகர். திருவாங்கூரிலுள்ள மூவாற்றுப்புழை தாலுக்காவில் ராமமங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர். திருத்தமான லயஞானமட்டுமன்றி இழைந்து உருளும் சாரீரமும்

பெற்றவர். பல்லவியை ஆறுகாலங்களில் அனுயாச மாகப் பாடுவார். இதன் காரணமாக இவரை ஷட் கால கோவிந்த மாரார் என்று அழைப்பார்கள். ஷட்கால கோவிந்த தாஸ் என்றும் சொல்லு வார்கள். தென்னிந்திய சங்கீத சரித்திரத்தில் "ஷட்" என்ற விருதைப் பெற்ற மற்ற இரு வித் வான்கள் சேலம் நரசய்யாவும் விஜயநகரம் வீணை வெங்கடரமண தாசரும் ஆவர். வெங்கடரமண தாசரை 'ஷட்கால சக்ரவர்த்தி' என்று அழைப்ப துண்டு.

கோவிந்த மாரார் பக்திமான். முதுமையில் காசி யாத்திரை கிளம்பினார். திருவனந்தபுரம் சென்று சுவாதித் திருநாள் அரண்மனையில் மதிப்பிற்குரிய விருந்தினராகத் தங்கினார். பிறகு மீண்டும் யாத் திரை தொடங்கி, 1842ம் ஆண்டில் ஆலயத்தில் தொழுது தியாகராஜரையும் தரிசிக்கும் பொருட்டு திருவையாறு வந்து சேர்ந்தார். தியாகராஜரின் பாடல்களை முதன் முதலில் திருவாங்கூரில் பிரபல மாக்கியவர் அவரது சீடர் கன்னையா பாகவதரே யாகும். அவற்றைக் கேட்டதும் சுவாதித் திருநாள், பரமேச்வர பாகவதர் (1815 - 1892) உள்பட பல பெரியாரும் திருவையாற்று மகானை நேரில் காண அவாக் கொண்டனர்.

கோவிந்த மாரார் தம்புராவில் ஏழு தந்திகள் இருந்தன. மந்தாரத்தைத் தவிர மற்ற மூன்று தந்திகள் இரட்டிக்கப்பட்டிருந்தன. இந்த வாத்தியம் இரு பஞ்சமங்களும், இரு அனுசாரணி களும் ஒரு மந்தாரமும் கொண்டது. மாராரின்

இசை வல்லமையை உணர்த்தும் வகையில் வாத்தியத்தின் முனையை ஒரு கொடி அலங்கரித்தது. தாமே தம்புரா சுருதி கூட்டித் தாளமும் போட்டுக் கொண்டு பாடுவார். பழைய இலக்கியங்களில் கூறப்படும் ஏகல்லன் என்றே இவரைச் சொல்லலாம். தம்புராவை வலது கைவிரல்களால் மீட்டிக் கொண்டே இடது கையால் கஞ்சிராவைத் தட்டுவார். இடதுகாலின் முதல் இரு விரல்களுக்கிடையில் கஞ்சிராவை இறுக்கி வைத்து இடது கையால் வாசிப்பார்.

கோவிந்த மாரார் தியாகராஜரின் இல்லத்திற்கு வந்த தினம் ஏகாதசி. இரவு பஜனை நடந்து கொண்டிருந்தது குழுமியிருந்த பக்தர்களுடன் தாமும் போய் உட்கார்ந்து கொண்டார். பூர்வ பாகம் முடிந்ததும் வழக்கம் போல் முக்ய அதிதிகள் சில பாடல்கள் பாடும்படி அழைக்கப் பட்டனர்; (வந்திருப்பவர்கள் பாடின பிறகுதான் திவ்யநாம சங்கீர்த்தனத்துடன் பஜனையின் உத்தர பாகம் ஆரம்பமாகும்). மாராரையும் பாடும்படி வேண்டினர். கொடி சூடிய அவரது ஏழுதந்தித் தம்புரா ஏற்கனவே மற்றவர்களின் கவனத்தைக் கவர்ந்திருந்தது. தம்புராவை மீட்டிய வண்ணம் ஜயதேவரின் "சந்தன சர்ச்சித" என்ற நான்காம் அஷ்டபதியைப் பந்துவராளி ராகத்தில் ஆதி தாளத்தில் பாட ஆரம்பித்தார். (ஹரி தினமான ஏகாதசிக்குப் பொருத்தமான பாடல்).

தொடக்கத்திலேயே பாட்டை அதி அதி விளம்பித (முதல்) காலத்தில் எடுத்தார்.

இவர் ஏன் இவ்வளவு மந்த கதியிலே தொடங்கு கிறார் என்று மற்றவர் எண்ணியபோதிலும் தாள எண்ணிக்கைகளிடையே உள்ள காலப் பிரமாண சுத்தத்தைக் கவனித்து வியந்தனர். மாராரோ, தாம் எடுத்த பாட்டை அடுத்தடுத்து அதி விளம்பிதம் (இரண்டாம் காலம்), விளம்பிதம் (மூன்றாம் காலம்), மத்யம காலம் (நான்காம் காலம்), த்ருத காலம் (ஐந்தாம் காலம்) என்று கொண்டுபோய் அதி த்ருத காலத்தை (வேகத்தின் உச்சியான ஆறாம் காலத்தை) அடைந்தார். ஐந்தாம் காலத்தை அடைந்தபோதே சபையோர் அனை வரும் மெய் மறந்தனர். ஆறாம் காலத்தில் பாடிய போது தியாகராஜரே அவரது லய சம்பத்தைக் கண்டு திகைத்து விட்டார். இந்த இசை மேதையை கௌரவிக்கும் வகையில் தாம் ஏற் கனவே இயற்றிய "எந்தரோ மஹானு பாவுலு" என்ற பஞ்சரத்னக் கிருதியை ஸ்ரீராகத்தில் பாடும்படி தியாகராஜர் தம் சீடர்களைப் பணித்தார். பஞ்ச ரத்னக் கிருதிகளை உஞ்சவிருத்தி பஜனைகளில் பாடுவது வழக்கமாகையால் சீடர்களுக்கு அவை மனப்பாடம். வாலாஜாப்பேட்டை சீடர்கள் எழுதி வைத்த தியாகராஜ சரித்திரத்தில் இந்நிகழ்ச்சி யைக் குறிப்பிடுகையில் 'ப்ரஸ்துதிம்ப' என்ற பதத்தை உபயோகித்துள்ளனர். 'அவரைச் சிறப் பாக போற்றுவதற்காக' என்பதே இதன் பொருள். தியாகராஜரால் 'மகானுபாவர்கள்' (பெருமக்கள்) என்று குறிப்பிடப்பட்டவர்களுள் கோவிந்த மாராரும் ஒருவர் என்று இதிலிருந்து ஊகிக்க

முடிகிறது. கோவிந்த மாரார் தியாகராஜரின் தனிப்பட்ட விருந்தினராகச் சில நாள் தங்கிவிட்டுத் தம் யாத்திரையைத் தொடர்ந்தார். பண்டார் பூரில் 1843-ல் காலமானார்.

ஷட்கால கோவிந்த மாரார் பஜனையில் பாடிய போது வாலாஜாப்பேட்டை கிருஷ்ணஸ்வாமி பாகவதர் தாம் கின்னரி எனப்படும் தந்திக் கருவியை வாசித்தார்.

6

காஞ்சி, திருப்பதி முதலிய தலங்களுக்கு யாத்திரை

காஞ்சீபுரம்

காஞ்சீபுரத்தைச் சேர்ந்த உபநிஷத் பிரும்மம்[1] தியாகராஜரை தமது இருப்பிடத்திற்கு வருமாறு அழைத்து 1834-ம் ஆண்டு ஒரு ஸ்ரீமுகம் (கடிதம்) எழுதினார்.

தியாகராஜருக்கு,

ஆசீர்வாதம். பூர்வாச்ரமத்தில் உன் தந்தையும் நானும் சகபாடிகள் (ஒரே குருவின் சீடர்கள்); ஆத்ம நண்பர்கள். நீ இயற்றியுள்ள மணிப் பாடல்களைப் பலர் பாடிக் கேட்டிருக்கிறேன். உன்னை நேரில் காண விரும்புகிறேன். எனக்கு வயது நூற்றுக்குமேல் ஆகிவிட்டதால் நான் திருவையாறு வந்து உன்னைப் பார்க்க அசக்தனாக இருக்கிறேன். நீ காஞ்சி வந்து என் அதிதியாகத் தங்கி வரதராஜப் பெருமாளின் அனுக்கிரகத்தைப் பெறுவாய் என்று நம்புகிறேன்.

---

[1] உபநிஷத் பிரும்மம் நூற்றெட்டு உபநிஷத்துக்களை ஆராய்ந்து விரிவுரை எழுதியுள்ளார். இதை சென்னை அடையாற்றிலுள்ள பிரும்ம ஞான சபையார் இப்போது பிரசுரித்திருக்கிறார்கள். அவர் விட்டுப்போன அரிய ஓலைச்சுவடிகளை காஞ்சீபுரத்திலுள்ள உபநிஷத் பிரும்மேந்திர மடத்தில் இன்றும் காணலாம். உபநிஷத்துகளை விளக்குவதில் பிரபலமானவர். 115 வயது வரை வாழ்ந்தார்.

தாம் காஞ்சிக்குப் போவதாக அறிவித்ததும் அவரது சீடர்கள் அதே பயணத்தில் மற்றும் பல தலங்களுக்கும் சென்று வரவேண்டும் என்று விரும்பினர். யாத்திரைத் திட்டமொன்று வகுக்கப் பட்டது. குருவை சிஷ்யர்கள் பல்லக்கில் தூக்கிச் சென்றனர். தஞ்சை ராமராவ், வாலாஜாப் பேட்டை வெங்கடரமண பாகவதர், தில்லஸ் தானம் ராம அய்யங்கார், சோஜிரி சீதாராமய்யா ஆகிய பிரதம சீடர்கள் யாத்திரையில் உடன் சென்றனர். கோஷ்டியினர் வழியில் தங்க வசதிகள் செய்வதன் பொருட்டு சில சீடர்கள் முன்னதாகவே புறப்பட்டனர். தியாகராஜர் யாத் திரையை முடித்துத் திருவையாறு திரும்பிய பிறகே உமையாள்புரம் கிருஷ்ண பாகவதரும் சுந்தர பாகவதரும் சீடர்களானர்கள். வாலாஜாப் பேட்டை கிருஷ்ணஸ்வாமி பாகவதரும் கஞ்சீரா வித்வான் ராதாகிருஷ்ண அய்யரும் இப் பிரயா ணத்தின்போது சீடர்களாகச் சேர்ந்துகொண்ட னர்.

தியாகராஜர் காஞ்சீபுரம் வந்து உபநிஷத் பிரும் மத்தின் அதிதியாக சிலநாள் தங்கினர். அவர் நிகழ்த்திய பஜனைகளுக்கு ஏராளமான பேர் வந் திருந்து பாடல்களைக் கேட்டு பக்திப் பரவசத்தி லாழ்ந்தனர். இன்றே தூய்மையுற்றோம் என்ற உணர்வு பாட்டைக் கேட்ட ஒவ்வொருவர் உள்ளத் திலும் பொங்கியது. வரதராஜ (ஸ்வரபூஷணி ராகம்), வரத நவநீதாஸ (ராக பஞ்சாரம்) ஆகிய இரு பாடல்களும் அவர் காஞ்சியில் தங்கியபோது

வரதராஜக் கடவுளைத் துதித்துப் பாடப்பட்டவை தாம்.

வாலாஜாப்பேட்டை

அடுத்தாற்போல் வாலாஜாப்பேட்டைக்குச் சென்றார். அங்கு 12 நாள் தங்கி, வாலாஜாப் பேட்டை வெங்கடரமண பாகவதரின் பஜனைக் கூடத்தில் பஜனைகள் நிகழ்த்தினார். தங்கியிருந்த கடைசிநாள் அன்று ஒரு மாபெரும் ஊர்வலத்தில் அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது வாலா ஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதரின் சிஷ்ய ரான மைசூர் சதாசிவ ராவ் "**தியாகராஜஸ்வாமி வெடலின**" என்று தொடங்கும் அழகிய தோடி ராகக் கிருதியில் இக்காட்சியை வர்ணித்து நிரந் தரமாக்கியுள்ளார்.

திருப்பதி

அதை அடுத்து தியாகராஜர் திருப்பதி சென்றார். அக்காலத்தில் யாத்ரீகர்கள் மலைப் படிக்கட்டு களில் ஏழு மைல் முழுதும் நடந்தே உச்சிக்குச் செல்லவேண்டும். அவரும் கோஷ்டியாரும் அதி காலையில் படி ஏறத்தொடங்கி முற்பகல் சுமார் 11 மணிக்குத்தான் மலையுச்சியை அடைய முடிந் தது. ஏழுமலையானைத் தரிசிக்கப் பேராவல் கொண் டிருந்த தியாகராஜர் உடனே திருக்குளம் சென்று திருநீராடி ஜபங்களை முடித்துக்கொண்டு ஆலயத் துக்கு விரைந்தார். உடன் வந்தவர்கள் அப்

போதுதான் மெதுவாகக் கோவிலுக்குப் புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். தியாகராஜர் கர்பக்கிருகத்தை அடைந்தபோது சந்நிதியில் திரை போடப்பட்டு விட்டதால் சுவாமி தரிசனம் கிடைக்காமல் ஏமாற்றமடைந்தார். தமது அகந்தையே திரை ரூபமாகத் தரிசனம் கிடைக்கவொட்டாமல் தடுத்துவிட்டது என்று எண்ணினாற்போல, மனம் வணங்கி "தெர தீய்யக ராதா" என்ற பாடலை கௌளிபந்து ராகத்தில் ஆதி தாளத்தில் பாடினார். இப்பாடலின் முதல் வரிகள் அவரது மன வருத்தத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. பாடி முடித்ததும் அற்புத நிகழ்ச்சிபோல் திரை விலகிவிட வெங்கடேசப் பெருமாளின் ஜகத்ஜோதியான தரிசனம் அவருக்குக் கிடைத்தது என்று சொல்லப்படுகிறது.

கட்டுக்கடங்காத ஆனந்தம் பொங்க அக்கணமே "வெங்கடேச நின்னு" என்ற பாட்டை மத்யமாவதி ராகத்தில் ஆதி தாளத்தில் பாடினார். இதற்குள் பக்தர்கள் பலர் குழுமி இந்த அற்புதத்தைக் கண்ணாரக் கண்டனர். கோவில் அர்ச்சகர்களும் ஒன்று கூடி வாக்கேயகாரருக்கு மரியாதை செலுத்தினர். அதன் பிறகுதான் அன்று அங்கு பாடியவர் மகான் தியாகராஜரே என்று மக்கள் அறிந்தனர். "தரமா நீ மஹிமபொகட" என்ற கல்யாணி ராக ரூபகதாளப் பாடல் திரு வெங்கடேச்வரரைப் போற்றிப் பாடிய மற்றொரு கிருதி.

புத்தூர் [1]

திருப்பதியை விட்ட பிறகு ஒரு நாள் காலை புத்தூர் வழியாகச் செல்ல நேர்ந்தது. (புத்தூர் தற்போது சென்னை – பம்பாய் ரயில்பாதையில் திருத்தணிக்கும் ரேணிகுண்டாவிற்கும் இடையில் ஒரு ரயில் நிலையமாக இருக்கிறது). ஓரிடத்தில் ஒரு பிணத்தைச் சுற்றிக் கும்பல் கூடியிருப்பதையும் ஒரு மாதும் குழந்தையும் விம்மி விம்மி அழுதுகொண்டிருப்பதையும் கண்டார். விசாரித்ததில் விபரம் தெரிந்தது: யாரோ யாத்ரிகன் மனைவியுடனும் மகனுடனும் முதல் நாள் இரவு வந்து சேர்ந்து, தங்குவதற்காக எல்லா வீட்டுக் கதவையும் தட்டினனும். ஆனல் யாரும் கதவைத் திறக்கவில்லை. புலியொன்றுதான் கதவைத் தட்டுவதாகப் பயந்து சும்மாயிருந்தனர். (இன்றும் புத்தூருக்கு அருகில் உள்ள காட்டில் புலிகள் நடமாடுகின்றன). யாத்ரீகன் கிராமத்துக் கோயிலில் இரவைக் கழிக்க நிச்சயித்தான். நேரமாகிவிட்டதால் கோவில் காவற்காரன் கதவுகளை மூடி உள்ளிருந்தே தாழ்ப்பாள் போட்டுக் கொண்டுவிட்டான். மதில்மேல் ஏறி உள்ளே குதித்து தாழ்ப்பாளைத் திறந்து தன் மனைவி குழந்தையுடன் கோவிலில் தூங்கலாம் என்று யாத்ரீகன் நினைத்தான். அங்கு ஒரே கும்மிருட்டு. மதில்மேல் ஏறி உள்ளே குதித்தபோது கிணறு ஒன்றில் தவறி விழுந்து மூழ்கி விட்டான். கவலை

[1] மாண்டவன் மீண்டும் உயிர்பெற்றது.

யோடு, ஆனால் பொறுமையாக, வெளியே காத்திருந்தாள் மனைவி. நடு நிசி நெருங்கிவிட்டது. கூக்குரலிட்டால் தொல்லையே நேரும் என்று பயந்து, நகராமல், பேசாமல் இருந்தாள். அசதி மேலீட்டால் அப்படியே தூங்கிவிட்டாள்.

மறுநாள் காலை கோவில் கதவுகள் திறக்கப்பட்ட போது, கிணற்றில் பிணம் மிதப்பதைக் கண்டு கோவில் சிப்பந்திகள் துணுக்குற்றனர். அதை எடுத்துக் கோவிலுக்கு வெளியே கொண்டுவந்தனர். கிராம வாசிகள் பரிதவிக்கும் மாதைத் தேற்றிக் கொண்டிருந்தனர். அத்தருணத்தில் தான் தியாகராஜரும் அவரது கோஷ்டியினரும் அவ்வழியாகச் செல்ல நேரிட்டது.

இறந்தவன் பெயர் சேஷய்யா என்று அறிந்தார் தியாகராஜர். அவன் கழுத்தில் துளசி மணி மாலை இருந்ததால் அவன் விஷ்ணு பக்தன் என்று கண்டார். தம் சிஷ்யர்களை **"நா ஜீவாதாரா"** (பிலஹரி ராகம் — ஆதி தாளம்) என்ற கிருதியைப் பாடும்படி பணித்தார். பாட்டு முடிந்ததும் துளசி தீர்த்தம் தெளித்தார். உடனே இறந்தவன் தூங்கி எழுபவன்போல் விழித்தெழுந்தான் என்று சொல்லப்படுகிறது. சேஷய்யா, தியாகராஜரை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவருடைய ஆசி பெற்றுத் தன் பிரயாணத்தைத் தொடர்ந்தான்.

பிலஹரி ராகம் புத்துயிர் ஊட்டும் என்று கருதப் படுகிறது. காலைவேளைதான் இதைப் பாட உகந்த நேரம். **"நா ஜீவாதாரா"** என்ற கிருதி உயி

ருட்டும் 'மகண'த்துடன் தொடங்குகிறது; பில ஹரி ராகத்தின் சாரம் இதில் தோய்ந்துள்ளது.

சோழங்கிபுரம்

சோழங்கிபுரத்தில் **"நரஸிம்ஹ நனு ப்ரோவவே"** (பிலஹரி ராகம் — சாபு தாளம்), **"ஸ்ரீ நரஸிம்ஹ மாம் பாஹி"** (பாலரஞ்சனி ராகம் — தேசாதி தாளம்) ஆகிய இரு கிருதிகளை அவ்வூரில் கோயில் கொண் டுள்ள லக்ஷ்மிநரசிம்ஹ ஸ்வாமியைத் துதித்துப் பாடினார். ஆஞ்சனேயஸ்வாமி கோவிலில் ஆஞ்ச னேயரைப் போற்றி **"பாஹி ராமதூத"** (சாத்வித மார்கினி ராகம் — ரூபக தாளம்) என்ற கிருதியை இயற்றிப் பாடினார்.

பிலஹரி ராகத்தில் ஆதி தாளத்தில் **"நீவேகானி நன்னெவருகாதுரா"** என்ற பாடல் காளஹஸ்தி அருகில் ஓடும் ஸ்வர்ணமுகி ஆற்றின் கரையில் எழுந்தருளியுள்ள பெருமானைத் துதித்து இயற்றப் பட்டது.

சென்னை

கோவூர் சுந்தரமுதலியார் என்ற தனவான் சென்னைப் பட்டணத்தில் வசித்து வந்தார். அவர் காஞ்சி உபநிஷத் பிரும்மத்தின் சிஷ்யர்; வீணை குப்பய்யரின் நண்பர். தியாகராஜர் காஞ்சீ புரத்தில் தங்கியபோது உபநிஷத் பிரும்மம் அவருக் குத் தியாகராஜரை அறிமுகப்படுத்தியிருந்தார். உபநிஷத் பிரும்மத்தின் விருப்பப்படி தியாக ராஜர் சென்னைக்குச் சென்று சுந்தர முதலி

யாரின் விருந்தினராகத் தங்கினர். சென்னை நகரில் சுந்தர முதலியாரின் விசாலமான மாளிகை ஜார்ஜ் டவுனில் நெ. 4, பந்தர் தெருவில் அமைந்திருந்தது. தியாகராஜர் அங்கு முதலியாரின் மதிப்பிற்குரிய விருந்தினராகத் தங்கி தொடர்ந்து எட்டு நாட்கள் தேவகாந்தாரி ராகச் சாயல்களை விஸ்தரித்து விளக்கினர். முதல் ஆறு நாட்கள், ஆலாபனையின் ஒவ்வொரு கட்டம் முடிந்ததும் தேவகாந்தாரி ராகத்தில் தமது கிருதிகளுள் ஒன்றைப் பாடினர். ஏழாம் எட்டாம் நாட்களில் இதே ராகத்தில் பல்லவி பாடி, தொடர்ந்து நிரவல், கற்பனை ஸ்வரங்களை உதிர்த்தார். சபையிலுள்ள ரசிக சிகாமணிகளும் சங்கீத வித்வான்களும் இந்தக் கர்ணமிருதத்தைப் பருகி அக மகிழ்ந்தனர்.

தியாகராஜர் சென்னையில் தங்கியபோது திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி ஸ்வாமி கோவிலுக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள பெருமாளைத் துதித்து ஒரு கிருதி இயற்றினர். தோடி ராகத்தில் ஜம்ப தாளத்தில் அமைந்த இப் பாடல் "ஸ்வாமி வெடலின பார்த்தஸாரதினி கனரே" என்று தொடங்குகிறது.

திருவொற்றியூர்

தமது சீடர் வீணை குப்பய்யரின் வேண்டுகோளுக்கு இணங்க, தியாகராஜர் சென்னைக்கு வடக்கே ஆறு மைலில் உள்ள திருவொற்றியூருக்குச் சென்றார். இது ஆதி சங்கரர் (கி. பி

ஏழாம் நூற்றுண்டு), திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், பட்டினத்தார் முதலியோரின் விஜய்த்தால் புனிதம் பெற்ற தலமாகும். தியாகராஜர் அங்கு திருபுரசுந்தரி ஆலயத்தை நெருங்கிய போதே அவ்விடத்தின் சாந்நித்யத்தில் மனதைப் பறிகொடுத்து, இப்போது பிரபலமாயுள்ள திருவொற்றியூர் பஞ்சரத்னக் கிருதிகளைப் பாடினுர்.

இப் பஞ்சரத்னம் கீழ்க்கண்ட ஐந்து பாடல்களைக் கொண்டது:

ஸுந்தரி நீ திவ்ய	கல்யாணி
ஸுந்தரி நன்னிந்தரிலோ	பேகடை
தாரினி தெலுஸுகொண்டி	சுத்த சாவேரி
ஸுந்தரி நினு வர்ணிம்ப	ஆரபி
கன்ன தல்லி	ஸாவேரி

இந்த ஐந்து பாடல்களும் தியாகராஜரின் பழுத்த சங்கீத ஞானத்தை எடுத்துக் காட்டுகின்றன.

கோவூர்

கோவூர் சுந்தர முதலியாரின் விண்ணப்பத்திற்கு இசைந்து தியாகராஜர் சென்னைக்கு மேற்கே $13\frac{1}{2}$ மைலில் உள்ள கோவூருக்கு விஜயம் செய்தார். புராதனக் கோவிலுடன் கூடிய ஓர் அழகிய கிராமம் இது. மூர்த்தியின் பெயர் சுந்தரேசுவரர்; அம்மன் சௌந்தர்யநாயகி. கோவூர் பஞ்சரத்னத்தை தியாகராஜர் இங்குதான் பாடினுர்.

இப் பஞ்சரத்னத்தில் அடங்கிய ஐந்து பாடல்களாவன:

சம்போ மஹாதேவ	பந்துவராளி
ஈ வஸுத நீவண்டி	சஹானு
கோரி ஸேவிம்ப ராரே	கரஹரப்பிரியா
நம்மி வச்சின	கல்யாணி
ஸுந்தரேச்வரருனி	சங்கராபரணம்

திருடர் வழிமறிப்பு

கோஹுரை விட்டுப் புறப்பட்டு தியாகராஜரும் கோஷ்டியாரும் திருவையாறு திரும்ப பயணம் தொடங்கினர். கோஹுர் சுந்தர முதலியார், தமது பக்தி மேலீட்டின் காரணமாக, 1,000 பொற் காசுகளை ஒரு பையில் கட்டி தியாகராஜருக்குத் தெரியாமல் அவரது பல்லக்கில் வைத்துவிட்டார். அப்பணம் ராம நவமி, ஸ்ரீ ஜயந்தி, வைகுண்ட ஏகாதசி ஆகிய பண்டிகைகளைக் கொண்டாடும் பொருட்டே என்று கூறி, அதை ஏற்க மறுக்கக் கூடாதென்று முதலியார் சீடர்களை வேண்டினர். அவர்களும் வாய்திறவாது சம்மதித்தனர்.

பிரயாணத்தின்போது ஒரு நாள் இரவு காட்டுப் பாதை வழியாகச் செல்ல நேர்ந்தது. நாகப் பாளையம் கள்வர்கள் சஞ்சரிக்கும் பிரதேசம் அது. கவண்களால் கூழாங்கற்களை வீசுவதில் பெயர் போன பக்காத் திருடர்கள். தியாகராஜரையும் கோஷ்டியினரையும் அக் கள்வர்கள் சூழ்ந்து கொண்டுவிட்டனர். சீடர்கள் பல்லக்கிலிருந்த தியாகராஜரின் காதில் "கள்வர்" என்று மெல்லிய குரலில் அறிவித்ததும், அவர், "திருடர்களிடம்

நமக்கு என்ன பயம்? அவர்கள் எடுத்துப் போகும்படி நம்மிடம் ஒன்றுமில்லையே!" என்றார்.

சுந்தர முதலியார் கொடுத்த ஆயிரம் பொற்காசுகள் கொண்ட பணமுடிப்பு பல்லக்கில் இருப்பதை வீணை குப்பய்யர் ரகசியமாகச் சொன்னார்.

"பணப்பையை கள்வர்களிடம் தூக்கி எறியுங்கள்" என்றார் தியாகராஜர்.

தஞ்சாவூர் ராமராவ் உடனே குறுக்கிட்டு, "இல்லை, குருவே! பொற்காசுப்பை ராம நவமி, ஸ்ரீ ஜயந்தி, வைகுண்ட ஏகாதசி உற்சவங்களின் போது செலவழிப்பதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. அது கடவுள் சொத்து. அதைத் தூக்கி எறிய நமக்கு உரிமையில்லை" என்றார்.

"அது கடவுள் சொத்தானால் அதைக் காப்பது அவர் பொறுப்பு. நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்று சொல்லிவிட்டுத் தியானத்தில் ஆழ்ந்து விட்டார் தியாகராஜர். சில நிமிஷங்கள் கழித்து "முந்து வெனுக னிரு" (தர்பார் ராகம் — ஆதிதாளம்) என்ற பாட்டைப் பாட ஆரம்பித்தார் — இதன் பல்லவி பின்வரும் சுலோகத்தை நினைவுறுத்துகிறது:

அக்ரத : ப்ருஷ்டதஶ்சைவ பார்ஶ்வதஶ்ச
மஹாபலௌ
ஆகர்ணபூர்ண தன்வானௌ ரக்ஷேதாம் ராமலக்ஷ்ம
ணௌ

பாடலின் கருத்து இதுதான்: "ஹே ராமா! முரனையும் கரனையும் வதைத்தவரே! வாருங்கள்,

லக்ஷ்மணருடன் ஓடி வாருங்கள், எங்களைக் காப்பாற்ற.”

மறு கணமே இரண்டு வாலிபர்கள் அங்கு தோன்றி கள்வர்கள் மீது அம்புமாரி பொழிந்து அவர்களை விரட்டினர் என்று சொல்லப்படுகிறது. அதன்பின் அவ்விருவரும் பல்லக்கின் அருகில் வந்து “திருடர்பயம் ஒழிந்தது” என்று மெல்லக் கூறி மறைந்து போயினராம்.

பிரயாண கோஷ்டி தொடர்ந்து சென்று கொண்டே இருந்தது. விடியற்காலையில் ஒரு கிராமத்தை அடைந்து சத்திரத்தில் தங்கினர். இரு வாலிபர்களின் தீரச் செயலால் திகைத்தோடிய கள்வர்கள், பயண கோஷ்டியை சற்று தொலைவில் பின்தொடர்ந்தனர். சூர்யோதயத்திற்குப்பின் அவர்கள் தியாகராஜரை அணுகி, தங்கள் மீது அம்பு மாரி பெய்த அவ்விரு இளைஞர்கள் யார் என்று வினவினர்.

தியாகராஜரால் ராம-லக்ஷ்மணரையன்றி வேறு யாரையும் எண்ண முடியவில்லை. மெய்மறந்து ஆனந்தபரவசராய் “எந்த பாக்யமோ” (ஸாரங்கா ராகம் — ஆதி தாளம்) என்ற பாடலைப் பொழிந்தார். இதன் அனுபல்லவியில், ராமர் எப்படித் தம்மிடம் வந்து பேசி ஆபத்தினின்று காப்பாற்றினர் என்பது வர்ணிக்கப்பட்டுள்ளது. இளைஞர் உருவில் வந்த தெய்வங்களை நேரில் காணும் பேறு பெற்ற அக்கள்வர்களைப் பாராட்டினர். அவர்களுக்கு ராம நாம உபதேசம் செய்து புதுவாழ்வும் வழங்கினர்.

7

இறுதிக் காலம்

விஸ்வாவசு வருஷ முற்பகுதியில் (1845-ம் ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதத்தில்) தியாகராஜரின் மனைவி காலமானார். அடுத்த பிராபவ ஆண்டிலேயே அவரும் திருமால் திருவடி அடைந்தார். அவர் மறைவும் ஓர் அற்புதமாய் நிறைவேறியது.

இறுதிநாள்

சித்தியடைவதற்கு முந்திய தசமி இரவில் கனவொன்று கண்டார். அதை "கிரிபைநெல" என்ற சஹானா ராகக்கிருதியில் என்றும் அழியாவண்ணம் வர்ணித்துள்ளார். பத்து நாட்களில் தாம் திருமாலின் திருவடித்தாமரை சேர்வார் என்று அவர் கனவில் கண்டார். மறுநாள், அதாவது புஷ்ய சுத்த ஏகாதசி, இரவு பஜனை முடிந்ததும் கூடியிருந்தோரை நோக்கி, "வருகிற பஹுளபஞ்சமி தினத்தன்று ஓர் அற்புதம் இங்கு நிகழப்போகிறது; எல்லோரும் அன்று வருவீர்களாக," என்று கூறினார். சதுர்த்தியன்று, அதாவது தமது மறைவிற்கு முந்திய நாள், அவர் பரமஹம்ஸ பிரும்மானந்தேந்திர சுவாமி என்ற யோகியை தமக்கு சன்னியாசம் தரும்படி கோரினார். தியாகராஜர் ஏற்கனவே ஜீவன் முக்தரென்றும் ஆகவே சன்னியாசம் பெறத் தேவையில்லை என்றும் கூறி முதலில்

சுவாமிகள் மறுத்துவிட்டார். ஆனால் தியாகராஜர் மீண்டும் வற்புறுத்தவே, அவருக்கு சன்னியாசம் வழங்கி நாதப்பிரும்மானந்தா என்ற பெயரும் சூட்டினார். அதன்பின் புதுத்துறவி சபையோரை நோக்கி, "நாளை முற்பகல் 11மணிக்கு என்னை அழைத்துக் கொள்வதாக ராமபிரான் வாக்குறுதி தந்துள்ளான். எனவே இது முதல் இடைவிடாது பஜனை நடக்கட்டும்" என்று உரைத்தார். இச் செய்தி காட்டுத் தீபோல் பரவி, ஏராளமான மக்கள் அடிகளின் மறைவைக் காண மறுநாள் காலையில் கூடிவிட்டனர். அவ்வமயம் அவர் அருகில் கீழ்க் கண்ட சீடர்கள் இருந்தனர்:- உமையாள்புரம் கிருஷ்ண பாகவதர், சுந்தர பாகவதர், தில்லஸ் தானம் ராம அய்யங்கார், அய்யா பாகவதர், வாலாஜாப்பேட்டை கிருஷ்ணஸ்வாமி பாகவதர். தவிர, காஞ்சி வெங்கடாத்ரி சுவாமியும் தாலுக்கா தாசில்தார் சியாமராவும் வந்திருந்தனர். சித்தி அடைந்த நாளன்று காலையில் பின்வரும் இரண்டு பிரபல பாடல்களை இயற்றிப் பாடினார்:

பரமாத்முடு — வாகதீச்வரி ராகம் (ஆதி தாளம்)
பரிதாபமு — மனோஹரி ராகம் (ரூபக தாளம்)

அடிகள் யோக சமாதியில் அமர்ந்திருந்தார். குறிப்பிட்ட கணத்தில், பெரியாரின் சிரசிலிருந்து ஓர் அமானுஷ்யமான சப்தம் எழுவதைச் சபை யோர் கேட்டனர். மறு கணம் ஒளிப் பிழம்பு அவரது உச்சியினின்றும் பளிச்சிட்டு மெதுவாக மேல் எழும்பி வானத்தில் வடக்கு நோக்கிச் செல்வதைக் கண்டனர்.

திருமேனியைப் பூரண மரியாதைகளுடன் இன்னிசை முழங்க காவிரியாற்றங்கரைக்கு எடுத்துச் சென்று, அவரது குரு ஸொண்டி வெங்கட ரமணய்யாவின் சமாதிக்கு அருகில் அன்பர்கள் அடக்கம் செய்தனர்.

சமாதி உற்சவம்

திருவையாறு இரண்டு பெரிய உற்சவங்களுக்குப் பெயர்போனது: (1) ஏப்ரல் மாதம் நடக்கும் சப்த ஸ்தான உற்சவம்; (2) ஜனவரியில் நடக்கும் தியாகராஜ உற்சவம். ஒவ்வொரு ஆண்டும் பொது மக்களும் பக்தர்களும் ஆயிரக்கணக்காகத் திரண்டு திருவையாறு வந்து இந்த உற்சவங்களில் கலந்துகொள்கிறார்கள்.

தியாகராஜர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு பிருந்தாவனம் எழுப்பப்பட்டது. சிவ பக்தர்களுக்கு லிங்கம் பிரதிஷ்டை செய்வதும் விஷ்ணு தாசர்களுக்கு பிருந்தாவனம் அமைப்பதும் வழக்கு. பிருந்தாவனம் என்பது செங்கல் கற்களால் சுமார் நாலடி உயரச் சுவர்களால் ஒரு சதுர கட்டிடம் கட்டி, இதனுள் புனிதமான துளசிச் செடியை நட்டு வளர்ப்பதாம்.

தியாகராஜர் சித்தி அடைந்ததிலிருந்து ஒவ்வொரு வருஷமும் புஷ்ய பஹுள பஞ்சமி தினத்தன்று உமயாள்புரம் சீடர்கள் சமாதிக்குச் சென்று உரிய ஆராதனை செய்து வந்தனர். அச்சமயங்களில் உணர்ச்சி மேலீட்டால் அவர்களுக்கு தொண்டை அடைத்துக்கொண்டு கண்களில்

கண்ணீர் பெருகி பாடமுடியாமற் போய்விடுவதுண்டாம்.

1907-ம் வருஷத்திலிருந்து சமாதி உற்சவம் புதிய பாணியில் உருவாயிற்று. நரஸிம்ம பாகவதரும் பஞ்சு பாகவதரும் பிடில் மகாவித்வான் திருச்சி கோவிந்தசாமிப் பிள்ளையின் ஆதரவுடன் இந்த உற்சவத்தைச் சிறப்பாகக் கொண்டாட ஆரம்பித்தனர்.

காலஞ்சென்ற பங்களூர் நாகரத்னம்மாள் தாம் தேடிய பொருளனைத்தையும் சமாதியின்மேல் ஒரு நேர்த்தியான ஆலயம் எழுப்புவதில் செலவிட்டார். 1925-ல் கட்டப்பட்ட அந்த ஆலயத்தை அதன் பிறகு மேலும் சீர்படுத்தி விஸ்தரித்துள்ளனர்.

ஆலயக் கட்டிடப் பணியை மேற்பார்வை செய்தவர் காலஞ்சென்ற திருவொற்றியூர் எஸ். ஏ. ராமஸ்வாமி அய்யர். அவர் கீழ்க்கண்ட சுவையான செய்தியைக் கூறுகிறார்:

அஸ்திவாரம் எழுப்ப ஆற்றங்கரையில் சமாதியைச் சுற்றி எவ்வளவு ஆழம் தோண்டவேண்டும் என்று அவரால் முடிவு கட்ட இயலவில்லை. உள்ளூர் விற்பன்னர்களைக் கலந்தாலோசித்தார்; அவர்களாலும் நிச்சயிக்க முடியவில்லை. வருவது வரட்டும் என்று தைரியமாக பள்ளம் தோண்டும் வேலையை ஆரம்பித்து விட்டார். ஒரு குறிப்பிட்ட ஆழம் எட்டியதும் அதிலிருந்து சாம்பிராணி மணம் கமழ்ந்தது. அதற்குமேல் ஆழம் பறிக்கக்கூடாது என்பதற்கு இது ஒரு எச்சரிக்கை என்று எண்ணி

ளுர். அந்த ஆழத்திலிருந்து அஸ்திவாரத்தை எழுப்பி ஆலயத்தைக் கட்டினுர்.

காலஞ்சென்ற சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர் தம் நண்பர் ஒருவருடன் ஒருநாள் மாலை சமாதிக்கு அருகில் காவிரிக்கரையில் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்தார். திடீரென "ராம், ராம்" என்ற ஒலியைக் கேட்டார். அருகில் வேறு யாரும் இல்லை. அச்சப்தம் சமாதியிலிருந்தே எழுவதுபோல் தோன்றியது.

தியாகராஜரின் வருடாந்திர உற்சவத்தை 1940 லிருந்து தியாகப்பிரும்ம ஆராதனை மஹோத்சவ சபை திருவையாற்றில் மிக்க சிறப்புடன் நடத்தி வருகிறது. வருஷந்தோறும் அங்கு கூடும் ஆயிரக் கணக்கான சங்கீத வித்வான்கள், ரசிகர்கள், பக்தர்கள் ஆகியோரை வாவென்றழைத்துப் பவித்திரமாக்கும் க்ஷேத்திரமாகத் திகழ்கிறது சமாதி

8

தியாகராஜரின் சிஷ்ய பரம்பரை

இந்திய சரித்திரத்திலேயே மற்ற எந்த வாக்கேய காரரைக் காட்டிலும் தியாகராஜருக்கு சீடர்கள் அதிகம். அவருடைய சீடர்களும், சீடர்களின் சீடர்களும் சிறந்த பாடல்கள் இயற்றியும், திறமை யாய்ப் பாடியும் புகழ் பெற்றனர். தியாகராஜருக் குப் பின் பிரகாசித்த பல முக்கியமான சங்கீத மேதைகள் அவரது சிஷ்ய பரம்பரையில் தோன் றியவர்களேயாகும்.

தியாகராஜரின் சீடர்கள் குருவின் பாடல்களை சிரத்தையுடனும் ஆர்வத்துடனும் கற்றனர். அவரிடம் சிக்ஷை தொடங்கிய சிலர் ஏற்கனவே பல்லவி வித்வான்களாகப் பெயரெடுத்தவர்கள். அவர்கள் அனைவரும் பக்தி சிரத்தையுடன் அவரது உயர்ந்த பாடல்களைப் பயின்றனர். சிலர் தியாகராஜரின் திவ்ய நாமக் கீர்த்தனைகளில் பாண்டித்தியம் பெற்றனர். வீணை குப்பய்யரும் வாலாஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதரும் குருவுடன் நீண்ட காலம் இருந்து பணிவிடை புரிந்தனர். கல்விமானும், சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் ஆழ்ந்த ஞானமுள்ளவருமான வெங் கடரமண பாகவதர் தியாகராஜர் பாடுவதைத் தம் கையால் எழுதி அவரது அன்பையும் ஆசியையும்

பெற்ருர். எல்லாச் சீடர்களும் குருவின் பெருமை யையும் அவருள் ஒளிரும் தெய்விகச் சுடரையும் உணர்ந்திருந்தனர்.

தியாகராஜர் தமது சீடர்களை அவரவர்களின் சுருதி, தண்மை, ஸ்தாயி எல்லை, குரல் வளம் முத லிய சாரீர குணங்களைப் பொருத்து பிரிவுபடுத்தி ஒவ்வொரு பிரிவினர்க்கும் இருநூறு கிருதிகளுக்கு மேற்படாமல் சிக்ஷித்தார். இவ்வாறு தாம் இயற் றிய ஆயிரக்கணக்கான பாடல்களை சிஷ்ய கோஷ்டியினரிடையே பகிர்ந்தளித்தார். அவர் காலத்தில் அச்சுக் கலை நம் நாட்டில் பரவவில்லை. கிருதிகளை ஞாபகத்தில் வைத்து முறையாகப் பாட ஒரே வழி அவற்றைத் திரும்பத் திரும்பப் பாடிப் பழகுவதுதான். சிறந்த சீடர்கள் மேலும் மேலும் பாடல்களைக் கற்றுக்கொள்ள தியாகராஜ ரும் பிரதம சீடர்களும் போதிய வாய்ப்பும் ஊக்க மும் அளித்தனர். இவ்விதமாகத்தான் வாலாஜாப் பேட்டை சீடர்களும் உமயாள்புரம் சீடர்களும் ஏராளமான தியாகராஜ கீர்த்தனைகளைப் பாடமாக் கிக் கொண்டனர்.

ஆரம்ப காலத்தில். ஸ்வர ஞானம் கைகூடாது வரும் சீடர்களுக்கு தியாகராஜர் தாமே படிப்படி யாகத் திவ்ய நாமகீர்த்தனைகளைக்கற்பித்து, முறை யாக அவர்கள் கடினமான பாடல்களைக் கற்றுப் பாடப் பயிற்சியளித்தார். ஆனால் பிற்காலத்தில், ஸ்வர ஞானமின்றி வருபவர்களை ஆரம்பப் பயிற்சி பெறுவதற்காக முதலில் வேறு ஒரு பாடகரிடம் அனுப்பி வைத்தார். இந்த மாணவர்கள் பயிற்சி

முடிந்ததும் தியாகராஜரிடம் கிருதிகளைக் கற்க வருவார்கள். "ஸ்ரீ ஜானகி மனோஹர" என்று தொடங்கும் ஈசமனோஹரி ராகக் கிருதியைத்தான் தியாகராஜர் முதன் முதலில் தம் சீடர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது வழக்கமாம். குருவின் வழியைப் பின்பற்றி உமயாள்புரம் சீடர்களும் தங்கள் சீடர்களுக்கும் அப்பாடலையே முதலில் சிக்ஷித்தனர்.

மாலை வேளைகளில் தியாகராஜர் நடத்திய இசை வகுப்புக்களால் பலர் பெரும் பயனடைந்தனர். தியாகராஜரின் பாடல்கள், ஸ்வரக் குறிப்புகளுடனும், ராகக் குறிப்புகளுடனும் அவர் காலத்தில் எழுதப்பட்ட பல கையெழுத்துப் பிரதிகளில் இன்றும் காணப்படுகின்றன. அவற்றை ஆராயுங்கால் இன்னும் பல சிறந்த பாடல்கள் பிரபலப்படவிருக்கின்றன என்று தெரிகிறது.

தியாகராஜருக்கு ஏராளமான சிஷ்யர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவை இருந்தது. குரு அவ்வப்போது உதிர்க்கும் அருட் பாடல்களை உடனுக்குடன் எழுதி வைத்ததோடல்லாமல் அவர்கள் அப் பாடல்களைப் பிறர்க்கும் கற்பித்தனர். வீட்டில் பஜனைகள் நடக்கும்போதும், வீதியில் (உஞ்சவிருத்தி) பஜனைகள் நிகழும்போதும் சில சீடர்கள் தம்புரா, மிருதங்கம், ஜாலரா முதலிய பக்க வாத்யங்களை இசைத்தனர். இத்தகைய இசையுரு வழிபாட்டில், திறமை வாய்ந்த பாடகர்களும் பக்க வாத்யக்காரர்களும் எவ்வளவு பெரிய பங்குகொள்ள முடியும் என்பது பஜனை செய்பவர்களுக்குத்தான் தெரியும். சில சீடர்கள் குரு

பூஜைக்காக தினமும் புஷ்பம் சேகரித்து வருவர்; மற்றும் சிலர் அவரது வீட்டு வேலைகளை கவனித்து வருவர். எவரும் குரு தக்ஷிணை என்று பணம் கொடுப்பது கிடையாது.

ஓரிரு பாடல்களாவது இயற்றாத நாட்கள் அவர் வாழ்வில் மிகவும் அரிதாம். ஏகாதசி தினங்களில் அவர் அந்தர்முக ஆனந்தத்தில் ஆழ்ந்திருக்கும் போது அதிகமான பாடல்கள் வெளிவரும். சிஷ்ய வித்வான்கள் அவற்றை உடனுக்குடன் ஸ்வரக் குறிப்புகளுடன் எழுதிக் கொள்வார்கள். இவ் வகையில் அவை மறைந்துவிடாது காத்துவைக் கப்பட்டன. இப்படிச் சேர்ந்த பாடல்கள் அவர் வாழ்வின் பிற்பகுதியில் கணக்கிலடங்காமற் போகவே அவற்றை நன்கு கற்றுணர்ந்த சீடர் களை, தாம் வகுத்த திட்டப்படி, அவ்வப்போது பாடச் சொல்லிக் கேட்பார். தமக்குப் பிடித்தமான பாடல்களை பஜனைகளில் அடிக்கடி பாடச் சொல் லிக் கேட்பார். தாம் இயற்றிய மற்ற பாடல்களை வருஷத்திற்கு ஒரு முறைதான் திரும்பப்பாடிக் கேட்டிருக்கக் கூடும்.

தியாகராஜரின் சீடர்களுள் தஞ்சாவூர் ராம ராவ் வயதில் மூத்தவர்; நடைமுறையில் அவ ருக்கு அந்தரங்கக் காரியதரிசியாகப் பணி புரிந் தார். குருவின் பிரயாணத் திட்டங்களை வகுத் துக் கொடுத்து, அவருடன் சென்றார். காஞ்சீபுரம், திருப்பதி, வாலாஜாப்பேட்டை, சோழங்கிபுரம், சென்னை, திருவொற்றியூர், கோவூர் ஆகிய தலங் களுக்கு தியாகராஜர் தமது யாத்திரையை மேற்

கொண்டபோது, ராமராவும் கூடவே சென்றார். இக் காரணத்தால் மற்ற சிஷ்யர்கள் அவரை 'சின்ன தியாகராஜர்' என்று குறிப்பிடுவதுண்டு. குருவிடம் ஏதாகிலும் தெரிவிக்கவேண்டும் என்றால் அவர்கள் ராமராவின் மூலமே அதைச் செய்து முடிப்பார்கள். ராமராவ் தியாகராஜரைவிட இரண்டு வயது இளையவர். மற்றொரு ருசிகரமான சங்கதி: வாலாஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதர் சற்று ஸ்தூல சரீரமும் வலிமையும் கொண்டவராக இருந்ததால் அவரை சக சீடர்கள் 'கணபதி' என்று குறிப்பிடுவார்கள். உடல் வலிமையால் ஆகவேண்டிய வேலை ஏதேனும் செய்ய நேரிடும்போதெல்லாம் அவர்கள் 'கணபதி' யிடம்தான் ஒப்படைப்பார்கள்.

தியாகராஜரைப் பெயர் சொல்லாமல் 'அய்யாவாள்' என்ற பட்டப் பெயராலேதான் குறிப்பிடுவார்கள்.

வாலாஜாப்பேட்டை சீடர்கள்

தியாகராஜரின் முப்பது பிரபல சீடர்களுள், வாலாஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதரையும் அவர் மகன் வாலாஜாப்பேட்டை கிருஷ்ணஸ்வாமி பாகவதரையும் பிற்காலத்தவர் மறவாது நினைவிற் கொள்வர். தியாகராஜரின் மாசிலாமணியான பாடல்களைக் காப்பாற்றி மக்களிடை பரப்பியதின் மூலம் கர்னாடக சங்கீதத்திற்கே பெரும் பணி ஆற்றியுள்ளார். வெங்கடரமண பாகவதர் சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் புலமை மிக்கவர். குரு

ருட்டும் 'மகண'த்துடன் தொடங்குகிறது; பில ஹரி ராகத்தின் சாரம் இதில் தோய்ந்துள்ளது.

சோழங்கிபுரம்

சோழங்கிபுரத்தில் "நரஸிம்ஹ நனு ப்ரோவவே" (பிலஹரி ராகம் — சாபு தாளம்), "ஸ்ரீ நரஸிம்ஹ மாம் பாஹி" (பாலரஞ்சனி ராகம் — தேசாதி தாளம்) ஆகிய இரு கிருதிகளை அவ்வூரில் கோயில் கொண்டுள்ள லக்ஷ்மிநரசிம்ஹ ஸ்வாமியைத் துதித்துப் பாடினார். ஆஞ்சனேயஸ்வாமி கோவிலில் ஆஞ்ச னேயரைப் போற்றி "பாஹி ராமதூத" (சாத்வித மார்கினி ராகம் — ரூபக தாளம்) என்ற கிருதியை இயற்றிப் பாடினார்.

பிலஹரி ராகத்தில் ஆதி தாளத்தில் "நீவேகானி நன்னெவருகாதுரா" என்ற பாடல் காளஹஸ்தி அருகில் ஓடும் ஸ்வர்ணமுகி ஆற்றின் கரையில் எழுந்தருளியுள்ள பெருமானைத் துதித்து இயற்றப் பட்டது.

சென்னை

கோவூர் சுந்தரமுதலியார் என்ற தனவான் சென்னைப் பட்டணத்தில் வசித்து வந்தார். அவர் காஞ்சி உபநிஷத் பிரும்மத்தின் சிஷ்யர்; வீணை குப்பய்யரின் நண்பர். தியாகராஜர் காஞ்சீ புரத்தில் தங்கியபோது உபநிஷத் பிரும்மம் அவருக் குத் தியாகராஜரை அறிமுகப்படுத்தியிருந்தார். உபநிஷத் பிரும்மத்தின் விருப்பப்படி தியாக ராஜர் சென்னைக்குச் சென்று சுந்தர முதலி

யாரின் விருந்தினராகத் தங்கினார். சென்னை நகரில் சுந்தர முதலியாரின் விசாலமான மாளிகை ஜார்ஜ் டவுனில் நெ. 4, பந்தர் தெருவில் அமைந்திருந்தது. தியாகராஜர் அங்கு முதலியாரின் மதிப்பிற்குரிய விருந்தினராகத் தங்கி தொடர்ந்து எட்டு நாட்கள் தேவகாந்தாரி ராகச் சாயல்களை விஸ்தரித்து விளக்கினார். முதல் ஆறு நாட்கள், ஆலாபனையின் ஒவ்வொரு கட்டம் முடிந்ததும் தேவகாந்தாரி ராகத்தில் தமது கிருதிகளுள் ஒன்றைப் பாடினார். ஏழாம் எட்டாம் நாட்களில் இதே ராகத்தில் பல்லவி பாடி, தொடர்ந்து நிரவல், கற்பனை ஸ்வரங்களை உதிர்த்தார். சபையிலுள்ள ரசிக சிகாமணிகளும் சங்கீத வித்வான்களும் இந்தக் கானாமிருதத்தைப் பருகி அகமகிழ்ந்தனர்.

தியாகராஜர் சென்னையில் தங்கியபோது திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி ஸ்வாமி கோவிலுக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள பெருமாளைத் துதித்து ஒரு கிருதி இயற்றினார். தோடி ராகத்தில் ஜம்ப தாளத்தில் அமைந்த இப்பாடல் "ஸ்வாரி வெடலின பார்த்தஸாரதினி கனரே" என்று தொடங்குகிறது.

திருவொற்றியூர்

தமது சீடர் வீணை குப்பய்யாரின் வேண்டுகோளுக்கு இணங்க, தியாகராஜர் சென்னைக்கு வடக்கே ஆறு மைலில் உள்ள திருவொற்றியூருக்குச் சென்றார். இது ஆதி சங்கரர் (கி. பி

ஏழாம் நூற்றுண்டு), திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், பட்டினத்தார் முதலியோரின் விஜய்த் தால் புனிதம் பெற்ற தலமாகும். தியாகராஜர் அங்கு திருபுரசுந்தரி ஆலயத்தை நெருங்கிய போதே அவ்விடத்தின் சாந்நித்யத்தில் மனதைப் பறிகொடுத்து, இப்போது பிரபலமாயுள்ள திரு வொற்றியூர் பஞ்சரத்னக் கிருதிகளைப் பாடினுர்.

இப் பஞ்சரத்னம் கீழ்க்கண்ட ஐந்து பாடல் களைக் கொண்டது:

ஸுந்தரி நீ திவ்ய	கல்யாணி
ஸுந்தரி நன்னிந்தரிலோ	பேகடை
தாரினி தெலுஸுகொண்டி	சுத்த சாவேரி
ஸுந்தரி நினு வர்ணிம்ப	ஆரபி
கன்ன தல்லி	ஸாவேரி

இந்த ஐந்து பாடல்களும் தியாகராஜரின் பழுத்த சங்கீத ஞானத்தை எடுத்துக் காட்டுகின்றன.

கோவூர்

கோவூர் சுந்தர முதலியாரின் விண்ணப்பத் திற்கு இசைந்து தியாகராஜர் சென்னைக்கு மேற்கே $13\frac{1}{2}$ மைலில் உள்ள கோவூருக்கு விஜயம் செய்தார். புராதனக் கோவிலுடன் கூடிய ஓர் அழகிய கிராமம் இது. மூர்த்தியின் பெயர் சுந்த ரேசுவரர்; அம்மன் சௌந்தர்யநாயகி. கோவூர் பஞ்சரத்னத்தை தியாகராஜர் இங்குதான் பாடினுர்.

இப் பஞ்சரத்னத்தில் அடங்கிய ஐந்து பாடல் களாவன:

சம்போ மஹாதேவ	பந்துவராளி
ஈ வஸுத நீவண்டி	சஹாரு
கோரி ஸேவிம்ப ராரே	கரஹரப்பிரியா
நம்மி வச்சின	கல்யாணி
ஸுந்தரேச்வரருனி	சங்கராபரணம்

திருடர் வழிமறிப்பு

கோவூரை விட்டுப் புறப்பட்டு தியாகராஜரும் கோஷ்டியாரும் திருவையாறு திரும்ப பயணம் தொடங்கினர். கோவூர் சுந்தர முதலியார், தமது பக்தி மேலீட்டின் காரணமாக, 1,000 பொற் காசுகளை ஒரு பையில் கட்டி தியாகராஜருக்குத் தெரியாமல் அவரது பல்லக்கில் வைத்துவிட்டார். அப்பணம் ராம நவமி, ஸ்ரீ ஜயந்தி, வைகுண்ட ஏகாதசி ஆகிய பண்டிகைகளைக் கொண்டாடும் பொருட்டே என்று கூறி, அதை ஏற்க மறுக்கக் கூடாதென்று முதலியார் சீடர்களை வேண்டினார். அவர்களும் வாய்திறவாது சம்மதித்தனர்.

பிரயாணத்தின்போது ஒரு நாள் இரவு காட்டுப் பாதை வழியாகச் செல்ல நேர்ந்தது. நாகப் பாளையம் கள்வர்கள் சஞ்சரிக்கும் பிரதேசம் அது. கவண்களால் கூழாங்கற்களை வீசுவதில் பெயர் போன பக்காத் திருடர்கள். தியாகராஜரையும் கோஷ்டியினரையும் அக் கள்வர்கள் சூழ்ந்து கொண்டுவிட்டனர். சீடர்கள் பல்லக்கிலிருந்த தியாகராஜரின் காதில் "கள்வர்" என்று மெல்லிய குரலில் அறிவித்ததும், அவர், "திருடர்களிடம்

நமக்கு என்ன பயம்? அவர்கள் எடுத்துப் போகும் படி நம்மிடம் ஒன்றுமில்லையே!" என்றார்.

சுந்தர முதலியார் கொடுத்த ஆயிரம் பொற் காசுகள் கொண்ட பணமுடிப்பு பல்லக்கில் இருப் பதை வீணை குப்பய்யர் ரகசியமாகச் சொன்னார்.

"பணப்பையை கள்வர்களிடம் தூக்கி எறி யுங்கள்" என்றார் தியாகராஜர்.

தஞ்சாவூர் ராமராவ் உடனே குறுக்கிட்டு, "இல்லை, குருவே! பொற்காசுப்பை ராம நவமி, ஸ்ரீ ஜயந்தி, வைகுண்ட ஏகாதசி உற்சவங்களின் போது செலவழிப்பதற்காகக் கொடுக்கப்பட்டுள் ளது. அது கடவுள் சொத்து. அதைத் தூக்கி எறிய நமக்கு உரிமையில்லை" என்றார்.

"அது கடவுள் சொத்தானால் அதைக் காப் பது அவர் பொறுப்பு. நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்று சொல்லிவிட்டுத் தியானத் தில் ஆழ்ந்து விட்டார் தியாகராஜர். சில நிமி ஷங்கள் கழித்து "முந்து வெனக நிரு" (தர்பார் ராகம் — ஆதிதாளம்) என்ற பாட்டைப் பாட ஆரம்பித்தார் — இதன் பல்லவி பின்வரும் சுலோ கத்தை நினைவுறுத்துகிறது:

அக்ரத: ப்ருஷ்டதஶ்சைவ பார்ஶ்வதஶ்ச
மஹாபலௌ
ஆகர்ணபூர்ண தன்வானௌ ரக்ஷயேதம் ராமலக்ஷ்ம
ணௌ

பாடலின் கருத்து இதுதான்: "ஹே ராமா! முரனையும் கரனையும் வதைத்தவரே! வாருங்கள்,

லக்ஷ்மணருடன் ஓடி வாருங்கள், எங்களைக் காப்பாற்ற.”

மறு கணமே இரண்டு வாலிபர்கள் அங்கு தோன்றி கள்வர்கள் மீது அம்புமாரி பொழிந்து அவர்களை விரட்டினர் என்று சொல்லப்படுகிறது. அதன்பின் அவ்விருவரும் பல்லக்கின் அருகில் வந்து “திருடர்பயம் ஒழிந்தது” என்று மெல்லக் கூறி மறைந்து போயினராம்.

பிரயாண கோஷ்டி தொடர்ந்து சென்று கொண்டே இருந்தது. விடியற்காலையில் ஒரு கிராமத்தை அடைந்து சத்திரத்தில் தங்கினர். இரு வாலிபர்களின் தீரச் செயலால் திகைத் தோடிய கள்வர்கள், பயண கோஷ்டியை சற்று தொலைவில் பின்தொடர்ந்தனர். சூர்யோதயத் திற்குப்பின் அவர்கள் தியாகராஜரை அணுகி, தங்கள் மீது அம்பு மாரி பெய்த அவ்விரு இளைஞர்கள் யார் என்று வினவினர்.

தியாகராஜரால் ராம-லக்ஷ்மணரையன்றி வேறு யாரையும் எண்ண முடியவில்லை. மெய்மறந்து ஆனந்தபரவசராய் “எந்த பாக்யமோ” (ஸாரங்கா ராகம் — ஆதி தாளம்) என்ற பாடலைப் பொழிந் தார். இதன் அனுபல்லவியில், ராமர் எப்படித் தம்மிடம் வந்து பேசி ஆபத்தினின்று காப்பாற்றினர் என்பது வர்ணிக்கப்பட்டுள்ளது. இளைஞர் உருவில் வந்த தெய்வங்களை நேரில் காணும் பேறு பெற்ற அக்கள்வர்களைப் பாராட் டினர். அவர்களுக்கு ராம நாம உபதேசம் செய்து புதுவாழ்வும் வழங்கினர்.

7

இறுதிக் காலம்

விஸ்வாவசு வருஷ முற்பகுதியில் (1845-ம் ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதத்தில்) தியாகராஜரின் மனைவி காலமானார். அடுத்த பிராபவ ஆண்டி லேயே அவரும் திருமால் திருவடி அடைந்தார். அவர் மறைவும் ஓர் அற்புதமாய் நிறைவேறியது.

இறுதிநாள்

சித்தியடைவதற்கு முந்திய தசமி இரவில் கன வொன்று கண்டார். அதை "கிரிபைநெல" என்ற சஹானா ராகக்கிருதியில் என்றும் அழியாவண்ணம் வர்ணித்துள்ளார். பத்து நாட்களில் தாம் திரு மாலின் திருவடித்தாமரை சேர்வார் என்று அவர் கனவில் கண்டார். மறுநாள், அதாவது புஷ்ய சுத்த ஏகாதசி, இரவு பஜனை முடிந்ததும் கூடியிருந் தோரை நோக்கி, "வருகிற பஹுள பஞ்சமி தினத் தன்று ஓர் அற்புதம் இங்கு நிகழப்போகிறது; எல் லோரும் அன்று வருவீர்களாக," என்று கூறினார். சதுர்த்தியன்று, அதாவது தமது மறைவிற்கு முந் திய நாள், அவர் பரமஹம்ஸ பிரும்மானந்தேந்திர சுவாமி என்ற யோகியை தமக்கு சன்னியாசம் தரும்படி கோரினார். தியாகராஜர் ஏற்கனவே ஜீவன் முக்தரென்றும் ஆகவே சன்னியாசம் பெறத் தேவையில்லை என்றும் கூறி முதலில்

சுவாமிகள் மறுத்துவிட்டார். ஆனால் தியாகராஜர் மீண்டும் வற்புறுத்தவே, அவருக்கு சன்னியாசம் வழங்கி நாதப்பிரும்மானந்தா என்ற பெயரும் சூட்டினார். அதன்பின் புதுத்துறவி சபையோரை நோக்கி, "நாளை முற்பகல் 11மணிக்கு என்னை அழைத்துக் கொள்வதாக ராமபிரான் வாக்குறுதி தந்துள்ளான். எனவே இது முதல் இடைவிடாது பஜனை நடக்கட்டும்" என்று உரைத்தார். இச் செய்தி காட்டுத் தீபோல் பரவி, ஏராளமான மக்கள் அடிகளின் மறைவைக் காண மறுநாள் காலையில் கூடிவிட்டனர். அவ்வமயம் அவர் அருகில் கீழ்க் கண்ட சீடர்கள் இருந்தனர்:- உமையாள்புரம் கிருஷ்ண பாகவதர், சுந்தர பாகவதர், தில்லஸ்தானம் ராம அய்யங்கார், அய்யா பாகவதர், வாலாஜாப்பேட்டை கிருஷ்ணஸ்வாமி பாகவதர். தவிர, காஞ்சி வெங்கடாத்ரி சுவாமியும் தாலுக்கா தாசில்தார் சியாம ராவும் வந்திருந்தனர். சித்தி அடைந்த நாளன்று காலையில் பின்வரும் இரண்டு பிரபல பாடல்களை இயற்றிப் பாடினார்:

பரமாத்முடு — வாகதீச்வரி ராகம் (ஆதி தாளம்)
பரிதாபமு — மனோஹரி ராகம் (ரூபக தாளம்)

அடிகள் யோக சமாதியில் அமர்ந்திருந்தார். குறிப்பிட்ட கணத்தில், பெரியாரின் சிரசிலிருந்து ஓர் அமானுஷ்யமான சப்தம் எழுவதைச் சபையோர் கேட்டனர். மறு கணம் ஒளிப் பிழம்பு அவரது உச்சியினின்றும் பளிச்சிட்டு மெதுவாக மேல் எழும்பி வானத்தில் வடக்கு நோக்கிச் செல்வதைக் கண்டனர்.

திருமேனியைப் பூரண மரியாதைகளுடன் இன்னிசை முழங்க காவிரியாற்றங்கரைக்கு எடுத்துச் சென்று, அவரது குரு ஸொண்டி வெங்கடரமணய்யாவின் சமாதிக்கு அருகில் அன்பர்கள் அடக்கம் செய்தனர்.

சமாதி உற்சவம்

திருவையாறு இரண்டு பெரிய உற்சவங்களுக்குப் பெயர்போனது: (1) ஏப்ரல் மாதம் நடக்கும் சப்தஸ்தான உற்சவம்; (2) ஜனவரியில் நடக்கும் தியாகராஜ உற்சவம். ஒவ்வொரு ஆண்டும் பொது மக்களும் பக்தர்களும் ஆயிரக்கணக்காகத் திரண்டு திருவையாறு வந்து இந்த உற்சவங்களில் கலந்துகொள்கிறார்கள்.

தியாகராஜர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு பிருந்தாவனம் எழுப்பப்பட்டது. சிவ பக்தர்களுக்கு லிங்கம் பிரதிஷ்டை செய்வதும் விஷ்ணு தாசர்களுக்கு பிருந்தாவனம் அமைப்பதும் வழக்கு. பிருந்தாவனம் என்பது செங்கல் கற்களால் சுமார் நாலடி உயரச் சுவர்களால் ஒரு சதுர கட்டிடம் கட்டி, இதனுள் புனிதமான துளசிச் செடியை நட்டு வளர்ப்பதாம்.

தியாகராஜர் சித்தி அடைந்ததிலிருந்து ஒவ்வொரு வருஷமும் புஷ்ய பஹுள பஞ்சமி தினத்தன்று உமயாள்புரம் சீடர்கள் சமாதிக்குச் சென்று உரிய ஆராதனை செய்து வந்தனர். அச்சமயங்களில் உணர்ச்சி மேலீட்டால் அவர்களுக்கு தொண்டை அடைத்துக்கொண்டு கண்களில்

கண்ணீர் பெருகி பாடமுடியாமற் போய்விடுவதுண்டாம்.

1907-ம் வருஷத்திலிருந்து சமாதி உற்சவம் புதிய பாணியில் உருவாயிற்று. நரஸிம்ம பாகவதரும் பஞ்சு பாகவதரும் பிடில் மகாவித்வானை திருச்சி கோவிந்தசாமிப் பிள்ளையின் ஆதரவுடன் இந்த உற்சவத்தைச் சிறப்பாகக் கொண்டாட ஆரம்பித்தனர்.

காலஞ்சென்ற பங்களூர் நாகரத்னம்மாள் தாம் தேடிய பொருளனைத்தையும் சமாதியின்மேல் ஒரு நேர்த்தியான ஆலயம் எழுப்புவதில் செலவிட்டார். 1925-ல் கட்டப்பட்ட அந்த ஆலயத்தை அதன் பிறகு மேலும் சீர்படுத்தி விஸ்தரித்துள்ளனர்.

ஆலயக் கட்டிடப் பணியை மேற்பார்வை செய்தவர் காலஞ்சென்ற திருவொற்றியூர் எஸ். ஏ. ராமஸ்வாமி அய்யர். அவர் கீழ்க்கண்ட சுவையான செய்தியைக் கூறுகிறார்:

அஸ்திவாரம் எழுப்ப ஆற்றங்கரையில் சமாதியைச் சுற்றி எவ்வளவு ஆழம் தோண்டவேண்டும் என்று அவரால் முடிவு கட்ட இயலவில்லை. உள்ளூர் விற்பன்னர்களைக் கலந்தாலோசித்தார்; அவர்களாலும் நிச்சயிக்க முடியவில்லை. வருவது வரட்டும் என்று தைரியமாக பள்ளம் தோண்டும் வேலையை ஆரம்பித்து விட்டார். ஒரு குறிப்பிட்ட ஆழம் எட்டியதும் அதிலிருந்து சாம்பிராணி மணம் கமழ்ந்தது. அதற்குமேல் ஆழம் பறிக்கக்கூடாது என்பதற்கு இது ஒரு எச்சரிக்கை என்று எண்ணி

ஞர். அந்த ஆழத்திலிருந்து அஸ்திவாரத்தை எழுப்பி ஆலயத்தைக் கட்டினூர்.

காலஞ்சென்ற சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர் தம் நண்பர் ஒருவருடன் ஒருநாள் மாலை சமாதிக்கு அருகில் காவிரிக்கரையில் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்தார். திடீரென "ராம், ராம்" என்ற ஒலியைக் கேட்டார். அருகில் வேறு யாரும் இல்லை. அச்சப்தம் சமாதியிலிருந்தே எழுவதுபோல் தோன்றியது.

தியாகராஜரின் வருடாந்திர உற்சவத்தை 1940 லிருந்து தியாகப்பிரும்ம ஆராதனை மஹோற்சவ சபை திருவையாற்றில் மிக்க சிறப்புடன் நடத்தி வருகிறது. வருஷந்தோறும் அங்கு கூடும் ஆயிரக் கணக்கான சங்கீத வித்வான்கள், ரசிகர்கள், பக்தர்கள் ஆகியோரை வாவென்றழைத்துப் பவித்திரமாக்கும் க்ஷேத்திரமாகத் திகழ்கிறது சமாதி

8

தியாகராஜரின் சிஷ்ய பரம்பரை

இந்திய சரித்திரத்திலேயே மற்ற எந்த வாக்கேய காரரைக் காட்டிலும் தியாகராஜருக்கு சீடர்கள் அதிகம். அவருடைய சீடர்களும், சீடர்களின் சீடர்களும் சிறந்த பாடல்கள் இயற்றியும், திறமை யாய்ப் பாடியும் புகழ் பெற்றனர். தியாகராஜருக் குப் பின் பிரகாசித்த பல முக்கியமான சங்கீத மேதைகள் அவரது சிஷ்ய பரம்பரையில் தோன் றியவர்களேயாகும்.

தியாகராஜரின் சீடர்கள் குருவின் பாடல்களை சிரத்தையுடனும் ஆர்வத்துடனும் கற்றனர். அவரிடம் சிக்ஷை தொடங்கிய சிலர் ஏற்கனவே பல்லவி வித்வான்களாகப் பெயரெடுத்தவர்கள். அவர்கள் அனைவரும் பக்தி சிரத்தையுடன் அவரது உயர்ந்த பாடல்களைப் பயின்றனர். சிலர் தியாகராஜரின் திவ்ய நாமக் கீர்த்தனைகளில் பாண்டித்தியம் பெற்றனர். வீணை குப்பய்யரும் வாலாஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதரும் குருவுடன் நீண்ட காலம் இருந்து பணிவிடை புரிந்தனர். கல்விமானும், சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் ஆழ்ந்த ஞானமுள்ளவருமான வெங் கடரமண பாகவதர் தியாகராஜர் பாடுவதைத் தம் கையால் எழுதி அவரது அன்பையும் ஆசியையும்

பெற்றார். எல்லாச் சீடர்களும் குருவின் பெருமை யையும் அவருள் ஒளிரும் தெய்விகச் சுடரையும் உணர்ந்திருந்தனர்.

தியாகராஜர் தமது சீடர்களை அவரவர்களின் சுருதி, தண்மை, ஸ்தாயி எல்லை, குரல் வளம் முதலிய சாரீர குணங்களைப் பொருத்து பிரிவுபடுத்தி ஒவ்வொரு பிரிவினர்க்கும் இருநூறு கிருதிகளுக்கு மேற்படாமல் சிக்ஷித்தார். இவ்வாறு தாம் இயற்றிய ஆயிரக்கணக்கான பாடல்களை சிஷ்ய கோஷ்டியினரிடையே பகிர்ந்தளித்தார். அவர் காலத்தில் அச்சுக் கலை நம் நாட்டில் பரவவில்லை. கிருதிகளை ஞாபகத்தில் வைத்து முறையாகப் பாட ஒரே வழி அவற்றைத் திரும்பத் திரும்பப் பாடிப் பழகுவதுதான். சிறந்த சீடர்கள் மேலும் மேலும் பாடல்களைக் கற்றுக்கொள்ள தியாகராஜரும் பிரதம சீடர்களும் போதிய வாய்ப்பும் ஊக்கமும் அளித்தனர். இவ்விதமாகத்தான் வாலாஜாப் பேட்டை சீடர்களும் உமயாள்புரம் சீடர்களும் ஏராளமான தியாகராஜ கீர்த்தனைகளைப் பாடமாக்கிக் கொண்டனர்.

ஆரம்ப காலத்தில். ஸ்வர ஞானம் கைகூடாது வரும் சீடர்களுக்கு தியாகராஜர் தாமே படிப்படியாகத் திவ்ய நாம கீர்த்தனைகளைக் கற்பித்து, முறையாக அவர்கள் கடினமான பாடல்களைக் கற்றுப் பாடப் பயிற்சியளித்தார். ஆனால் பிற்காலத்தில், ஸ்வர ஞானமின்றி வருபவர்களை ஆரம்பப் பயிற்சி பெறுவதற்காக முதலில் வேறு ஒரு பாடகரிடம் அனுப்பி வைத்தார். இந்த மாணவர்கள் பயிற்சி

முடிந்ததும் தியாகராஜரிடம் கிருதிகளைக் கற்க வருவார்கள். "ஸ்ரீ ஜானகி மனோஹர" என்று தொடங்கும் ஈசமனோஹரி ராகக் கிருதியைத்தான் தியாகராஜர் முதன் முதலில் தம் சீடர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது வழக்கமாம். குருவின் வழியைப் பின்பற்றி உமயாள்புரம் சீடர்களும் தங்கள் சீடர்களுக்கும் அப்பாடலையே முதலில் சிக்ஷித்தனர்.

மாலை வேளைகளில் தியாகராஜர் நடத்திய இசை வகுப்புக்களால் பலர் பெரும் பயனடைந்தனர். தியாகராஜரின் பாடல்கள், ஸ்வரக் குறிப்புகளுடனும், ராகக் குறிப்புகளுடனும் அவர் காலத்தில் எழுதப்பட்ட பல கையெழுத்துப் பிரதிகளில் இன்றும் காணப்படுகின்றன. அவற்றை ஆராயுங்கால் இன்னும் பல சிறந்த பாடல்கள் பிரபலப் படவிருக்கின்றன என்று தெரிகிறது.

தியாகராஜருக்கு ஏராளமான சிஷ்யர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவை இருந்தது. குரு அவ்வப்போது உதிர்க்கும் அருட் பாடல்களை உடனுக்குடன் எழுதி வைத்ததோடல்லாமல் அவர்கள் அப் பாடல்களைப் பிறர்க்கும் கற்பித்தனர். வீட்டில் பஜனைகள் நடக்கும்போதும், வீதியில் (உஞ்சவிருத்தி) பஜனைகள் நிகழும்போதும் சில சீடர்கள் தம்புரா, மிருதங்கம், ஜாலரா முதலிய பக்க வாத்யங்களை இசைத்தனர். இத்தகைய இசையுரு வழிபாட்டில், திறமை வாய்ந்த பாடகர்களும் பக்க வாத்யக்காரர்களும் எவ்வளவு பெரிய பங்குகொள்ள முடியும் என்பது பஜனை செய்பவர்களுக்குத்தான் தெரியும். சில சீடர்கள் குரு

பூஜைக்காக தினமும் புஷ்பம் சேகரித்து வருவர்; மற்றும் சிலர் அவரது வீட்டு வேலைகளை கவனித்து வருவர். எவரும் குரு தக்ஷிணை என்று பணம் கொடுப்பது கிடையாது.

ஓரிரு பாடல்களாவது இயற்ருத நாட்கள் அவர் வாழ்வில் மிகவும் அரிதாம். ஏகாதசி தினங்களில் அவர் அந்தர்முக ஆனந்தத்தில் ஆழ்ந்திருக்கும் போது அதிகமான பாடல்கள் வெளிவரும். சிஷ்ய வித்வான்கள் அவற்றை உடனுக்குடன் ஸ்வரக் குறிப்புகளுடன் எழுதிக் கொள்வார்கள். இவ் வகையில் அவை மறைந்துவிடாது காத்துவைக் கப்பட்டன. இப்படிச் சேர்ந்த பாடல்கள் அவர் வாழ்வின் பிற்பகுதியில் கணக்கிலடங்காமற் போகவே அவற்றை நன்கு கற்றுணர்ந்த சீடர் களை, தாம் வகுத்த திட்டப்படி, அவ்வப்போது பாடச் சொல்லிக் கேட்பார். தமக்குப் பிடித்தமான பாடல்களை பஜனைகளில் அடிக்கடி பாடச் சொல் லிக் கேட்பார். தாம் இயற்றிய மற்ற பாடல்களை வருஷத்திற்கு ஒரு முறைதான் திரும்பப்பாடிக் கேட்டிருக்கக் கூடும்.

தியாகராஜரின் சீடர்களுள் தஞ்சாவூர் ராம ராவ் வயதில் மூத்தவர்; நடைமுறையில் அவ ருக்கு அந்தரங்கக் காரியதரிசியாகப் பணி புரிந் தார். குருவின் பிரயாணத் திட்டங்களை வகுத் துக் கொடுத்து, அவருடன் சென்ருர். காஞ்சீபுரம், திருப்பதி, வாலாஜாப்பேட்டை, சோழஙகிபுரம், சென்னை, திருவொற்றியூர், கோவூர் ஆகிய தலங் களுக்கு தியாகராஜர் தமது யாத்திரையை மேற்

கொண்டபோது, ராமராவும் கூடவே சென்றார். இக் காரணத்தால் மற்ற சிஷ்யர்கள் அவரை 'சின்ன தியாகராஜர்' என்று குறிப்பிடுவதுண்டு. குருவிடம் ஏதாகிலும் தெரிவிக்கவேண்டும் என்றால் அவர்கள் ராமராவின் மூலமே அதைச் செய்து முடிப்பார்கள். ராமராவ் தியாகராஜரைவிட இரண்டு வயது இளையவர். மற்றொரு ருசிகரமான சங்கதி: வாலாஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதர் சற்று ஸ்தூல சரீரமும் வலிமையும் கொண்டவராக இருந்ததால் அவரை சக சீடர்கள் 'கணபதி' என்று குறிப்பிடுவார்கள். உடல் வலிமையால் ஆகவேண்டிய வேலை ஏதேனும் செய்ய நேரிடும்போதெல்லாம் அவர்கள் 'கணபதி' யிடம்தான் ஒப்படைப்பார்கள்.

தியாகராஜரைப் பெயர் சொல்லாமல் 'அய்யா வாள்' என்ற பட்டப் பெயராலேதான் குறிப்பிடு வார்கள்.

வாலாஜாப்பேட்டை சீடர்கள்

தியாகராஜரின் முப்பது பிரபல சீடர்களுள், வாலாஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதரையும் அவர் மகன் வாலாஜாப்பேட்டை கிருஷ்ண ஸ்வாமி பாகவதரையும் பிற்காலத்தவர் மறவாது நினைவிற் கொள்வர். தியாகராஜரின் மாசிலாமணியான பாடல்களைக் காப்பாற்றி மக்களிடை பரப்பியதின் மூலம் கர்நாடக சங்கீதத்திற்கே பெரும் பணி ஆற்றியுள்ளார். வெங்கடரமண பாகவதர் சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் புலமை மிக்கவர். குரு

பொருட்டும் ஒரு மிருகத்தை வதைக்கலாகாது. அஹிம்சையே பரம தர்மம்" என்று நினைத்துக் கொண்டார். ஆனால் ராம பாணம் வீண்போகாது. ஆகவே, ராமர் உடனே மற்றொரு பாணத்தைத் தொடுக்க, அது மின்னல் வேகத்தில் பாய்ந்து முதல் பாணத்தைத் தடுத்துத் தள்ளி அந்த மானுக்கும் உயிர்ப்பிச்சை அளித்தது.

"களல நேர்ச்சின"—சரணம் (தீபக ராகம்)

ராம பட்டாபிஷேகத்தின்போது குணசீலர்களுக்குப் பல்வேறு தானங்கள் வழங்க ஏற்பாடாயிற்று. முடிசூட்டு வைபவத்தினையொட்டி மட்டும் அல்லாது இலங்கைப் போரில் சக்ரவர்த்தி இழைத்த துன்பத்தின் பீடைக்குப் பரிகாரம் காணும் வகையிலும் தானங்கள் வழங்குவதென்று ஏற்பாடு செய்தனர். இதற்கான தானங்களில் ஒன்று தில தானம்.[1] அதை ஏற்க சத்பாத்திரத்தைத் தூண்டும் பொருட்டு, எள்ளைக் கையேந்தி வாங்க முன்வருபவர்க்கு ஒரு தங்கக் கட்டியும் வழங்கப்படும் என்று வசிஷ்டர் அறிவித்தார். இப்படி ஆசை காட்டியும் சில காலம் எவரும் முன்வரவில்லை.

சிங்கார முனி என்பவர் அயோத்தியின் எல்லையில் அப்போது வசித்து வந்தார். பரம தரித்திரர். தவத்திலும் தியானத்திலும் நாட்களைக் கழித்து

[1]. பரம ஏழைகளும் பண்பாடற்ற மக்களும் தாம் இந்த எள்ளுத் தானத்தை ஏற்பது வழக்கம்.

வந்தார். தண்டோரா மூலம் அறிவிக்கப்பட்ட ஆசையூட்டும் கொடையைப் பற்றிக் கேட்டதும் அவர் மனைவி முனிவரிடம் ஓடிவந்து, "தானத்தை ஏற்கச் சம்மதியுங்கள்; பிறகு பெருவாழ்வு வாழலாம்" என்று கெஞ்சினாள். அவரோ இதைக் கேட்டுக் கோபமுற்று, "இந்தச் சனியன் பிடித்த பொன்னுக்காக என் தவ பலத்தை எல்லாம் இழக்கச் சொல்கிறாயா?" என்று இரைந்தார். மனைவியோ, "இல்லை, பிரபுவே; ஸ்ரீ ராமர் நரவேஷம் பூண்ட பரம்பொருளல்லவா? நீங்கள் தானம் வாங்கியதும் அவர் முகத்தைப் பாருங்கள். சக்ரவர்த்தியின் திவ்ய தரிசனம் தானம் பெற்றதன் பாபத்தைப் போக்கும்" என்றுரைத்தாள். அவளது பேச்சில் பொதிந்த உண்மையை சிங்கார முனி உணர்ந்தார். தானத்தை ஏற்கச் சித்தமாக இருப்பதாக அரண்மனைக்குத் தகவல் அனுப்பினார். சிங்கார முனி தானத்தை ஏற்க உடன்பட்டார் என்ற செய்தி பரவியதும் ஜனங்கள் தமக்குள் 'என்னே பரிதாபம்! சிங்கார முனியைப் போன்ற தவச் செல்வரா பொன்னைக் கண்டு மதி மயங்கி இக் கேவல நிலைக்கு இறங்குவது!" என்று பேசிக்கொண்டனர்.

வசிஷ்ட முனிவர் இதற்குள் சிங்கார முனி தம் பதிகளின் உட்கருத்தை ஊகித்து விட்டார்.[1] ஆகவே தானம் வாங்கியதும் சிங்கார முனி ஸ்ரீராம

---

[1] எள்ளுத்தானம் பெறுபவர், தானம் வாங்கியபின், அளிப்பவரைப் பார்க்கக் கூடாது என்பது விதிமுறை.

ரைப் பார்க்க முடியாதவாறு திரையொன்று இடை விழுந்து மறைப்பதற்கான உபாயம் செய்தார்.

குறிப்பிட்ட நாளன்று சிங்கார முனி அரண் மனைக்கு வந்தார். தில தானம் செய்யும் நேரத் தில் விசேஷ மேடையருகில் சென்றார். அதற் கான மந்திரங்கள் முழங்க, ஸ்ரீ ராமர் எள்ளைத் தானம் வார்த்தார். தானக் கருமம் முடிந்த கணமே மாயாஜால வித்தையாய்த் திரை விழுந் தது. ஸ்ரீராமரும் சபையோரும் ஆச்சர்யமுற்ற னர். சிங்கார முனி ஸ்ரீ ராமரைப் பார்க்கத் தலை நிமிர்ந்தபோது தம் எதிரில் திரையைத்தான் கண் டார். திகில் அடைந்தார். சக்ரவர்த்தியின் தரி சனம் கிடைக்கப் பெறாது, தன்னை நொந்த வண் ணம் தலை குனிந்து வீடு திரும்பினார். இதற்குள் பொற்பாளம் சிங்கார முனியின் வீட்டில் சேர்க்கப் பட்டு, அவர் மனைவி தன் கணவனை வரவேற்கக் குதூகலத்துடன் ஏற்பாடு செய்து கொண்டிருந் தாள். கண்களில் நீர் மல்கத் திரும்பி வரும் கண வரைக் கண்டதும் துணுக்குற்றாள். "உன் ஆசை வார்த்தையால் மோசம் போனேன்; என் தவமும் தேசமு தொலைந்தன" என ஓலமிட்டார். இப்படி முடியும் என்று கனவிலும் எதிர்பாராத அம் மாது சோகத்திலாழ்ந்தாள். சிறிது நேரம் கழித்து மன தைத் தேற்றிக் கொண்டு கணவனுக்கு ஆறுதல் கூறி, "பிரபுவே! நடந்தது நடந்துவிட்டது. எனக்கு மீண்டும் ஒரு உபாயம் தோன்றுகிறது. முடி சூட்டு விழாவின் கடைசி நாளன்று ஸ்ரீராமர் தேரின் மீதேறிப் பவனி வருவார். ஊர்வலம்

நமது சிறு குடிலுக்கருகில் இந்த மூலையைத் தாண்டித்தான் செல்லும். அந்த சமயத்தில் அக்கோடியிலுள்ள மரத்தருகே நில்லுங்கள்; தேர் அங்கு வந்தவுடன் ஸ்ரீராமரை நெருங்கி, தரிசித்து வாருங்கள்," என்றாள்.

சிங்கார முனி அன்ன ஆகாரமின்றி ஊர்வல தினத்தையும் நேரத்தையும் நெஞ்சம் பதைக்க எதிர் நோக்கி நின்றார். குறிப்பிட்ட நாளில் குடில் அருகில் வீதி மூலையை ஊர்வலம் எட்டியபோது விரைந்தோடிச் சென்று ஸ்ரீராமரின் முன் விழுந்து தொழுது அவரைக் கண் குளிரத் தரிசித்தார். அக்கணமே தாம் இழந்த தவமும் தேசும் மீளப் பெற்றார். அப்போது ஸ்ரீராமர், "தில தானத்தை வாங்கியதால் சிறிது காலம் துன்பப்பட நேர்ந்தது. இப்போது எல்லாம் நீங்கிவிட்டது. இனி நீ நல்வாழ்வு வாழ்வாயாக" என்று அருளினார்.

சிங்கார முனி பேருவகையுடன் இல்லம் திரும்பினார். அரண்மனையிலிருந்து வந்த தங்கத்தை அதன்பின் அவர் விரலாலும் தொடவில்லை.

தியாகராஜர் தமது கிருதியில் கூறுகிறார்: "கிடைத்த பொன்னில் சிங்கார முனி பயனைக் கண்டாரா? விபிஷணர் வேண்டியும் அரங்கநாதர் இலங்கை சென்றாரா? விதிப்படியே செயலனைத்தும் நிறைவேறும்."

"வினராதகோனி"—சரணம் (பிரதாபவராளி ராகம்)

இந்நிகழ்ச்சி உத்தர ராமாயணத்தைச் சேர்ந்தது. ஒரு நாள் ராமரும் சீதையும் அந்தப்புரத்தில் பல்லாங்குழி விளையாடிக் கொண்டிருந்தனர். ஆட்டம் முடிந்ததும் இருவரும் ரசமாக உரையாடினர். இந்தப் பேச்சை ஆஞ்சனேயரும் பரதரும் வெளியிலே மறைந்து நின்று ஒற்றுக்கேட்டு அகமகிழ்ந்தனர். இதை நினைந்து தியாகராஜர் தமது ஒப்பற்ற கவிதா பாணியில் உருகுகிறார்: "ஏ ராமா! பரதனும் ஆஞ்சனேயனும் ஒற்றுக்கேட்டுச் சுவைத்த அந்த இனிய உரையாடலை நானும் அவர்களைப்போலவே செவிமடுக்கத் துடிக்கிறேன்." ஆசிரியர் இப்பாடலின் அனுபல்லவியில் "அ மதுரமைன பலுகுலு"[1] என்ற தொடரில் சங்கதிகளைச் செருகி பாடலுக்குத் தனிச் சிறப்பு தந்துள்ளார்.

"அலகலல்ல"—(மத்யமாவதி ராகம்)

தியாகராஜர் ராமநாம ஜபத்திலே ஒருகோடி முடித்ததும் ராமர் ஏதேனும் ஓர் உருவத்தில் அவர் முன் தோன்றி தரிசனம் அளித்தார் என்பது ஐதிகம். அவரும் அக் காட்சியை உடனுக்குடன் நெஞ்சை அள்ளும் கீர்த்தனைகளில் நிலையாகப் பதித்து விடுவார். "கனுகொண்டினி" (பிலஹரி), "அலகலல்ல" (மத்யமாவதி) ஆகிய இரு கீர்த்தனைகள் இதற்கு உதாரணம்.

இருமுறை, ராமர் வில்லை உபயோகித்தபோது அவரது நெற்றியில் தவழும் மயிர்ச்சுருள்கள்

---

1 அந்த மதுரமான மொழிகள்

லேசாக அசைந்து ஒரு புறம் ஒதுங்கினவாம் முதல் முறை, விசுவாமித்திரரின் யமிருனைக் கிணங்க ராமர் எழுந்து சிவதனுசை வளைத்த போது. தனுசு கனமாக இருந்ததால் ராமர் சிறிது பலத்தைச் செலுத்தி அதை வளைக்க வேண்டி இருந்தது. அச் சிலிர்ப்பில் மயிர்ச்சுருள்கள் நெற்றி மீது ஒரு புறம் ஒதுங்க, அக்காட்சியைக் கண்ட விசுவாமித்திரர் ஆன்மீகப் பரவசமெய்தினார்.

மாரீசனைக் கொல்லத் தமது கொடிய பாணத்தை எய்தபோதும் நெற்றிமயிர் அசைந்தாடிப் பரவச மூட்டியது.

அவரது சித்தாந்தம்

இந்தியாவில் அவ்வப்போது மகான்கள் தோன்றி, வேதாந்த உண்மைகளை எடுத்துரைத்து, பண்டைக்கால முதல் இன்று வரை வளர்ந்து வரும் சிறந்த பண்பாட்டை மக்களுக்கு நினைவுறுத்தி வந்துள்ளனர். தியாகராஜர் இந்த ஞானிகளின் வரிசையில் ஒருவர்.

தியாகராஜர் பல்வேறு சமயக் கொள்கைகளிடையே மோதும் பேதங்களை ஒன்றுபடுத்தி சமரசம் நிலவ பெரும் பணியாற்றினார். வெவ்வேறு வாதங்களின் அடிப்படையான திண்மையையும் உண்மையையும் எடுத்துரைத்தார். ஆழ்ந்த உண்மைகளை எளிய நடையில் தெளிவுபடுத்தினார். மானிடராய்ப் பிறந்தவர் ஆன்மீக வளர்ச்சியால் கடவுளர் ஆவர் என்பது பக்தர்களின் கொள்கை.

சமாதி தினத்தன்று நிர்குணப் பிரும்மத்தை அடைந்து பரம்பொருளுடன் ஐக்கியமானார்.

காலங்கடந்த தத்துவ உண்மைகளை "அநாதுடனு கானு" (ஜிங்க்ல ராகம்) போன்ற எளிய பாடல்கள் மூலம் விளக்கஞ் செய்தார். அவரது பாடல்களில் பரம ஞானமும், மனத்தைத் தொடும் கவிதைக் கனிவும் பொதிந்துள்ளன.

நாதத்தின் தனித் தத்துவத்தை சொல்லாலும் செயலாலும் உணர்த்தினார். சங்கீதோபாசனையின் மூலம் ஆத்மாநுபூதி எப்படி சித்திக்கும் என்று காட்டினார். பிரசாரத்திற்காக அங்குமிங்கும் அலையாமல் திருவையாற்றிலிருந்தபடியே தமது சங்கீத சுவிசேஷத்தைப் பரப்பினார்.

அவர் குரல்

தியாகராஜருக்கு உச்ச சுருதியில் பாடக்கூடிய சாரீரம். அவரது ஜிலு ஜிலுப்பான சாரீரத்தில் மூன்று ஸ்தாயிகளிலும் ப்ருகாக்கள் தெளிவாகக் கேட்கப்பட்டன. தேவலோக காயகர்போல கந்தர்வ சாரீரம் உடையவர். கிருதியின் அனு பல்லவி அல்லது சரணத்தில் தார ஷட்ஜத்தில் தங்கும்போது அற்புதமாக இழையும்; அவ்வமயம் சீடர்கள் தாம் பாடுவதை நிறுத்தி, தியாகராஜரது பிரகாசமான குரலை சபையோர் அனுபவிக்க விடுவார்கள், அவருடைய குரலில் பரிவார சுருதிகளும், நாதவர்ணப் பட்டைகளும் சிறப்பாக விளங்கின.

மகா வைத்தியநாத அய்யரின் தந்தை பஞ்சநத அய்யரிடம் நண்பர் ஒருவர் அய்யரின் மகனுடைய வசீகரமான சாரீரத்தைப் பற்றிப் புகழ்ந்தபோது அவர் "பெரியார் தியாகராஜரின் இனிமையும் கவர்ச்சியும் நிறைந்த சாரீரத்திற்குமுன் என் மகனின் குரல் எம்மாத்திரம்?" என்று திருப்பினார். மகா வைத்தியநாத அய்யர் 1856-ம் ஆண்டிலிருந்து சங்கீதச் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்த போது அக்காலத்திய வயது முதிர்ந்த பாடகர்கள், "அப்ப! தியாகராஜருக்குப் பின் காதுக்கினிமையாகப் பாடக்கூடியவர் ஒருவராவது இருக்கிறரே!" என்று பெருமூச்சு விட்டனர்.

சங்கதிகள்

மற்றெந்த வாக்கேயகாரரையும் விடப் பெருமளவு அதிகமான ராகங்களில் தியாகராஜர் பாடல்கள் இயற்றியுள்ளார். இரு நூற்றுக்கு மேற்பட்ட ராகங்களில் இயற்றியது பாரத சங்கீதத்திலேயே ஒரு சாதனை. இன்று தெரிந்து பாடப்படும் அவர் பாடல்களே மொத்தம் ஆயிரத்திற்குமேல் உள்ளன.

அவரது பாடல்கள் நேர்த்தியான 'விச்ராந்தி ஸ்தானங்கள்' அல்லது நிற்குமிடங்கள் கொண்டவை. குரல்வளம் பெற்ற பாடகர்கள் அந்த இடங்களில் — அதாவது பஞ்சமம் அல்லது ஷட்ஜமத்தில் — நின்று பாடுங்கால் கேட்போர் அனுபவிக்கும் ரஸஞ்ஞான இன்பம் விவரிக்க இயலாது.

எதிர்காலத்தில் சங்கீதம் நல்ல முறையில் முன்னேறப் பாதை வகுத்தார். ராக அடிப்படையில் அமைந்த சங்கீத முறையைக்கொண்டு இசையுருவக் கருத்து, கற்பனைகளை எவ்வாறு சித்தரிக்கலாம் என்று காட்டியுள்ளார். அவரது பாடல்களில் இன்னிசை முழுமைபெற்று மிளிர்கிறது.

பெரும்பான்மையான பாடல்கள் அவர் மனத்துக்கினிய ராமரிடம் பற்பல நிலைகளில் நின்று நெஞ்சுருக முறையிட்டும் அந்தரங்கமாய்ப் பேசியும் உறவாடும் வகையில் அமைந்துள்ளன.

சங்கீத ரசிகர் அனைவரும் போற்றிப் புகழும் தியாகராஜர் நடையில் இனிமையும் கம்பீரமும் கலந்துள்ளன.

பெரியோர் பலருக்கும் ஏதாவது ஒரு தோஷம் இருக்கத்தான் செய்யும். சற்று முன்கோபக்காரர் என்பதைத்தவிர தியாகராஜர் குறை ஏதுமில்லாதவர். எல்லோராலும் போற்றி வணங்கப்படும் நிலையை அடைந்தார். மற்ற சில கவிஞர்களைப் போல் அல்லாமல் கோபம் வரினும் கண்யமாகவே பேசினார்.

அவரது வாழ்க்கையின் முக்கிய படிப்பினை இதுதான்: 'எது வரினும் வருக. நேர்மை நெறி வழுவாது நடந்தால் கடவுள் கடாக்ஷம் உடன் வரும். அன்று நாம் இதனை உணரத் தவறினும் அவ்வன்பு நம்மை விட்டகலாது.'

10

பாடல்கள்

வரையறை செய்யப்பட்ட ராகங்களாலாகிய இசை முறை, உலக சங்கீதத்திற்கு இந்தியா அளித்துள்ள பெருங்கொடையாகும். ராகங்கள் கேவலம் அருவமான கற்பனைகள். ஆனால் அவற்றில் அமையப்பட்ட பாடல்களும் ஆலாபனங்களும் திடவடிவம் பெற்று அவற்றின் தனி லக்ஷணங்களை நாம் செவிப் புலன் மூலம் உணரவும் கண்டுகொள்ளவும் உதவுகின்றன. ராகங்களின் பல்வேறு சாயல்களையும் லக்ஷணங்களையும் அதி நுணுக்கமாக வடித்து விவரித்துக் காட்டுவதால் தியாகராஜரின் பாடல்கள் இலக்கியப் பிரமாணமாகப் போற்றப்படுகின்றன. மாற்றுக்குறையாத் தங்கம் போன்ற இப்பாடல்கள் என்றும் சாசுவதமாக நிலைக்கும். அவற்றுள் சனாதனப் பொருள்கள் பொதிந்துள்ளன. சுவைமிக்க நிகழ்ச்சிகள் நிறைந்த அவர் வாழ்க்கையை நினைத்தாலே நமக்கு ஒரு மன எழுச்சி உண்டாகிறது. பாதாளம் முதல் ஆகாயம் வரையுள்ள மனித உணர்ச்சியனைத்தையும் அவர் பாடல்கள் அளாவி நிற்கின்றன.

பாகுபாடு

இசை அமைப்பையொட்டி தியாகராஜரின் கிருதிகளை பின்வருமாறு பாகுபடுத்தலாம் ;—

(1) மிக எளியவை (உதாரணம்: "வினவே ஓ மனஸா" விவர்தனி ராகம்).

(2) எளியவை (உதாரணம்: "சுஜன ஜீவனா" — கமாஸ் ராகம்).

(3) நடுத்தரம் (உதாரணம்: "எவரனி" — தேவாமிருத வர்ஷிணி ராகம்).

(4) கடினம் (உதாரணம்: "நாஜீவாதாரா" — பிலஹரி ராகம்)

(5) சிக்கல் நிறைந்தவை (உதாரணம்: "தாரிணி தெலுஸு கொண்டி" — சுத்தஸாவேரி ராகம்).

பைரவி ராக "கொலுவையுன்னடே" என்ற பாடலின் தாது, தான ரீதியிலும் காம்போதி ராக "ஓ ரங்க ஸாயி" ஆலாபனை ரீதியிலும் அமைக்கப் பட்டுள்ளன.

சாகித்யத்தில் பொதிந்துள்ள கருத்துக்களை யொட்டி அவரது கிருதிகளை இவ்வாருகப் பாகு படுத்தலாம்:—

(1) அறிவு புகட்டும் பாடல்கள் (உதாரணம்: "சாந்தமு லேக" — ஸாம ராகம்)

(2) நீதி விளக்கும் பாடல்கள் (உதாரணம்: "மனஸு நில்ப சக்தி" — ஆபோகி ராகம்). இதில் அவர் கூறுகிருர்: "மனதைக் கட்டுப்படுத்த இயலாதவன் பூஜை செய்து என்ன பயன்? கபடன் காவிரி அல்லது மந்தாகினி யில் நீராடிஞல் பரிசுத்தஞகி விடுவாஞ?"

(3) வந்தனைப் பாடல்கள் (உதாரணம்: "விதுலகு ம்ரொக்கெத" — மாயாமாளவ கௌளா ராகம்)

(4) சங்கீதத்தைப் புகழும் பாடல்கள்

(5) மனதோடு உரையாடும் பாடல்கள்; மறைமுகமான உபதேசங்கள் கொண்டவை — "வினவே ஓ மனஸா" (விவர்தனி ராகம்), "உண்டேதி ராமுடொகடு" (ஹரிகாம்பேதி) போன்றவை.

பச்சாத்தாபப் பாடல்கள்

அவரது கொடிய தமையன் சில சமயம் அவரை நேர்மையற்ற காரியங்களில் பணிப்பார்; பச்சாத்தாபப் பாடல்களில் சில இப்படி விளைந்தவை.

"எடுல ப்ரோதுவோ தெலிய"	சக்ரவாகம்
"துடுகு கல"	கௌள

கன ராக பஞ்சரத்னத்தைச் சேர்ந்த இப்பாடலின் அனுபந்தத்தில் "ஸாதிஞ்செனே" (ஆரபி ராகம்) "எந்தரோ மஹானுபாவுலு" (ஸ்ரீ ராகம்) போன்ற பாடல்களும் அடங்கியுள்ளன.

"ப்ராலப்த"	ஸ்வராவளி
"தொலிநேனு ஜேயு"	கோகிலத்வனி
"நோரேமி ஸ்ரீ"	வராளி

முறையீட்டுப் பாடல்கள்

"அநாதுடனு கானு"	ஜிங்க்ல
"தொலிநே சேஸின"	சுத்த பங்காள
"நாதுபை பலிகேரு"	மத்யமாவதி
"மரியாதகாதுர"	சங்கராபரணம்
"ஏபாபமு"	அடாண
"நாயெட வஞ்சன"	நபோமணி

ராகம் சாமானியமானுலும் அதில் மிகச் சிறந்த பாடலை இயற்ற முடியும் என்பதை "அநாதுடனு கானு" மற்றும் "நாயெட வஞ்சன" போன்ற கிருதிகள் நிரூபிக்கின்றன.

"ராம நீ யெட" (திலீபகம்). "எடுலேன" (ஸாம), "தெலிய லேரு" (தேனுக) போன்ற பாடல்களில் பக்தியற்றவர்களின் அவல நிலையைக் கண்டு அனுதாபப்படுகிருர்.

கத்ய சாகித்யங்களும் பத்ய சாகித்யங்களும்

தியாகராஜரின் சாகித்யங்களுள் செய்யுள் நடை (பத்ய), வசன நடை (கத்ய) சாகித்யங்கள் இரண்டும் உள்ளன. சில கிருதிகள் ஒரு பகுதி செய்யுள் உருவிலும் மற்றொரு பகுதி வசன நடையிலும் அமைந்திருப்பதையும் காணலாம்.

"ஸ்ரீ ராம ஜய ராம"	யதுகுலகாம்போதி
"தவதாஸோஹம்"	புன்னுகவராளி
"வேணுகானலோலுனி"	கேதார கௌளை
"பஜன பருல"	ஸுரடி

இந்நான்கும் பத்ய சாகித்யங்கள்.

"விடமு ஸேயவே"	கரஹரப்பிரியா
"மனுஸு ஸ்வாதீன"	சங்கராபரணம்

இவ்விரண்டும் கத்ய சாகித்யங்கள்.

ஒரு பத்ய சாகித்யத்தைப் பல்வேறு ராகங்களில் பாட முடியும். உதாரணமாக, திருப்புகழ் துதிப் பாடல் ஒன்றை நானுவித ராகங்களில் சாகித்ய

பாவத்திற்கு முரணின்றிப் பாட முடியும். ஆனால் கத்ய சாகித்யத்தில் ஒம்மாதிரியான ராக மாறு பாட்டிற்கு இடமில்லை. இதில் சாகித்ய அட்சரங்கள் இசையுடன் இழைத்துப் பின்னப்பட்டுள்ளன; பிரித்தெடுக்க முடியாத நெசவாகி விடுகின்றன. உதாரணமாக "விடமு ஸேயவே" என்ற கிருதியின் தாதுவையும் மாதுவையும் நோக்கலாம்.

சரணங்களில் வெவ்வேறு தாதுக்களைக் கொண்ட கிருதிகள்

இலக்ஷ்யப் பிரமாணமான கனராக பஞ்சரத்னத்தைத் தவிர, பல வேறு தாதுக்களையுடைய சரணங்கள் கொண்ட கீழ்க்கண்ட கிருதிகளையும் தியாகராஜர் இயற்றியுள்ளார்:

(1) "நீவுவினா ஸுகமு கான" தோடி ராகம்
(2) "ஸ்ரீ ரகுவர ஸுகுணாலய" பைரவி ராகம்
(3) "ப்ரோசேவாரெவரே" ஸ்ரீ ரஞ்ஜனி ராகம்
(4) "எந்துகு நிர்தய" ஹரிகாம்போதி ராகம்
(5) "ஸ்ரீ ரகுவராப்ரமேய" காம்போதி ராகம்
(6) "நாமொரலனுவினி" ஆரபி ராகம்
(7) "நீ பத பங்கஜமுல" பேகட ராகம்
(8) "மாரவகுரா நவ" தேவகாந்தாரி ராகம்

இந்தக் கீர்த்தனங்கள் ஒவ்வொன்றிலும் அந்த அந்த ராகத்துக்குரிய லக்ஷணங்களின் அடிப்படையான இசைத் தத்துவம் தெளிவாகப் புலனாகிறது.

காலத்தையொட்டிய பாகுபாடு

தியாகராஜரின் உருப்படிகளை (1) ஆரம்ப காலத்தில், (2) மத்திய காலத்தில், (3) பிற்காலத்தில் இயற்றப்பட்டவை என்ற வகையிலும் பாகுபடுத்தலாம்.

(1) முப்பது வயதுவரை இயற்றப்பட்டவைகளை ஆரம்ப கால கிருதிகள் எனக்கொள்ளலாம்.

அவை பெரும்பாலும் திவ்ய நாமக் கீர்த்தனங்களும் ஒரே சரணமுள்ள கிருதிகளும். சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் எளிய இசை உருவில் அமைந்துள்ளன. அவற்றுள் பலவற்றின் சாகித்யங்கள் தோத்திரங்களே. பெரும்பாலும் அவரது தியான மூர்த்தியான ஸ்ரீ ராமரைத் துதித்துப் பாடப்பட்டவை. பழக்கமான ராகங்களில் அவை அமைந்துள்ளன. உதாரணமாக:

''ப்ருந்தாவன லோல	தோடி ராகம்
''சுஜன ஜீவன''	கமாஸ் ராகம்

(2) முப்பது முதல் 60 வயதிற்குள் இயற்றப்பட்டவை மத்திய காலப் பாடல்கள்.

இந்தத் தொகுப்பில் அபூர்வராகக் கிருதிகளும் இசைவளம் நிரம்பிய கிருதிகளும் காணப்படுகின்றன. மணி மணியான சங்கதிகள், இலக்கியப் பொலிவு, கவிதைக் கற்பனைகள் இவை யாவும் கொண்டவை.

கனராக பஞ்சரத்னமும் மற்றும் கீழே கண்டுள்ள கிருதிகளும் உதாரணங்களாம்:

"ஜானகி ரமண"	சுத்த ஸீமந்தினி ராகம்
"மனஸா ஸ்வாதீன"	சங்கராபரண ராகம்
"கொலுவமரெகதா"	தோடி ராகம்
"நாயெட வஞ்சன"	நபோமணி ராகம்

(3) பிற்காலப் பாடல்கள் சங்கீதப் பக்குவமும் சாகித்ய முதிர்ச்சியும் கொண்டவை. நுணுக்கமாகக் கடைந்தெடுத்து நன்கு மெருகேற்றப்பட்டவை. உதாரணமாக :

"எவரி மாட"	காம்போதி ராகம்
"ஓ ரங்க ஸாயி"	காம்போதி ராகம்
"தாரினி தெலுஸுகொண்டி"	சுத்தஸாவேரி ராகம்
"நா ஜீவாதார"	பிலஹரி ராகம்

சில பாடல்களின் உற்பத்தி வரலாறு

"வினராதா நா மனவி"

பக்தர்களின் பெருமையை இறைவன் வெளிப்படுத்தும் வழிகள் அவனுக்கே உரியன. (தேவகாந்தாரி ராகத்தில்) "வினராதா நா மனவி" என்ற கிருதி எழுந்த வரலாறு இதற்கொரு எடுத்துக் காட்டு.

சித்திரை உற்சவத்தின் போது தியாகராஜர் ஸ்ரீரங்கம் செல்ல நேர்ந்தது. தெற்குச் சித்திரை வீதியிலுள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்தார். தெற்குச் சித்திரை வீதியும் மேற்குச் சித்திரை வீதியும் சேரும் முகனையிலுள்ள தேர்வடம் போக்கிச் சந்தில் அவ்வீடு இருந்தது. தற்போது அவ்வீட்டின்

இலக்கம் 86. பொற்குதிரை வாகனத்தில் சுவாமி ஊர்வலம் சற்றுத் தொலைவில் வந்துகொண்டிருந்த போது வீட்டு வாயிலில் நின்று கொண்டு பார்த்த தியாகராஜர் மனம் நெகிழ்ந்து "ராஜு வெடலெ ஜூதாமு ராரே" என்ற பாடலைப் பொழிந்தார். பதிறுறு தேர்ந்த சுமையாளர் தூக்கிச் செல்ல, வாகனம் ஜாம் ஜாம் என்று மூலை திரும்பியது. தியாகராஜர் சுவாமியருகில் சென்று வைபோக ரங்கனின் தரிசனம் பெற முயன்றார்; ஆனால் திருப்பத்தில் திமுதிமுவென இடித்துத் தள்ளிச் சென்ற கும்பல் சுவாமியருகில் சென்று தரிசிக்க முடியாமற் போய்விட்டது. ஏமாற்றத்துடன் நின்றுவிட்டார்.

இதற்கிடையில் திருப்பத்தைத் தாண்டிய ஊர்வலம் திடீரென்று நின்றுவிட்டது. சுமையாட்கள் மேலே நடக்க முடியாமல் உடல் மரத்துப் போயினர். (இப்படி நடந்தால் ஏதோ திருஷ்டி தோஷம் என்று அதைப் போக்கப் பரிகாரம் தேடுவது வழக்கம்). திருஷ்டி கழிக்க செயல்பட்டனர். அதை அடுத்து, சுவாமியின் முன் சென்றுகொண்டிருந்த தேவதாசிகளையும் ராஜநாசிகளையும் சுவாமியை சமாதானப்படுத்தும் வகையில் நாட்டியமாடப் பணித்தனர். அப்படியும் சுமையாட்கள் மேலே நகர உணர்வு பெற்றதாகத் தெரியவில்லை. சிறிது நேரம் சென்றபின், கோவில் குருக்கள் ஒருவர் மீது ஆவேசம் வந்து அவர் கூறினார்: "பரம பக்தர் ஒருவர் அங்கே நின்றுகொண்டிருக்கிறார். (திருப்பத்தைச் சுட்டிக் காட்

டிய வண்ணம்). அவரை இங்கு கொணர்ந்து சுவாமி தரிசனம் செய்வித்தால் ஊர்வலம் நகரும்". உடனே கோவில் அதிகாரிகளும் பட்டர்களும் ஒன்ருகச் சென்று தியாகராஜரைக் கண்டுபிடித்து நடந்த விஷயங்களைத் தெரிவித்தனர். தியாக ராஜர் மனம் நெகிழ்ந்து கண் கலங்கி சுவாமி அருகில் சென்று இப்போது பிரபலமாயுள்ள "வினராதா நா மனவி" என்ற பாடலைப் பாடினுர். ("எனது வேண்டுகோளைக் கேட்கலாகாதா?" என்ற அடியில் வேண்டுகோளானது சுவாமி புறப்பட வேண்டும் என்பதே). இதன் அனுபல்லவியில் "காந்த காந்தலெல்ல காமிஞ்சி பிலசிதே" (தேவ தாசிகள் நாட்டியமாடி ரங்கநாதரை அழைக்கின்றனர்; அவர்களது முயற்சி பலிக்கவில்லை); "ராஜஸதுலு ஜூசி ரம்மனி பிலசிதே" (ராஜ தாசிகளும் அதன் பின் நடனமாடி ரங்கநாதரை வாருமாறு கெஞ்சுகின்றனர்; அவர்கள் முயற்சியும் வீணுயிற்று) என்று கூறுகிருர். "வினராதா" என்ற இப் பாடல் முடிந்து தீபாராதனை நடந்ததும் அனைவரும் அக மகிழ சுவாமி கிளம்பிற்று.

இதன்பின் மற்ருெருநாள் தியாகராஜர் கோவிலுக்கு அழைத்து வரப்பட்டார். அன்று மூல விக்ரகத்திற்கு முத்தங்கி சேவை. முத்துக்களால் அலங்கரிக்கப்பட்டுத் திகழ்ந்த சுவாமியைக் கண்டு தியாகராஜர் பரவசமுற்று "ஓ ரங்கஸாயி" (காம்போதி ராகம்—ஆதி தாளம்) என்ற பாட்டைப் பொழிந்தார். இப் பாடலில் இந் நிகழ்ச்சியைப்

பற்றிய அரிய சான்றுகள் தோன்றுகின்றன.

" நனுபாலிம்ப "

அவரது பெண்ணின் திருமணத்தின்போது பல சீடர்கள் நன்கொடைகள் ஓதியிட்டனர். வாலாஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதர், பிரசன்னமான கோதண்டராம மூர்த்தியின் திருவுருவப் படத்தைப் பரிசாகக் கொண்டுவந்தார். (பல்லவி எல்லய்யர் தீட்டித் தந்த ஓவியம் அது). அக்காலத்தில் ரயில் கிடையாது. சீடர் படத்தைத் தோள்மீது சுமந்துகொண்டு வாலாஜாப் பேட்டையிலிருந்து திருவையாற்றுக்கு நடந்தே வந்தார். மனோரஞ்சிதமான அப்படத்தைக் கண்ணுற்றதும் தியாகராஜர் " நனுபாலிம்ப " என்ற மோகன ராகப் பாட்டைப் பொழிந்தார். இப் பாடலின் சரணம் முழுவதும் சித்திரத்தின் அழகைத்தான் வர்ணிக்கிறது. பல்லவியில் கேட்கிறார்: " என்னைப் பரிபாலிக்குமாறு, பிரபுவே, நெடு தூரம் கால்நடையாய் வந்தீர் ?"

இப் பாடலின் சாகித்யத்திற்குள் ஒரு தனிப் பொருளும் தொக்கி நிற்கிறது. தமையன் காவிரி ஆற்றில் வீசி யெறிந்த ராம விக்ரகம் மீண்டும் கிடைத்துவிட்டபோதிலும் அந் நிகழ்ச்சியின் நினைவு மனத்தை உறுத்திற்று. இது நடந்து பல ஆண்டுகள் கழிந்தபின் ராமர் படம் வந்தபோது அதை இறைவனின் அருளாகவே மகிழ்வுடன் வரவேற்றார். அன்றுமுதல் ராம விக்ரகம், படம் இரண்டிற்கும் பூஜை செய்யலானார். அப்

பாடத்தை இன்றும் திருவையாற்றிலே காணலாம்.
" சிந்திஸ்துன்னாடே "

ஒரு சமயம் ஸப்தஸ்தான உற்சவத்தையொட்டி திருவையாறு பிரணதார்த்திஹர ஸ்வாமி ஆலயத்தில் யாத்ரீகர் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். திருவையாற்றின் தனிப் பெருமையான வருடாந்திர உற்சவம் இது[1]. வருடம் தவறாமல் தியாகராஜர் ஊர்வலத்தில் தம் பஜனை கோஷ்டிக்குத் தலைமை வகித்துச் செல்வார். அவரது பஜனையில் யதிகளும், வித்வான்களும், பாடகர்களும், வாக்கேயகாரர்களும் கலந்துகொள்வர். தியாகராஜர், 'பூலோக நாரதர்' என்று அழைக்கப்படலானார். ஊர்வலம் வழியிலுள்ள பிரபல ஆலயங்களின் முன் நின்றுவிட்டுத் திரும்பிவர 24 மணி நேரத்திற்கு மேல் ஆகும்.

அன்று திருவையாற்றுக் கோயில் நிரம்பி, கண்ணுக்கெட்டியவரை எங்கும் ஜன சமுத்திரம்; எல்

[1] திருவையாறு, திருப்பழனம், திருவேதிக்குடி, திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் (தில்லஸ்தானம்) ஆகிய ஏழு ஸ்தலங்களிலுள்ள சிவபிரானும் புறப்பாடாகி, அலங்கரிக்கப்பட்ட கண்ணாடிப் பல்லக்குகளில் பவனி வருதல்.

தலைமைப் பல்லக்கு திருவையாற்றிலிருந்து காலையில் புறப்படும்; போகும் வழியில் அந்தந்த ஊர்ப் பல்லக்குகள் வந்து சேர்ந்துகொள்ளும். கொடிகள், மாவிலை-வாழைமரத் தோரணங்கள் முதலியவற்றால் வீதிகள் அலங்காரம் செய்யப்பட்டிருக்கும். ஏராளமான பஜனை கோஷ்டியினர் ஊர்வலத்துடன் செல்வார்கள். வழி நெடுக, கடைக்காரர்களும் சஞ்சாரிகளும் ஊர்வ

லோரும் பக்திப் பெருக்குடன் துதிப்பாடல்களைப் பாடியவண்ணம் இருப்பார்கள். இந்த அமோக மான காட்சியைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் பெருகிக் கற்பனையில் திளைத்து "சிந்திஸ்துன்னுடே" (முகாரி ராகம்—ஆதி தாளம்) என்ற பாட்டைப் படைத்தார். பாட்டின் கருத்து இதுதான்: "மக்கள் அனைவரும் பஜனையில் ஆழ்ந்திருப்பதைக் கண்ட யமன் தனக்கு இனி வேலை இல்லையே, மானிடர் அனைவரும் நேராகத் தாமே சுவர்க்கத்தை அடைந்துவிடுவார்களே, என்ற தீவிர சிந்தனையில் மூழ்கிவிட்டான்." சாமானிய மனிதன் கூட யமன் கையில் அகப்படமாட்டான்; ஏனெனில் அவனும் தியாகராஜரின் கீர்த்தனங்களைப் பாடிப் பொழுதைக் கழிக்கிறான் என்று யமன் பயந்தானும்!

லத்தில் செல்லும் யாத்ரீகர்களுக்கு பழம் பானக வகைகள், தங்க இடம் ஆகியன வழங்க போட்டி போட்டுக்கொண்டு முன் வருவார்கள். ஏழு பல்லக்குகளின் மாபெரும் ஊர்வலம், லட்சத்திற்கு மேற்பட்ட பக்தர் திரளுடன் மறுநாள் காலை திருவையாறு நுழைவது கண்கொள்ளாக் காட்சி. பஜனையை நடாத்திச் செல்லும் தியாகராஜர் பகல், இரவு நேரங்களின் வேளைகளுக்கு உகந்த கிருதிகளை வழி நெடுகப் பாடிச் செல்வார். மகா வைத்தியநாத அய்யரும் பட்டிணம் சுப்பிரமணிய அய்யரும் தங்கள் வாழ்நாளில் ஸப்தஸ்தான உற்சவ பஜனையில் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

ஏழு ஆலயங்களைத் தொட்டுச் செல்லும் பயணத்தின்போது குறுக்கே ஆறுகளைத் தாண்டிச் செல்லவேண்டும். ஆற்றில் வெள்ளம் வர நேர்ந்தால், பல்லக்கு தூக்குபவர்கள் பல்லக்குகளை தோளிலிருந்து இறக்காமலேயே லாவகமாக ஆற்றில் நீந்தி அடுத்த கரையை அடைவார்கள்.

"நிதி சால ஸுகமா"

தமது சீடர் தியாகராஜரைக் குறித்து ஸொண்டி வெங்கடரமணய்யா பெருமிதம் கொண்டிருந்தார். ஒரு நாள் திருவையாற்றில் வித்வான்களின் சபை கூட்டி, தியாகராஜரை அவர்கள் முன் தமது பாடல்கள் சில பாடும்படி பணித்தார். தியாகராஜர் "தொருகுநா இது வண்டி ஸேவ" என்ற பிலஹரி ராக —ஆதி தாளக் கிருதியை அன்றைய தினம் சிறப்பாகப் பாடினார். மூன்றும் சரணத்தில் "காமிதபல நாயகியௌளீத" என்ற கருத்துள்ள அடியில் சிந்தனையைத் தட்டி எழுப்பும் நிரவல் விரித்து அதைத் தொடர்ந்து வரிசை வரிசையாக கற்பனை ஸ்வரங்களை அடுக்கினார். குருவும், குழுமியிருந்த வித்வான்களும் பரவசமடைந்தனர். கச்சேரி முடியும் தருவாயில் ஸொண்டி வெங்கடரமணய்யா தமது சீடனின் திறனைப் புகழும் வகையில் "தொருகுநா இது வண்டி சிஷ்யுடு?" (கிடைக்குமா இவனைப்போல் சீடன்?) என்றுரைத்தார். இவ்வாறு கூறி, தஞ்சாவூர் மகாராஜாவிடமிருந்து தாம் பெற்ற சில விலையுயர்ந்த பரிசுகளை தியாகராஜருக்கு வழங்கினார்.

பின்னொரு சமயம் தியாகராஜர், ஸொண்டி வெங்கடரமணய்யாவின் தந்தையும் தஞ்சை ராஜ சபையில் முக்கிய ஆஸ்தான வித்வானுமாகிய ஸொண்டி வெங்கடசுப்பய்யாவின் முன்னிலையில் பாட ஏற்பாடாயிற்று. எல்லா சமஸ்தான வித்வான்களும் தஞ்சாவூரில் இருக்கக்கூடிய தினம் ஒன்றில் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. தியாக

ராஜரின் பாட்டை ஒன்று அல்லது இரண்டுமணி நேரம் கேட்டபின் வித்வான்கள் அன்றிரவு அரண்மனையில் நடக்கும் இசை அரங்கிற்குச் செல்ல வேண்டும் என்பது ஏற்பாடு.

வித்வான்கள் அன்றிரவே அரண்மனைக்குச் செல்லவேண்டும் என்பது தியாகராஜருக்குத் தெரியாது. தமது குருவினது தந்தையின் முன்னிலையில் தஞ்சை சங்கீத சிகாமணிகள் நடுவில் தம்மைப் பாட அழைத்திருப்பதை நினைந்து பெருமிதம் கொண்டார். காம்போதி ராகத்தை எடுத்துக் கொண்டு விரிவாக ஆலாபனம் செய்தார். அதைத் தொடர்ந்து "மரி மரி நின்னே மொரலிடனி" என்ற புலமை மிக்க ஆதி தாளக் கிருதியைப் பாடினார். ஆலாபனம், தாளம், பாட்டு, நிரவல், கற்பனை ஸ்வரங்கள் எல்லாம் சேர்ந்து நிகழ்ச்சி எட்டு மணி நேரம் நடந்தது. சபையிலிருந்த வித்வான்கள், 'எப்படி இவ்வளவு குறுகிய பயிற்சியில் உயர்ந்த காயகனாகவும் வாக்கேயகாரனாகவும் தியாகராஜரால் பரிமளிக்க முடிந்தது?' என வியப்பெய்தினர். தஞ்சை அரண்மனையில் அன்று இரவு தாங்கள் ஆஜராக இருக்கவேண்டும் என்பதை சமஸ்தான வித்வான்கள் மறந்தே போய்விட்டனர். மறுநாள் அவர்கள் அரண்மனைக்குச் சென்று தாங்கள் வர முடியாமல் கடமை தவறியதன் காரணத்தை மகாராஜாவிடம் தெரிவித்து அன்றிரவு அவர்கள் அனைவரும் உண்மையில் 'கான ரஸாப்தி'யில் (இசை இன்பக்கடலில்) மூழ்கியே கிடந்தனர் என்று முடித்தனர். ஸொண்டி வெங்கடசுப்பய்யாவும்

இப் புகழுரையில் சேர்ந்துகொண்டு, தியாகராஜரைத் தமது அருகில் அமர்த்தி சமஸ்தானத்திலிருந்து தாம் பெற்ற விலையுயர்ந்த சில பரிசுகளை அவருக்கு அளித்ததாக அரசரிடம் தெரிவித்தார். தியாகராஜரின் சங்கீதத்தைத் தாமும் கேட்க வேண்டும் என்ற ஆவல் அப்போதுதான் சரபோஜி மகாராஜாவின் மனதில் உதித்தது.

அரண்மனை அதிகாரிகள் சிலர் தியாகராஜர் இல்லம் சென்று சரபோஜி மன்னர் அவரது பாட்டைக் கேட்க விருப்பம் கொண்டுள்ளதைத் தெரிவித்தனர். சாதாரணமாக, தியாகராஜர் இந்த அழைப்புக்கு இணங்கியிருப்பார். அரண்மனைக்கு அவர் புதியவர் அல்ல. சிறுவனாக இருக்கையில், அவரது தந்தை ராமப் பிரும்மம் துலஜாஜி அரசரின் சபையில் ராமாயணப் பிரவசனம் நிகழ்த்தும் போதெல்லாம் அரண்மனைக்குக் கூடவே சென்றிருக்கிறார். ராம நவமி விழாவின்போது ராமப் பிரும்மம் ஆறு காண்டங்களையும் வாசிப்பதுண்டு. ஆனால் இப்போது தியாகராஜர் மனங்கலங்கியதின் காரணம் என்னவென்றால் 'அவர் அரண்மனை செல்லும்போது மகாராஜாவைப் போற்றி ஓரிரு பாடல்கள் இயற்றி எடுத்துவரவேண்டும்' என்று குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டதுதான். போதாக் குறைக்கு அதிகாரிகள் தியாகராஜருக்கு மன்னர் 50 ஏகரா நிலமும் ஒரு பெரிய தங்கப் பாளமும் வழங்க உத்தேசித்திருப்பதாகச் சொன்னதும் அவர்களது பேச்சு விரசமாய் இருந்தது.

கோபம் மேலிட்ட தியாகராஜர் "நீதி சால ஸுகமா" என்ற கல்யாணி ராகப் பாடலிலே வினுவரிசை யாகவே தகுந்த விடைகொடுத்தார். பாடல் முழு வதும் தமது மனதை நோக்கித் தாமே கேட்கும் கேள்விகள்: "ஏ, மனமே! ஏமாற்ருதே! உண்மை பேசு. சுகம் அடைய எது வழி? ராமரைப் புகழ் வதா அல்லது மமதைமிக்க மனிதரைப் புகழ் வதா?" இந்த இன்னிசை மறுமொழியை அரண் மனை அதிகாரிகள் எதிர்பார்க்கவில்லை. தடுமாற்றத் துடன் திரும்பிவந்து அரசரிடம் நடந்ததைத் தெரிவித்தனர்.

இச் சம்பவம் சுமார் 1802-ல், அதாவது சரபோஜி பட்டத்திற்கு வந்து மூன்று ஆண்டுகளுக்குப்பின், நிகழ்ந்தது. அவர் அரியாசனம் ஏறியபோது கிழக்கிந்திய கம்பெனியார் ஆட்சி உரிமையைப் பறித்துக் கொண்டுவிட்டதால் அவர் பெயரளவி லேயே மன்னராக இருந்தார். தியாகராஜரின் கபடமற்ற மறுப்பு மன்னரின் மனதில் தைத்தது. தம் கையாட்கள் இருவரைக் குதிரைமீது அனுப் பித் தியாகராஜரைக் கொண்டுவரும்படி ஆணை யிட்டார். அவ்விருவரும் அரண்மனையை விட்டுப் புறப்பட்ட க்ஷணமே கொடிய வயிற்று நோவால் அரசர் வருந்தலானர். அரண்மனை வைத்தியர்கள் எவராலும் வலியைப் போக்க முடியவில்லை. ஜோதி டர்கள் அழைக்கப்பட்டனர். அவர்களுள் ஒருவர், யாரோ ஒரு மகானை அவமதித்ததால் இந்த நிலை விளைந்திருக்கக் கூடும் என்று நிமித்தம் கூறினர் உடனே சரபோஜி மற்றும் இரு நம்பகமான

ஆட்களைக் கூப்பிட்டு, முன் சென்ற இரு தூது வர்கள் தியாகராஜரை அணுகவேண்டாம் என்று கட்டளை பிறப்பித்தார். இவ்விருவரும் வாயு வேக மாகக் குதிரைகளைச் செலுத்தி முன் அனுப்பப் பட்டவர் தியாகராஜரின் இல்லத்தை அடையாமல் தடுத்துவிட்டனர். நால்வரும் தஞ்சாவூரை நோக் கித் திரும்பிய கணமே சரபோஜியின் வேதனை அகன்றது. கடவுளை வாழ்த்தினார். தியாகராஜரின் பெருமையை உணர்ந்தார். பின்னொரு சமயம் திருவையாறு சென்று தியாகராஜரைக் கண்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அதன்பின் இரு வரும் நெருங்கிய நண்பர்களாயினர். தியாக ராஜரின் ஏகாதசி பஜனைகளுக்கு, சரபோஜி, அவ ரது மருமகன் மோதி ராவ், மற்றும் ஸ்திரீகள் உள்பட அரசகுடும்பத்தினர் சென்றனர். அவர்கள் இரவு முழுவதும் கல்யாண மஹாலில் தங்கி யிருப்பர். இந்த அரண்மனை தியாகராஜர் இல்லத் தின் பின்புறம் இருக்கிறது; அங்கிருந்தபடியே தியாகராஜரும் சீடர்களும் பாடும் துதிப் பாடல் களைக் கேட்கலாம். ஏகாதசி பஜனை முடிந்ததும் மறுநாள் காலை அரச குடும்பத்தினருள் சிலர் குதிரைமீதும், மற்றவர் வண்டிகளிலும் தஞ்சாவூர் திரும்புவர்.

அக்காலத்தில் வாக்கேயகாரர்கள் அரசர்களைப் போற்றிப் பாடல் இயற்றுவது வழக்கில் இருந்தது. பல்லவி கோபாலய்யர், தோடி ராகத்தில் ஆதி தாளத்தில் இயற்றிய "கனகாங்கி" வர்ணம் சரபோஜியைப் புகழ்ந்து புனைந்தது. சரபேந்திர

பூபாலக் குறவஞ்சி என்னும் நாட்டிய நாடகமும் சரபோஜியைக் கௌரவித்து எழுதியதாகும். ஆனால் தியாகராஜரோ தமது கலைத்திறனை இறைவனுக்கே உரிதாக்கி, அவனைத் துதித்தல் அல்லது ஆழ்ந்து சிந்தனைக்கே அன்றி நர ஸ்துதிக்காக அதனைப் பயன்படுத்தலாகாது என்று கருதினார். "நிதி சால ஸுகமா" என்ற பாடலில் தியாகராஜர் மன்னருக்கு மறுமொழி அளித்தபோது அவரது அன்னையார் அவர் நெஞ்சுறுதியைப் பாராட்டினார். தந்தை அப்போது உயிருடனில்லை; இருந்திருப்பின் அவரும் மனம் மகிழ்ந்திருப்பார். "நிதி சால ஸுகமா" நிகழ்ச்சியால் தியாகராஜர் மக்கள் மதிப்பில் உயர்ந்தார். அன்று முதல் பலர் அவரை மகா புருஷராக மதித்து வணங்கினர். ஆனால் உலகியலில் உழன்ற தமையன் மட்டும் அரச அழைப்பை உதறித் தள்ளியதை நினைத்து மனம் வருந்தினார்.

எப்படியேனும் தியாகராஜருக்குத் தெரியாமலே கூட அவருக்கு உதவி அளிக்கவேண்டும் என்ற விருப்பம் சரபோஜி மன்னர் மனதில் குடிகொண்டிருந்தது.

பிச்சைச் செம்பில் தங்கக்காசு

ஒரு நாள், சரபோஜி தமது உத்தியோகஸ்தர் இருவரை தியாகராஜரின் உஞ்சவிருத்தி பஜனையுடன் செல்லும் பக்தர்களோடு பக்தராய்க் கலந்து, உஞ்சவிருத்திப் பாத்திரத்தில் சில பொற்காசு

களைப் போட்டுவிடும்படி பணித்தார். அவ்வாறே அவ்விருவரும் தியாகராஜரின் பின்னால் சென்று, சிறிது நேரத்திற்கொருமுறை அவர் அறியாமல் பொற்காசுகளை ஒன்றன் பின் ஒன்றாகப் போட்டனர். சில சீடர்கள் இதைக் கவனித்தும், அவர்கள் அரண்மனையைச் சேர்ந்தவர்கள் என்று தெரியுமாதலால் குறுக்கிடத் துணிவின்றி வாளா விருந்தனர். துரதிருஷ்டவசமாக, பின்னொரு முறை ஒரு காசைப் போடும்போது அது செம்பின் விளிம்பில் பட்டு கணீர் என ஒலித்து உள்ளே விழுந்தது. முன்னால் போட்ட பொற்காசுகள் அரிசிக்குள் விழுந்ததால் ஒலி எழுப்பவில்லை. இப்போது சப்தம் கேட்டதும் தியாகராஜர் என்ன விஷயம் என்று சீடர்களை வினவினார். நடந்ததை முழுவதும் சொன்னார்கள். தியாகராஜர் சீற்ற முற்று, உடனே பாத்திரத்தைக் கவிழ்த்து உள்ளிருந்தவற்றை நடுத்தெருவிலேயே கொட்டிவிட்டு உஞ்சவிருத்தி பஜனையைத் தொடர்ந்தார். பாத்திரத்திலிருந்த அரிசியும்கூட பொன்னின் சேர்க்கையால் மாசுற்றதாக எண்ணினார் போலும்.

இச்சம்பவத்திற்குப் பிறகு கூட, சரபோஜி தியாகராஜருக்கு தாம் ஏதாகிலும் ஒரு வகையில் கைங்கர்யம் புரிய அனுமதிக்கவேண்டும் என வற்புறுத்தினார். தயக்கத்துடன் தியாகராஜர் தம்மிடம் கற்க வரும் சீடர்களுள் சிலர் அரசர் செலவில் கல்யாண மஹாலில் சாப்பிட்டு வர இணங்கினார்.

"பவனுத"

ஒரு நாள் விதி வசத்தால் தியாகராஜருக்கு உணவில்லாமற் போய்விட்டது. நாள் முழுதும் பசித்திருந்தார். (இச்சம்பவம் அவரது வாழ்க்கையின் ஆரம்பப் பகுதியில் நிகழ்ந்தது). இரவு சுமார் 11-மணிக்கு தியாகராஜரைத் தேடி ஒரு கிழவர் தலையில் பெரும் சுமையுடன், ஒரு மாதும் வேலையாளும் பின் தொடர, வந்து சேர்ந்தார். அவரை வரவேற்றுத் தியாகராஜர் அவர்களுக்கு அளிக்க உணவு ஒன்றுமில்லையே என்று வருந்தினர். கிழவரோ, "கவலைப்படாதே, தியாகு! சாமான் நிறையக் கொண்டு வந்திருக்கிறேன்", என்று கூறிய வண்ணம் தம் வேலையாளை சமைக்கும்படி ஆஞ்ஞாபித்தார். சமையல் நடந்து கொண்டிருக்கும் போது கிழவரும் அவரது மனைவியும் தியாகராஜருடன் பேசிக் கொண்டிருந்தனர். உணவு தயாரானதும் ஸ்வாமிக்கு நிவேதனம் நடந்தது. பின் எல்லோரும் வயிருரச் சாப்பிட்டனர். மாது அவர்களுக்கு உணவு பரிமாறினள். சாப்பாடு முடிந்த பிறகும் அவர்கள் வெகு நேரம் தியாகராஜருடன் உரையாடிக் கொண்டிருந்தனர். விடிவதற்கு முன்னுல் விருந்தினர் தியாகராஜரை நோக்கி, "நீ பெருஞ்சிறப்பு எய்துவாய்" என்று ஆசிகூறி அவரிடம் முறையாக விடைபெற்று வெளியே சென்று மறைந்தனர். வழியனுப்ப வெளியே வந்த தியாகராஜர் அவர்களைக் காணுமல் அங்குமிங்கும் ஓடினுர்; தேடினுர்; பயனில்லை. அப்போதுதான் அவர் மனதில் உண்மை பளிச்

சிட்டது: வந்தவர் வேறு யாருமில்லை; ராமபிரானும், சீதாப்பிராட்டியும் தாம்; சமையல் செய்ததும் ஆஞ்சனேயரே, என்று முடிவுக்கு வந்தார். அன்று "பவனுத" என்ற மோகன ராகக் கிருதியை இயற்றினார். பாடலின் கருத்து இதுதான்: "என் வீடு புகுந்து என்னுடன் இடைவிடாது உரையாடிய பிரபுவே! என் மனதினில் அமர்ந்து களைப் பாறுங்கள்."

அச்சமயம் ஆஞ்சனேயரைப் போற்றிப் புனைந்த மற்றொரு பாடல் கலுகுன பத நீரஜ (பூர்ண லலித ராகம் – ஆதிதாளம்). தியாகராஜ ஆராதனை உற்சவத்தின்போது அவரது சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் காலையில் சமாதியருகில் இப்பாட்டைத் தவருமல் பாடுகிருர்கள்.

"எந்து தாகி ஞடோ" (விக்ரக வரலாறு)

ஒரு போகிப் பண்டிகைக்கு முன்னுல் தியாகராஜருக்கும் அவரது தமையனுக்குமிடையே மனஸ்தாபம் எழுந்தது; தியாகராஜரின் மீது குற்றம் ஏதும் இல்லை. போகிப் பண்டிகை கழிந்து சில நாள் சென்றபின் தியாகராஜர் உஞ்சவிருத்திக்காக வெளியே போயிருந்த சமயம் கொடிய தமையனுர் கோபாவேசத்தில் ராம விக்ரகத்தை எடுத்து திருமஞ்சன வீதியின் [1] தென்கோடியில் ஓடும் காவிரி ஆற்றில் வீசி எறிந்து விட்டார். தியாக

[1] ஆனித் திருமஞ்சன உற்சவத்தின்போது உள்ளூர்க் கோயில் சுவாமியை இந் நீர்த்துறைக்குக் கொண்டு செல்வதால் வீதிக்கு இப்பெயர் ஏற்பட்டது.

ராஜர் திரும்பியதும் விக்ரகத்தைக் காணுமற் பதறினர்.

உஞ்சவிருத்திப் பாத்திரம் அரிசியால் நிறைந்ததுமே இல்லம் திரும்புவது தியாகராஜரின் வழக்கம். உஞ்சவிருத்தி எடுக்க திருவையாற்றின் வெவ்வேறு பகுதிகளுக்கும் சுற்றுப்புறங்களுக்கும் செல்வதுண்டு. ஆனல் ஆரம்ப காலத்தில் அவ்வளவு சீடர்கள் அவருடன் போவதில்லை.

விக்ரகத்தை இழந்த அவர் "எந்து தாகினடோ" என்ற உருக்கமான பாட்டைப் பாடினர். இப்பாடலின் எடுப்பே ஆக்கியோரின் மனவேதனையைத் தெளிவாக்குகிறது. "நேனெந்து வெதகுதுரா" (கர்னடக ப்யாக்) போன்ற பாடல்களும் இவ்வமயம் இயற்றியவையே. அவருக்கு வாழ்க்கை கசந்தது. விக்ரகம் காணுமற்போன செய்தி எங்கும் பரவியது. அவர் மனம் ஆறுதல் அடைய தம்முடன் வந்து தங்கும்படி சீடர்கள் அழைத்தனர். சிவராத்திரி பூஜையின்போது தஞ்சாவூர் மானம்புச்சாவடியில் தம் சீடர் மானம்புச்சாவடி வெங்கடசுப்பையருடன் தங்கினர். பங்குனி உத்திர உற்சவத்தின் போது திருவாரூர் சென்றர். சப்தஸ்தான உற்சவத்திற்காகத் திருவையாறு திரும்பினர். தொலைந்த விக்ரகம் காவிரி ஆற்றில் எந்த இடத்திலே கிடைக்கும் என்பதன் முழு விபரங்களைக் கனவிலே கண்டார். ஓடோடிச் சென்று தேடியபோது கனவில்கண்ட அதே இடத்தில் கண்டுபிடித்தார். முதலில் விக்ரகம் அகப்பட்டது.

அதன் பிறகு திருவாசியை அருகில் மற்ருேரிடத்தில் கண்டார். விக்ரகம் கிடைத்ததும் மகிழ்ச்சியே உருவானர்; ஆனந்த பரவசத்துடன் இல்லம் திரும்பினர். இவ்விதம் சுமார் இரண்டு மாத காலம் தமது இஷ்ட மூர்த்தி இன்றி இருந்தார்.

விக்ரகம் தூக்கி எறியப்பட்ட இடத்திலே ராமுடு பாகவதர் (தியாகராஜரின் தமையனின் கொள்ளுப் பேரன்) ஒரு மகனை இழந்தார்; ஆற்றில் அதே இடத்தில் தவறி விழுந்து மூழ்கி விட்டானும்.

முத்துக்கள்

தியாகராஜரின் பாடல்களில் முத்தாக விளங்கும் அழகிய கருத்துக்களைக் கண்டெடுக்கலாம். கீழே சில உதாரணங்கள் :—

1 பக்திப் பாற்கடலில் நீந்தித் திளைப்பதே உண்மை வாழ்வு; மற்றெல்லாம் புவிக்குச் சுமையாய் அமைவதே.

("நீ பக்தி பாக்ய ஸுதா" — ஜயமனோஹரி ராகம்)

2 சங்கீத சாஸ்திர ஞானம் பரமானந்தம் எய்தவும் உதவும்.

("சங்கீத சாஸ்த்ர ஞானமு" — முகாரி ராகம்)

3 பக்தி அற்றவர்க்கும் சங்கீத சாஸ்திர ஞானம் அற்றவர்க்கும் மோட்சம் ஏது ?

("மோக்ஷமு கலதா" — சாரமதி ராகம்)

4 நித்தியானந்தம் அடைய அரசப் பெருவழி (ராம பக்தி) இருக்கும்போது, சந்து பொந்துகளைத் தேடுவானேன்?

("சக்கநிராஜ" — கரஹரப்பிரியா ராகம்)

5 ராமனின் நினைவே தூய்மை பயக்கும் புண்ய ஸ்நானம்.

("த்யானமே வரமைன" — தன்யாசி ராகம்)

6 (அனைத்துலகும் நீயே.) எங்கென்று உன்னைத் தேடிக் காண்பேன்? யாதாகத் தொழுவேன்?

("எந்து கௌகிலிந்துர" — சுத்ததேசி ராகம்)

7 திருப்பணிக்கு அவ்வப்போது பொருள் தந்து உதவாத தனவந்தன் இருந்தென்ன, செத்தென்ன?

("ஸமயமு தெலிஸி" — அஸாவேரி ராகம்)

8 சங்கீத ஞானம் பக்தியின்றி முக்தி வழியாகாது.

("சங்கீத ஞானமு பக்திவிஞ" — தன்யாசி ராகம்)

9 எவ்வளவு தான் கற்றறிந்தவனாயினும், பெரியோரின் புத்திமதியைக் கேளாதவன், பக்தர்களின் பொன்மொழியாம் அமுதத்தைப் பருகாதவன், ஞானம் பெறமாட்டான்.

("புத்தி ராது" — சங்கராபரண ராகம்)

10 ராம பக்திச் செல்வத்தைப் பெற்றவரைத் தரிசித்தல் பேரானந்தம். அதைச் சொல்லித் தெரிவிக்க முடியாது. உணரத்தான் வேண்டும்.

("ராம பக்தி சாம்ராஜ்யமு — சுத்தபங்காள ராகம்)

11 மனதை வென்றவனுக்கு மந்திரமும் தந்திரமும் எதற்காக? உடல் வேறு, 'தான்' வேறு என்றுணர்ந்ததன்பின் தவமெதற்கு?

("மனஸு ஸ்வாதீனமைன" — சங்கராபரண ராகம்)

12 அமைதியின்றி இன்பம் இல்லை. செல்வம், கல்வி, மனைவி, மக்கள் எல்லாம் இருப்பினும், ஜப தபங்கள் செய்தாலும், அமைதி ஒன்று இன்றுயின் இன்பம் என்பது இல்லை.

(" சாந்தமுலேக " — ஸாமாராகம்)